
வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 24.07.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 230 | பக்கங்கள் : 20


07
ஆட்சியை மாற்றும் இந்தியாவின் திட்டம் எப்போதோ தொடங்கியிருக்க வேண்டும்!


08
கோட்டாபயவின் வெளியேற்றமும் ரணில் விக்ரமசிங்கவின் வருகையும்


10
டலஸ் – சஜித் கூட்டுத்தோல்வி


11
வாழ்வாதாரத்தை இழந்துள்ள சந்தை மரக்கறி வியாபாரிகள்

# இரு வாரங்களுக்குள் அனைத்து கட்சி அரசு!

## பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, சு.க., மு.கா, மனோ தரப்புக்கும் அமைச்சரவையில் இடம்

கொழும்பு, ஜூலை 24

**எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அனைத்து கட்சி அரசாங்களம் நியமிக்கப்படும் என்று சிங்கள நாளேடு ஒன்றின் இணையத்தளம் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.**

**இது தொடர்பாக அந்த இணையத்தளத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:**

அனைத்து கட்சி அரசாங்கத்தை அமைத்து பாராளுமன்றத்தில் பெரும் பான்மையான கட்சிகள் மற்றும் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத் தும் நிரந்தர அமைச்சரவை ஒன்று எதிர்வரும் இரண்டு வாரங்களுக் குள் நியமிக்கப்படவுள்ளதாக அர சாங்கத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

அத்துடன் சிறிலங்கா பொது ஜன பெரமுன, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி, ரணில் விக்கிரமசிங்கவின் வெற் றிக்கு உறுதுணையாக இருந்த ரிஷாத் பதியுதீனின் கட்சி உள்ளிட்ட கட்சிகள் மற்றும் 19

### கறுப்பு ஜூலை தினத்தில்

## இன அழிப்புக்கு எதிரான தமிழ் கூட்டமைப்பு உதயம்

யாழ்ப்பாணம், ஜூலை. 24

கறுப்பு ஜூலை தினத்தில் இன அழிப்புக்கு எதிரான தமிழ்க் கூட்டமைப்பு என்ற அமைப்பு நேற்று அங்கு ரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இனப்படுகொலைக்கு பொறுப்பு கூறுமாறு செய்ய வும் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைக்கு தீர்வு காண வும் என்ற அடிப்படையில் இன அழிப்புக்கு எதிரான தமிழ்க் கூட்டமைப்பு என்ற கட்டமைப்பு அங்கு ரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதாக ஏற்பாட் டாளர்கள் தெரிவித்தனர். 19

## சட்ட கட்டமைப்புக்கு உட்பட்டே செயற்படுகின்றது பொலிஸ்!

### காலிமுகத்திடல் தாக்குதல் குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் விளக்கம்

கொழும்பு, ஜூலை 24

தொடர்ந்தும் சட்ட கட்டமைப்பிற்கு உட் பட்டே செயற்படுவதாக பொலிஸ் ஊடகப் பேச் சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் தங்கியிருந்த 19

## திட்டமிட்டவாறு நாளை பாடசாலைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை. 24

நாளை திங்கட்கிழமை தொடக்கம் பாடசாலைகள் திட்டமிட்டம்படி வாரத்தில் 3 நாள்கள் இடம்பெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று கல்வி அமைச்சு வெளியிட் டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

மாகாணக் கல்விச் செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர் கள், கோட்ட கல்வி அதிகாரிகள், உதவி கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அனைத்து அதிபர்களுக் 19

## யாழில் தனியார் பஸ்களுக்கு இ.போ.ச. எரிபொருள் வழங்காமையால் குழப்பம்!

யாழ்ப்பாணம், ஜூலை. 24

யாழ்ப்பாணத்தில் தனியார் பஸ் சேவையில் ஈடுபடும் பஸ் களுக்கு நேற்றுக் காலை முதல் இலங்கை போக்குவரத்துச் சபை யின் கோண்டாவில் சாலையில் எரிபொருள் வழங்கப்படாமை யால் குழப்ப நிலை ஏற்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் சேவை யில் ஈடுபடும் தனியார் பஸ் களுக்கு இலங்கை போக்குவரத் துச் சபையின் கோண்டோவில் டிப்போவில் டீசல் எரிபொருள் கிரமமாக வழங்கப்பட்டு வந்தது. ஆயினும் நேற்று முன் தினம் இரவு 9 மணியளவில் யாழ்ப் பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி சென்ற 57 வழித் தட இ.போ.ச பஸ்ஸின் சாரதி மற்றும் காப்பாளர் 19

## ஆளுநர்களை மாற்றுகிறார் ரணில்?

கொழும்பு, ஜூலை. 24

பல மாகாணங்களில் தற்போதுள்ள ஆளுநர்களை நீக்கி புதிய ஆளுநர்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தீர்மானித்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக் கின்றன. 19

## எரிபொருள் விநியோகத்தை உடனே துரிதப்படுத்துங்கள்!

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, ஜூலை. 24

நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோ கத்தை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்தார்.

எரிபொருள் பிரச்னை மற்றும் அதன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் பிரத மர் அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே 19

## போதையில் நின்ற பயணி தாக்கி ரயில்வே பாதுகாப்பு அதிகாரி பலி!

### கொழும்பு - யாழ் ரயிலில் சம்பவம்

கொழும்பு, ஜூலை. 24

ரயிலில் மது போதையில் பயணம் செய்த பயணி ஒருவரின் தாக்குதலுக்கு உள்ளாகி ரயில்வே பாதுகாப்பு அதிகாரி ஒருவர் ரயிலில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

கொழும்பு கோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்ற கடுகதி ரயிலில் நேற்று அதிகாலை இந்த சம்ப வம் நடந்துள்ளது.

இரண்டு பயணிகள் ரயிலுக்குள் மது அருந்தியவாறு பயணம் செய்துள்ளனர்.

இதனை ஏனைய பயணிகள் ரயிவே பாதுகாப்புப் பிரிவுக்கு தெரியப்படுத்தி யுள்ளனர்.

இதனையடுத்து ரயிவே பாதுகாப்பு அதிகாரிகள், அந்த பயணிகளை அவர் கள் பயணித்த ரயில் பெட்டியில் இருந்து வெளியில் அழைத்துச் சென்றபோது, கதவுக்கு அருகில் 19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது...!

ஜேர்மனியில் வாழும் நண்பர் ஒருவர், அங்குள்ள பொருளியல் ஆலோசனை வழங்கும் நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகின்றார். மத்திய கிழக்கு நாடுகள், ஆபிரிக்க நாடுகளுக்கு பொருளியல் ஆலோ சனை வழங்கும் தனியார் நிறுவனத்தில் பணியாற்றுவதால் பல ஆபிரிக்க தலைவர்களுடன் நெருங்கிப் பழகியவர்.

மறைந்த தமிழறிஞர் சதாவதானி கதிரவேற்பிள்ளையின் நெருங்கிய உறவினரான இவர் புலோலியூரான் சதாவதானி என்ற பெயரில் தனது முகநூல் ஊடாக ஈழத்து அரசியல் தொடர்பாக அவ்வப்போது நியாயமான கேள்விகளையும் விமர்சனங்களையும் முன்வைத்து வருவதை அவதானித்திருக்கின்றேன்.

அண்மையில் நடந்த ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அவர் முன் வைத்திருக்கும் சில கேள்விகள் இன்று ஒவ்வொரு தமிழர் மத்தியிலும் கேட்கப்படுகின்ற கேள்விகள் என்பதால் அதனை அப்படியே இன்றைய இந்தப் பத்தியில் தருவது பொருத்தமானதாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

இன்றைய இந்தப் பத்தியை அவரது எழுத்துக்களே நிரப்புகின்றன. இனி அதனை தருகின்றேன்.

'தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் சில கேள்விகள்!

சிறிலங்காவின் அதிபர் கோட்டாபய நாட்டைவிட்டுத் தப்பி ஓடியநிலையில், புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற வாக்கெடுப்பில் டலஸ் அழகப்பெருமவை ஆதரிக்கும் நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்திருந்தது.

தமிழ் மக்கள் சார்ந்து த.தே.கூட்டமைப்பு எடுத்திருந்த நிலைப்பாடு தொடர்பாகத் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து எழுப்பப்படுகின்ற சில கேள்விகளை, ஒரு ஊடகமாக த.தே. கூட்டமைப்பின் அத்தனை பாராளுமன்ற உறுப்பினர்களின் முன்பும் வைக்கின்றோம்.

தமிழ் மக்களின் சில நலன்களை அடிப்படையாக வைத்த ஒப்பந்தம் ஒன்று டலஸ் அழகப்பெருமவுடன் கைச்சாத்திடப்பட்டதாகக் கூறினீர்களே- கைச்சாத்திடப்பட்ட அந்த ஒப்பந்தம் எங்கே?

அந்த ஒப்பந்தம் ஏன் ஊடகங்களுக்கு இதுவரை காண்பிக்கப்படவில்லை?

ஏன் உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு அந்த ஒப்பந்தம் காண்பிக்கப்படவில்லை?

நீங்கள் வழமையாகக் கூறிவருகின்ற மற்றைய 'பொய்கள்' போலவே, 'தமிழ் மக்களின் சில பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு டலஸ் முன்வந்தார் என்பதும் பொய்யா?

தமிழ் மக்கள் தரப்பில் இருந்து முன்வைக்கப்பட்ட அந்தக் கோரிக்கை கள் மற்றைய இரண்டு (ரணில், அநுரகுமார) வேட்பாளர்களிடமும் முன்வைக்கப்பட்டதா?

தமிழ் மக்கள் சார்பில் உங்களால் முன்வைக்கப்பட்ட அந்தக் கோரிக்கைகளை மற்றைய இருவரும் நிராகரித்திருந்தார்களா?

அப்படி அவர்கள் நிராகரித்திருந்தால் அதனை ஏன் நீங்கள் மக்களிடம் கூறவில்லை?

அப்படி இல்லை என்றால், அந்தக் கோரிக்கையை எதற்காக டலஸ் அழகப்பெருமவிடம் மாத்திரம் கொடுத்தீர்கள்?

அதிபர் தேர்தலில் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் பல கோடி ரூபாய் பேரம் பேசப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், அது போன்ற பேரங்கள் தமிழ் தலைமைகளுடனும் பேசப்பட்டதா?

சிறிலங்காவின் அதிபர் தெரிவில் தமிழ் மக்கள் சார்பில் நீங்கள் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பாக ஏதாவது சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன், அல்லது கல்வி சார் சமூகத்துடன், துறைசார் வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து அவர்களது ஆலோசனைகளைச் செவிமடுத்திருந்தீர்களா?

சிறிலங்காவின் அதிபர் தெரிவில் யாரை ஆதரிப்பது என்று உங்கள் கட்சிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மத்தியகுழு உறுப்பினர்கள், இளைஞர் மற்றும் மகளீர் பிரிவுகளுடனாவது கலந்தாலோசனை நடத்தினீர்களா?

வெறுமனே சுமந்திரன் என்ற தனிநபரின் கபடத்தந்திரத்திற்கு முழுக் கூட்டமைப்பும் பலியாகிவிட்டது என்று கூட்டமைப்பின் ஒரு தரப்பு கூறுவது உண்மையானால், நீங்கள் எதற்காக பாராளுமன்றம் சென்றீர்கள்?

'இந்தியா சொல்லித்தான் செய்தோம்.'. 'அமெரிக்கா சொல்லித்தான் இந்த முடிவெடுத்தோம்..' என்று நீங்கள் கூறுவீர்களேயானால், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற அடையாளம் எதற்கு உங்களுக்கு?

தமிழ் மக்களின் நலன்களை விட இந்தியாவினதும், அமெரிக்காவினதும் நலன்கள்தான் உங்களுக்கு முக்கியம் என்றால், நீங்கள் இந்திய, அமெரிக்க தூதரகங்களில் பணிக்குச் செல்லலாமே?

எதற்கு தமிழ் இனத்துக்கும், தமிழ்மக்களின் விடுதலைக்காகத் தம்மை ஆகுதியாக்கிக் கொண்டவர்களுக்கும்- ஏன் உங்களுக்குமே கூட - துரோகம் செய்துகொண்டு இருக்கின்றீர்கள்?

**பின் குறிப்பு:** சிறிலங்கா தேசத்தின் வாக்கு அரசியலுக்குள் வந்துவிட்ட நீங்கள் சிறிலங்கா பாராளுமன்றில் நடைபெற்ற தேர்தலில் சிறிலங்காவுக்கான ஒரு தலைவனை தேர்ந்தெடுக்கும் ஓர் ஆயுதத்தை வாக்களித்தோ அல்லது புறக்கணித்தோ பயன்படுத்தியேயாகவேண்டும் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து இல்லை.

நீங்கள் ரணிலுக்கோ அல்லது டலஸுக்கோ அல்லது அனுரவுக்கோ வாக்களிக்க நிலைப்பாடு எடுப்பது என்ற முடிவிலும் எங்களுக்குப் பிரச்னையல்ல.

ஆனால் அந்த முடிவினை நீங்கள் எடுப்பதற்கு கடைப்பிடித்த முறைமையைத்தான் இங்கு கேள்விக்குட்படுத்துகிறோம்.

பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சித்தலைவர்கள், கட்சிப் பேச்சாளர் என்ற அதிகாரத் திமிரில் நீங்கள் மேற்கொள்கின்ற ஜனநாயக விரோத கலாசாரத்தைத்தான் இங்கு மக்கள் சார்பில் விமர்சனத்திற்கு உட்படுத்துகின்றோம்.

கட்சியின் முடிவுக்கு கட்டுப்படுகின்றோம் என்று கூறிக்கொண்டு சுமந்திரன், சம்பந்தர் என்ற இரண்டு தனி நபர்களுக்கும் பின்னால் 'மந்தைகள்' போன்று அலைந்து திரிந்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீங்கள் வெளிப்படுத்தும் உங்கள் இயலாமையைத்தான் உங்களை பிரதிநிதித்துவப் படுத்தப்படும் தமிழ் மக்களாக நாங்கள் கேள்விக்குட்படுத்துகின்றோம்.

இதுவே அவர் முன்வைத்தத கேள்விகள். கேள்விகளில் இருக்கும் நியாயத்தன்மை கருதி இதனை இங்கே தந்திருக்கின்றோம்.!

**- ஊர்க்குருவி**

# தொழிற்சங்கங்கள், ஊடகங்கள் மீதும் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படும்!

## எச்சரிக்கின்றார் சரத் பொன்சேகா எம்.பி.

கொழும்பு, ஜூலை 24

காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத் தப்பட்ட தாக்குதலுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் கண்டனம் தெரிவித்துள்ளார்

தொழிற்சங்கங்கள், ஊடகங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் பிற குழுக்கள் மீதும் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் தீர்வையே கோருவதாகத் தெரிவித்த அவர், அடக்குமுறையால் நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது என்றும் சரத் பொன்சேகா கூறினார்.

மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் இன்று உயர்வாகக் கடைப்பிடிக்கப்படுவதாக வும், அதைப் அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் சரத் பொன்சேகா சுட்டிக் காட்டினார்.

இதேவேளை, இந்த சம்ப வங்களை தனிமைப்படுத்தப் பட்ட சம்பவமாக நிராகரிக்க முடியாது என்றும் இது ஜனநாயகத்தை நசுக்குவதற்கான ஒரு படியாக இருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

இன்று போராட்டக்கார் கள் மீது தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது என்றும் நாளை தொழிற்சங்கங்கள், ஊடகங் கள், அரசியல் கட்சிகள் மற் றும் பிற குழுக்கள் மீதும் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப் படலாம் என்றும் அவர் எச்சரித்தார். (அ)

# போராட்டக்காரர்கள் மீதான தாக்குதலுக்கு பிரதமர் ரணில் மன்னிப்பு கோர வேண்டும்

## மாற்றுக்கொள்கைகளுக்கான மையம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 24

கோட்டகோகம போராட்டத் தளத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தொடர்பில் பகிரங்க மன்னிப்பை கேட்கவேண்டுமென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மாற்றுக் கொள்கைஞகளுக்கான மையம் கோரிக்கை விடுத்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள மாற்றுக்கொள்கைகளுக்கான மையம், குடிமக்கள், ஊடகங்கள் மற்றும் சட்டத்தரணிகள் மீதான 'தாக்கு தல்' குறித்து சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரியுள்ளது.

குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும். அத்துடன் அவசரகால பிரகடனத்தை திரும்பப் பெற வேண்டும் என்றும் மையம் வலியுறுத்தியுள்ளது.

போராட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலக வளாகத்தை விட்டு வெளியேற விரும்புவதைப் பகிரங்கமாக வெளிப்படுத்திய சில மணி நேரங்களுக்குப் பின்னர், புதிதாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி அதற்கு அவகாசம் அளிக்காமல், நடத்திய தாக்கு தல்கள் கொடூரமானது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று 24 மணித்தியாலங்களுக்குள்ளாகவே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதியாகவும், ஆயுதப்படைகளின் தளபதியாக வும் உள்ள விக்ரமசிங்க இந்த தாக்குதலுக்கு பொறுப்பேற்க வேண்டும் என்று மாற்றுக் கொள்கைளுக்கான மையத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை எதிர்கொள்ளும் பல நெருக்கடிகளை ஓர் அரசியல் கட்சியினால் தீர்க்க முடியாது.

அத்துடன் இதற்காக நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை நாடமுடியாது என்றும் மையம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதல் முற்றிலும் தேவையற்றது

## ஹர்ஷ டி சில்வா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை. 24

காலி முகத்திடலில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட தாக்குதல் முற்றிலும் தேவையற்றது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கண்டனம் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் பெற்றுள்ள அதிகாரமானது மக்களின் ஆணையைப் பிரதிபலிக்கவில்லை எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

நியாயமான மற்றும் அமைதியான போராட்டங்களுக்கு தான் தொடர்ந்து ஆதரவளிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இருப்பினும் போராட்டத்தை சட்டத்துக்கு புறம்பாக மாற்றுவது மற்றும் நாட்டை மேலும் சீர்குலைக்கும் வன்முறையாளர்களின் ஊடுருவலை தாம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதிக்கு உண்மையான நோக்கங்கள் இருந்தால், மார்ச் மாதத்துக்குள் தேர்தலை நடத்தி நாட்டை ஸ்திரப்படுத்த ஒருமித்த சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதன் மூலமே பாராளு மன்றம் மக்களின் ஆணையை பிரதிபலிக்கும் என்றும், மாற்றங்கள் ஒரே இரவில் நடக்காது என் றும் ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டார். (அ)

# கொரோனா நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை. 24

நாட்டில் கொரோனா தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாக சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஆகவே அத்தியாவசியமற்ற தேவைகளுக்காக ஒன்றுகூடுவதை தவிர்க்குமாறு அவர் பொதுமக்களை கேட்டுக் கொண்டார்.

நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

கடந்த நான்கு நாட்களில் முறையே 34, 62, 75 மற்றும் 57 வழக்குகள் பதிவாகியுள்ளன என்றும் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் குறிப்பிடடார்.

இதற்கு முன்னர் நாளாந்தம் 10 முதல் 20 வரையான வழக்குகள் மட் டுமே பதிவாகியதாக ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (அ)








# காலிமுகத்திடல் தாக்குதலை கண்டித்து யாழில் நேற்று போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை. 24

காலிமுகத்திடலில் இடம் பெற்ற தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் கண்டனப் போராட்டம் இன்றைய தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

"காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீதான ரணில் - ராஜபக்ஷக்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை வன்மையாக கண்டிப்போம்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காலிமுகத்திடலில் உள்ள "கோட்டா கோ கம" பகுதிக்குள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நுழைந்த முப்படையினர் மற்றும் பொலிஸார் அங்கிருந்த கொட்டகைகளை அகற்றியதுடன் போராட்டக்காரர்கள் மீதும் கடுமையான தாக்குதலை மேற்கொண்டனர்.

குறித்த சம்பவத்தை எதிர்த்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (அ)



## கறுப்பு ஜூலை நினைவேந்தல் சுமந்திரன் எம்.பி. தலைமையில்

யாழ்ப்பாணம், ஜூலை. 24

கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு வடமராட்சி - மடத்தடி பகுதியில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அலுவலகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமராட்சி கிளையின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், வடமராட்சி - மடத்தடி பகுதியில் உள்ள அலுவலகத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் வடமராட்சி கிளை உறுப்பினர்கள் பங்குபற்றி தமது கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்தினர். (அ-02)

## 15 எம்.பிக்களுடன் மொட்டிலிருந்து வெளியேறுகின்றார் டலஸ் எம்.பி.?

கொழும்பு, ஜூலை. 24

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து 15 பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளியேற தயாராகியுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமையில் அவர்கள் சுயாதீனமாகச் செயற்படுவார்கள் என தெரியவருகின்றது.

ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக பாராளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பின்போது, டலஸ் அழகப்பெரும போட்டியிட்டார். எனினும், ரணில் விக்கிரமசிங்கவுக்கே மொட்டு கட்சி ஆதரவு வழங்கியது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே டலஸ் அணி தனி வழி செல்ல முடிவெடுத்துள்ளது. (அ)

## பாராளுமன்றத்தை நாளை கூட்டுங்கள்!

### ஐக்கிய மக்கள் சக்தி பிரதமரிடம் கோரிக்கை



கொழும்பு, ஜூலை. 24

நாடாளுமன்றத்தை நாளை கூட்டுமாறு பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் ஐக்கிய மக் கள் சக்தி கோரிக்கை விடுத்துள் ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் இடம்பெற்ற நிகழ்வுகள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் விவாதம் நடத்துமாறு பிரதமரிடம் கோரப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி பிரதம அமைப் பாளர், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இது தொடர்பான கோரிக்கையை பிரதமரிடம் முன்வைத்துள்ளார். (அ)

# அரசாங்கம் மேற்கொள்ளும் நல்ல பணிகளுக்கு ஆதரவு

### சஜித் பிரேமதாஸ கூறுகிறார்



**கொழும்பு, ஜூலை. 24**

**"அரசு மேற்கொள்ளும் நல்ல பணிகளில் எந் நிலையிலும் பின் வாங்காது எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாங்கள் எப்போதும் ஆதரவை வழங்குவோம்."**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

இதேவேளை, காலிமுகத்திடலில் நிகழ்த்தப்பட்ட அரச பயங்கரவாதச் செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிலாளர் சங்கங்களின் தலைவர்களின் ஒன்றுகூடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் 69 இலட்சம் மக்கள் ஆணை பெற்ற முன்னாள் ஜனாதிபதி கூட மக்கள் கருத்துக்குப் பணிந்து நாட்டை விட்டு ஓட வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனை இந்நாட்டின் அனைத்து அரசியல்வாதிகளும் புரிந்து கொள்வது மிகவும் பொருத்தமானது.

பின்னர் பாராளுமன்றத்தில் ஒரு வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதி நியமிக்கப்பட்டார். இந்நியமனம் 22 மில்லியன் மக்களின் விருப்பத்தின் பிரகாரமின்றி மாறாக கோட்டாபய ராஜபக்ஷவுக்குச் சாதகமான தரப்பால் மேற்கொள்ளப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியாக நாங்கள் மக்கள் கருத்துக்குப் பணிந்து செயற்பட்டோம். 225 பேரும் ஒன்றே என்ற சமூகக் கருத்து இல்லாதொழிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் அரசு மேற்கொள்ளும் நல்ல பணிகளில் எந்நிலையிலும் பின்வாங்காது எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாங்கள் எப்போதும் ஆதரவை வழங்குவோம் - என்றார். (அ)

# எரிபொருளுக்காக வாகன இலக்கத் தகடுகள் மாற்றினால் 3 மாதங்கள் சிறைத் தண்டனை!

கொழும்பு, ஜூலை. 24

எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக வாகன இலக்கத் தகடுகளை மாற்றி மோசடியில் ஈடுபடுவது உறுதி செய்யப்பட்டால் அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள செய்தி அறிக்கை வருமாறு:

எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக வாகன இலக்கத் தகடுகளை மாற்றுவது குறித்து தெரிய வந்தால், குறித்த நபருக்கு 20,000 ரூபா அபராதம் அல்லது மூன்று மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று பொலிஸ் தலைமையகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த குற்றத்திற்காக வாகனத்தின் உரிமையாளரை கைது செய்ய முடியும். பின்னர் குற்றத்திற்காக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதன் மூலம் இந்த தண்டனையை வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1984 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டம், 2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மோட்டார் வாகன வாகன சட்ட திருத்தத்திற்கு அமைவாக முதல் தடவையாக இந்த குற்றத்தில் ஈடுபட்டவர்களுக்கு 15,000 ரூபாய்க்கு குறையாத மற்றும் 20,000 ரூபாய்க்கு மேற்படாத அபராதம் அல்லது மூன்று மாத கால சிறைத்தண்டனை விதிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

மேலும், இதே குற்றச்சாட்டை இரண்டாவது முறை அல்லது அதற்கு மேல் மேற்கொள்ளும் நபருக்கு 30,000 ரூபாய்க்கு குறையாத ஆனால் 50,000 ரூபாய்க்கு மேற்படாத அபராதம் அல்லது மூன்று மாத கால சிறைத்தண்டனை விதிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

வாகன இலக்கத் தகடுகளுக்கு அமைய எரிபொருள் விநியோகிக்கப்படும் முறை கடந்த 21ஆம் திகதி ஆரம்ப மானது. அந்த சந்தர்ப்பத்தில் சிலர் வாகன இலக்கத் தகடுகளை மாற்றி எரிபொருட்களை பெற்றுக் கொள்வதற்காக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வருகை தந்தமை குறித்து சமூக ஊடகங்களில் காணக்கூடியதாக இருந்தது. (அ)

# ஜப்பானின் நிறுவனத்திடம் லஞ்சம் கோரினாரா நிமல்?

## மூவரடங்கிய விசாரணைக் குழு அமைப்பு

கொழும்பு, ஜூலை. 24

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் விசாரணை ஒன்றிற்காக மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானின் தைசே நிறுவனத்திடம் இருந்து அமைச்சரவை அமைச்சர் ஒருவர் இலஞ்சம் கேட்டதாக சமூக ஊடகங்கள், இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் வெளியான செய்தியின் அடிப்படையில் இந்த விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் அண்மையில் மேற்கொண்ட அறிவிப்பு தொடர்பில் முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பக்கச்சார்ப்பற்ற விசாரணை ஒன்றை நடத்துமாறு மேற்கொண்ட கோரிக்கைக்கு அமைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளார்.

ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி, ஜனாதிபதி சட்டத்தரணி குசலா சரோஜினி வீரவர்தனவின் தலைமையிலான இந்த குழுவின் ஏனைய உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எஸ்.எம்.விக்கிரமசிங்க, ஓய்வுபெற்ற இலங்கை நிர்வாக சேவையின் சிறப்பு அதிகாரியான எஸ்.எம். ஜீ.கே பெரேரா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

விசாரணை அறிக்கையை ஜூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் தனக்கு கையளிக்குமாறு ஜனாதிபதி அறிவித்துள்ளார். (அ)

# காலிமுகத்திடல் தாக்குதல் நாம் பீதியடைந்துள்ளோம்

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை.24

**கொழும்பில் ஜனாதிபதி அலுவலகத்துக்கு அருகிலுள்ள போராட்ட முகாமை அகற்றுவதற்கு, பாதுகாப்புப் படையினர் தேவையற்ற பலத்தைப் பயன் படுத்தியதாகக் கூறப்படுவது தொடர்பில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகம் பீதியடைந்துள்ளதாக ஐக்கிய நாடுகளின் ஜெனிவா மனித உரிமைகள் அலுவலகப் பேச்சாளர் ஜெரமி லோரன்ஸ் தெரிவித்துள்ளார்.**

இதன்போது போராட்டக்காரர்கள், செய்தியாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் மீது தடியடி நடத்தப்பட்ட செய்திகளையும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகம் கண்டித்துள்ளது.

பாதுகாப்புப் படையினர் போராட்டக்காரர்களை தாக்கியபோது, குறைந்தபட்சம் 48 பேர் காயமடைந்தனர்,

தாக்குதலின் போது போராட்டக்காரர்கள் அங்கிருந்து வெளியேற அனுமதிக்கப்படவில்லை. அத்துடன் காயமடைந்தவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க முடியவில்லை என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகப் பேச் சாளர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பாதுகாப்புப் படையினரால் குறைந்தது நான்கு ஊடகவியலாளர்கள் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்டனர்.

கூடாரங்கள், தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் சமையலறை பொருட்கள் உட்பட போராட்டக்காரர்களுக்கு சொந்தமான சொத்துக்கள் அழிக்கப்பட்டன அல்லது பறிமுதல் செய்யப்பட்டன.

இரண்டு சட்டத்தரணிகள் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்டதாக சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் மனித உரிமைப் பாதுகாவலர்கள் ஆர்ப்பாட்டங்களைக் கண்காணித்து அறிக்கையிடுவதற்கு உரிமையுடையவர்கள், எனவே இந்தச் செயற்பாடுகளை எந்த வகையிலும் தடைசெய்யக்கூடாது என்று மனித உரிமைகள் அலுவலகப் பேச்சாளர் வலியுறுத்தினார்.

எனவே, அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிராக பலாத்காரம் பயன்படுத்துவது சர்வதேச சட்டத்திற்கு முரணானது எனவும், அவ்வாறான பலத்தை பயன்படுத்துவதை அதிகாரிகள் உடனடியாக நிறுத்தவேண்டும் எனவும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கோரியுள்ளது.

பொருந்தக்கூடிய சர்வதேச சட்டத்தின் கீழ், விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மட்டுமே கூட்டங்கள் கலைக்கப்படவேண்டும்.

காலிமுகத்திடல் போராட்டக்களம் மீதான தாக்குதலானது, நாட்டின் பிற இடங்கள் உட்பட அமைதியான எதிர்ப்பாளர்களுக்கு அச்சம் மிகுந்த செய்தியை அனுப்பியுள்ளது.

பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி மற்றும் அது அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களது குடும்பங்களின் நல்வாழ்வில் ஏற்படுத்தும் விளைவு குறித்து அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்வதற்கும் பகிரங்கமாக வெளிப்படுத்துவதற்கும் குடிமக்கள் அனைவருக்கும் உரிமை உண்டு.

எனவே இலங்கையின் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளை பலவந்தமாக தீர்க்க முடியாது எனவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

பரந்த ஆலோசனைகள் மற்றும் உரையாடல்களின் மூலமே, சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் இலங்கையர்கள் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்ப ஆரம்பிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# பாராளுமன்ற உறுப்பினராக வஜிர அபேவர்தன நியமனம்



கொழும்பு, ஜூலை. 24

ஐக்கிய தேசியக்கட்சியின் ஒரே ஒரு பாராளுமன்ற (தேசியப்பட்டியல்) உறுப்புரிமைக்கு வஜிர அபேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் தேசியப்பட்டியல் உறுப்பினராக நியமனம் பெற்றிருந்த ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டுள்ள நிலையில், அவரின் வெற்றிடத்துக்கு வஜிர அபேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் காலி மாவட்ட அமைப்பாளரான வஜிர அபேவர்தன கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ரணிலை கண்டபடி விமர்சிக்கும் செயற்பாடுகள் அர்த்தமற்றவை

## முன்னாள் எம்.பி. சிறிநேசன் கருத்து

மட்டக்களப்பு, ஜூலை. 24

“தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அரசியல்வாதிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதைச் சிந்திப்பதைவிடுத்து இப்போது தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கண்டபடி விமர்சித்துக் கொண்டு அல்லது போராடிக் கொண்டிருப்பதில் அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை. தமிழ்த் தரப்பினர் தந்திரோபாயமான முறையில் ஜனாதிபதியை அணுகி கருமங்களை ஆற்றவேண்டும்.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்:

ஜனநாயக ரீதியான போராட்டத்தை நாங்கள் வரவேற்கின்றோம். போராட்டக்காரர்கள் நியாயமாக என்ன கோரிக்கையை முன்வைக்கின்றார்களோ அதை நிறைவேற்றுவதுதான் புத்திசாதுரியமானது. இதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்க்கமான முறையில் சிந்தித்து ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

தற்போது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக பாராளுமன்றத்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார். இனி அடுத்ததாக தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள அரசியல்வாதிகள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதைச் சிந்திப்பதைவிடுத்து இப்போது தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதியைக் கண்டபடி விமர்சித்துக்கொண்டு அல்லது போராடிக் கொண்டிருப்பதில் அர்த்தமிருப்பதாக தெரியவில்லை.

தென் பகுதியில் அமைதி வழிப் போராட்டகாரர்கள், கிளர்ச்சிப் போராட்டக்காரர்கள் என இரண்டு வகையினர் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களது கருமங்களைச் செய்து கொண்டிருக்கின்றார்கள். தற்போதைய சூழ்நிலையில் தமிழர்களைப் பொறுத்தவரையில் பல விடயங்கள் காணப்படுகின்றன.

அதில் குறிப்பாக அரசியல் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்னை, போரினால் பாதிக்கப்பட்டவர்கள் விடயம், காணி விடயம், தொல்பொருள் எனும் பெயரில் அத்துமீறல் விடயங்கள் உள்ளிட்ட பல விடயங்களில் பிரச்னைகள் காணப்படுகின்றன.

இவ்வாறான பல விடயங்கள் இருக்கையில் நாங்கள் இந்தக் கால கட்டத்தில் தந்திரோபாயமான முறையில் ஜனாதிபதியைப் பயன்படுத்தி என்ன செய்யலாம் என்பதைத்தான் சிந்திக்க வேண்டும்.

”நான் சிங்கள மக்களின் வாக்குகளால்தான் வெற்றி பெற்றவன்” எனவும், சிங்கள மக்களைப் பிரதிநிதித்துவப் போவதாகவும் முன்னய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார். ஆனால், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஓரளவுக்கு பல்லின மக்களுடன் சேர்ந்து போகக்கூடிய பண்புகள் இருக்கின்றபடியால் இந்தச் சூழ்நிலையை நாங்கள் எப்படிப் பயன்படுத்தே வேண்டும் என்பதுதான் முக்கியமாக இருக்கின்றது-என்றார். (அ)

# இலங்கை பயணத்தை தவிர்க்கவும் பிரித்தானியா பயண எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை. 24

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை கருத்திற் கொண்டு, பிரித்தானிய வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம், தமது குடி மக்களுக்கு பயண எச்சரிக்கையை விடுத்துள்ளது.

அதில் அத்தியாவசியம் தவிர்ந்த பயணங்களைத் தவிர்க்குமாறு அந்த அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது.

எனினும் இலங்கையின் சர்வதேச வானூர்தி நிலையத்தின் ஊடாக வான் போக்குவரத்துக்கு இந்த அறிவுரை பொருந்தாது.

இலங்கையில் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், வீதி மறியல் மற்றும் வன்முறை அமைதியின்மை குறுகிய அறிவிப்பில் ஏற்படலாம்.

எனவே பாரிய கூட்டங்களின்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று பிரித்தானியா, தமது குடிமக்களை வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் குறுகிய அறிவிப்பில் மேலும் ஊரடங்குச் சட்டம் விதிக்கப்படலாம்.

இலங்கை, கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டு வருவதால், மருந்துகள், சமையல் எரிவாயு, எரி பொருள் மற்றும் உணவு உட்பட்ட அடிப்படைத் தேவைகளுக்கு தட்டுப் பாடு நிலவுகிறது.

எரிபொருள் பற்றாக்குறை (டீசல் மற்றும் பெட்ரோல்) போக்குவரத்து, வணிகங்கள் மற்றும் அவசர சேவைகளை இது பாதித்துள்ளது.

மின்சார விநியோகத்தில் நாள் தோறும் தடை ஏற்படுத்தப்படுகிறது என்றும் பிரித்தானிய வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu
24.07.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# விக்னேஸ்வரனின் தீர்மானம்?

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் ஒருவர்தான், தமிழ் தேசிய பரப்பில், ரணில் விக்கிரமசிங்கவை பகிரங்கமாக ஆதரித்தவர். விக்னேஸ்வரன், முதலமைச்சராக இருந்த காலத்தில், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தார். ஒரு விடயத்தில் இடம்பெற்ற முரண்பாட்டை தொடர்ந்து, விக்னேஸ்வரனை ரணில், கடுமையாக விமர்சித்திருந்தார். அதனை விக்னேஸ்வரனும் கடுமையாக எதிர்கொண்டிருந்தார். இதனைத் தொடர்ந்து, இருவரும் நீண்டகாலமாக தொடர்பற்றிருந்தனர்.

ஆனால், இவற்றையெல்லாம் ஒரு புறமாக வைத்துவிட்டு, விக்னேஸ்வரன் ஜனாதிபதிக்கான போட்டியின் போது, ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை பகிரங்கமாக அறிவித்து, அவரை ஆதரித்திருந்தார். ஆதரிப்பதற்கு முன்னர், ரணில் விக்கிரமசிங்கவிடம் சில கோரிக்கைகளை முன்வைத்து, ரணிலின் உறுதிமொழியை பெற்றிருந்ததாக எம்மிடம் உறுதிப்படுத்தினார். விக்னேஸ்வரன் தனது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளிலிருந்து முடிவுகளை எடுக்காமல், சூழ்நிலையை கருத்தில்கொண்டு தீர்மானங்களை மேற்கொண்டிருக்கின்றார். ஓர் அரசியல் கட்சியை வழிநடத்த முற்படுவருக்கு இது மிகவும் அவசியமானது. அதாவது, தான் சரியென்று கருதும் முடிவை மக்கள் முன், ஒழிவு மறைவின்றி முன்வைத்து செயற்படும் தற்றுணிவு அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு கட்டாயமானது.

நடந்து முடிந்த நாடாளுமன்ற வாக்கெடுப்பின்போது, தமிழ் தேசிய தரப்புக்களுக்கு முன்னால் இரண்டு தெரிவுகள்தான் இருந்தது. ஒன்று, வெற்றிபெறக் கூடியவரை ஆதரித்து, ஒரு சில ஆரம்பகட்ட பிரச்சினைகளுக்கான தீர்வை பெற முயற்சிப்பது. இரண்டு, வாக்கெடுப்பை தவிர்த்துக் கொள்வதன் மூலம், வெற்றிபெறப் போபவரை எதிர்ப்பதை தவிர்த்துக் கொள்வது. உதாரணமாக ஜெனிவா மனித உரிமைகள் பிரேரணைகளின் போது, சில நாடுகள் நடுநிலை வகிக்கின்றன. அதாவது வாக்கெடுப்பை தவிர்த்துக் கொள்கின்றன. உதாரணமாக இந்தியா வாக்கெடுப்பை பல தடவைகள் தவிர்த்திருக்கின்றது. ஏன்? ஏனென்றால், சிறிலங்கா அரசாங்கத்தை விரோதித்துக் கொள்ளக் கூடாது அதேவேளை, குறித்த விடயத்தில் தலையிடுகின்ற சந்தர்பத்தையும் தொடர்ந்தும் பேணிக்கொள்ள வேண்டும் என்னும் நோக்கில்தான், அவ்வாறான முடிவு எடுக்கப்படுகின்றன.

ஆதரிப்பதன் மூலம், சில விடயங்களை முன்னெடுக்கலாம் என்னும் வழியை விக்னேஸ்வரன் தெரிவு செய்திருக்கின்றார். கூட்டமைப்பு மேற்கொண்ட தவறான முடிவுடன் ஒப்பிட்டால், விக்னேஸ்வரனின் தீர்மானம் தமிழ் மக்களுக்கு பாதகமானதல்ல. ஏனெனில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வருவதன் மூலம் தமிழ் மக்களுக்கு பாரதூரமான தீங்குகள் எவையும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. ரணில் மொட்டு தரப்பினரின் ஆதரவுடன் வெற்றிபெற்றிருந்தாலும் கூட, தீவிர இனவாத தரப்புக்கள் எவையும் ரணிலின் ஆதரவாளராக முன்னரங்கிற்கு வரவில்லை. ஆனால் டலஸ் அழகப்பெருமவோடு, தமிழர் விரோத, சிங்கள கடும்போக்குவாதிகளான விமல்வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் இருந்தனர். எனவே ஒப்பீட்டடிப்படையில் ரணில் ஆதரவுநிலை, தமிழ் மக்களுக்கு பாதகமானதல்ல.

ரணில் விக்கிரமசிங்க, இன்றைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்கும் வல்லமையுள்ளவர் என்றவாறான அபிப்பிராயம் பரவலாக உண்டு. பொருளாதார நெருக்கடியை கையாளுதல் என்னுமடிப்படையில் சிந்தித்தாலும் கூட ரணிலை ஆதரிப்பதை தவறானதொரு விடயமாக கூறிவிட முடியாது. அதற்காக ரணிலை கண்மூடித்தமான நம்பிச் செயற்படுவதும் தவறானது. சிங்கள அரசியல் தலைவர்கள், தென்னிலங்கையின் அரசியல் நிலைமைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப செயற்படுபவர்கள். தாங்கள் பலவீனமாக இருக்கின்ற போது, இறங்கிவரும் அவர்கள், பலமடைந்துவிட்டால் பழைய முகத்திற்கு திரும்பக் கூடியவர்கள். உதாரணமாக, தங்களுக்கு தேவையிருந்த காரணத்தினால்தான், டலஸ் அழகப்பெரும, ஜீ.எல்.பீரிஸ், டிலான் பெரேரா போன்றவர்கள், சம்பந்தனின் இருப்பிடம் தேடிவந்தார்கள். ஆனால் இவர்கள் முன்னர் எவ்வாறு செயற்பட்டார்கள் என்பதை நாமறிவோம்.

சூழ்நிலை கருதி சில முடிவுகளை எடுப்பதில் தவறில்லை. அதற்குள் கரைந்து போவதுதான் தவறானது. அனைத்தையும் கறுப்பு வெள்ளை என்னுமடிப்படையில் நோக்குதல் சரியல்ல. அதேவேளை தாங்கள் எடுக்கும் தீர்மானங்களை பகிரங்கமாக முன்வைத்து செயற்படும் தற்துணிபு, அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு அவசியம்.

# கோட்டாபய ராஜபக்ஷ - "தானும் இப்போது ஓர் அகதி என உணர்ந்திருப்பாரா..?!"

**மு.நியாஸ் அகமது**



*இலங்கையிலிருந்து தப்பிச்செல்ல புறப்பட்ட ராணுவ விமானம் 2006 இல் செஞ்சோலையில் குழந்தைகள் காப்பகம் மீது குண்டு வீசப் பயன்படுத்தப்பட்ட விமானமாகக்கூட இருக்கலாம். இது குறித்து அந்த விமானியிடம் விசாரித்திருப்பாரா?*

*ஒரு நிலத்தை, ஒரு காட்டை, வெப்பம் வழிந்தோடும் ஒரு தெருவை, ஒரு பூவின் ஸ்பரிசத்தை, மழை கிளப்பும் மண் வாச னையை, ஒரு கோயிலின் மணியோசையை நினைவில் மட்டுமே சுமக்கும் ஓராயிரம் மக்களை நாம் தமிழ்நாட்டு முகாம்களில் பார்க்கலாம். தீவு தேசத்திலிருந்து துரத்தப் பட்டவர்கள் அல்லது மிச்சமிருக்கும் உயிரை யாவது தக்கவைத்துக்கொள்ள படகேறி வந்தவர்கள் அவர்கள்.*

*நாகாவதி அணை முகாமோ, கும்மிடிப் பூண்டி முகாமோ... இல்லை திருச்சி முகாமோ, அகதி என ஒற்றை பட்டத்துடன் வெயிலோடும் அரிச்சல்முனையில் இறங்கியவர்களிடம் சொல்ல ஏராளமான கதைகள் உண்டு. எல்லாம் நிலம் குறித்த கதைகள்தான்.*

*இப்போது அப்படியான நிலத்தை தம் நினைவில் சுமந்து நாடு நாடாக அலைகிறார் கோட்டாபய ராஜபக்ஷ. அவருக்கும் சொல்ல இப்போது பல கதைகள் இருக்கலாம். ஆனால் கேட்க சொந்த மக்கள்கூட இல்லை.*

*சொந்த மக்களால் கைவிடப்பட்டு நாடு நாடாக அலைகின்றார். இரு நாட்டு குடியுரிமை உள்ளவரை வெளிப்படையாக வரவேற்க ஒரு நாடும் தயாராக இல்லை.*

*இது 11 நாடுகள் சேர்ந்து நடத்திய போர் என்றார். ஆனால், ஒரு நாடும் அவரை அழைத்துக் கொள்ளவில்லை. அணைத்துக் கொள்ளவில்லை.*

*தப்பிச் செல்ல ஹெலிகொப்டர் ஏறும் போது என்ன நினைத்திருப்பார் கோட்டாபய?*

*விடுதலைப் புலிகள் நினைவுக்கு வந்திருக்குமோ, பாலச்சந்திரன் குறித்து நினைத்திருப்பாரோ... கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்.கோட்டையை ஹெலி கொப்டர் ஜன்னல் வழியாகப் பார்க்க எத்தனித்திருப்பாரா?*

*என்ன செய்திருப்பார் கோட்டாபய?*

*15 நாள்களுக்கு மேல் தங்கள் நாட்டில் தங்க இடமில்லை எனச் சிங்கப்பூர் சொன்ன போது வள்ளிபுரம் பார்வதி அம்மாவின் நினைவு அவருக்கு வந்திருமா?*

*என்ன நினைத்திருப்பார் கோட்டாபய?*

*ஹூம் அவர் இலங்கையிலிருந்து தப்பிச் செல்ல புறப்பட்ட ராணுவ விமானம் 2006 இல் செஞ்சோலையில் குழந்தைகள் காப்பகம் மீது குண்டு வீசப் பயன்படுத்தப்பட்ட விமானமாகக்கூட இருக்கலாம். இது குறித்து அந்த விமானியிடம் விசாரித்திருப்பாரா?*

*விமானியிடம் என்ன பேசி இருப்பார் கோட்டாபய?*

*அம்பாந்தோட்டை துறைமுகத்தை மூன்று முறை சுற்றி வரச் சொல்லி இருப்பாரா?*

*சொந்த மக்கள் கைவிட, நட்பு நாடுகள் தயங்க... செல்லும் திசை தெரியாமல் நிற்கிறார் கோட்டாபய.*

*32 சதுர கிலோமீற்றரில் மக்களுக்கான பாதுகாப்பு மண்டலத்தை முல்லைத்தீவில் ஏற்படுத்தியுள்ளோம் மக்கள் அங்குத் தஞ்சம் புகலாம் என்று 2009 ஆம் ஆண்டு கொக்கரித்தவர் சொந்த நாட்டில் ஒரு சதுர அடி நிலம்கூட இல்லாமல் நாடு நாடாக அலைகிறார்.*

*தம் மாளிகை மக்களால் கைப்பற்றப்பட்டு, தமது படுக்கை அறையில் மக்கள் கூடி இருப்பதைப் பார்க்கும்போது முள்வேலி முகாம்கள் நினைவுக்கு வந்திருக்குமா?*

*தஞ்சமடைய வந்த தலைவர்கள் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தும்படி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டார் என்று விக்கி லீக்ஸில் கசிந்த செய்தி ஒன்று கூறுகிறது. இப்போது தஞ்சம் கேட்டு வேறு நாடுகளுக்கு ஓடும் போது நடேசன் குறித்த நினைவுகள் அவருக்கு வந்திருக்குமா?*

*இலங்கை போர் உக்கிரமாக நடந்த காலகட்டத்தில் அரசை விமர்சித்த ஊடகவியலாளர், மனித உரிமை போராளி லசந்த விக்கிரமதுங்க கொல்லப்பட்ட பின்னணியில் கோட்டாபய ராஜபக்ஷ இருக்கிறார் என்கிறது மற்றொரு செய்தி.*

*இப்போது லசந்தவின் முகம் நினைவுக்கு வந்திருக்குமா? இல்லை, "மரணத்தின் பாதையை நான் அறிவேன்" என்ற லசந்தவின் கடைசி தலையங்கத்தின் பத்திகளை ஒரு முறை வாசிக்க முயன்றிருப்பாரா?*

*சிங்கையில் அமர்ந்து என்ன யோசித்துக் கொண்டிருப்பார் கோட்டாபய?*

*இறுதியாக, தானும் இப்போது ஓர் அகதிதான் என்பதை உணர்ந்திருப்பாரா கோட்டாபய?!*

*நன்றி: விகடன்*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -38

# நாற்றப் பகிர்வு

கணபதி சர்வானந்தா

**நா**ற்றம் என்பது மணம் எனப்படும். வாசம் எனவும் பொருள்படும். மூக்கால் அறியப்படும் புலனறிவு என்கிறது தமிழ் விக்சனரி.

சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. (அதிகாரம்: நீத்தார் பெருமை குறள் எண்:27)

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று கூறப்படும் ஐவகைப் புலன்கள் பற்றியும் அறிவான்பால்பட்டது உலகு என அக்குறளுக்குச் சுருக்கமாக எழுதப்பட்ட சி இலக்குவனாரின் உரையினையும் இணையத்தில் கண்டேன். ஐந்து புலன்களான சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் ஆகியவற்றின் தன்மை, வலிமை, அவை பிறக்கும் வழிமுறைகள், அவை செய்யும் தந்திரங்கள், அவை பிறப்பதற்கான காரணங்கள் ஆகியவற்றை அறிந்து உணர்ந்து அவற்றை அறுத்து கடப்பவனுக்கு இவ்வுலகு வசப்படும். ஏனெனில் ஐந்துபுலன்களும் ஆசைகள் உண்டாகக் காரணமாக அமைகின்றன.

"நாற்ற மிலாத மலரி னழகின்னா
தேற்ற மிலாதான் றுணிவின்னா வாங்கின்னா"

கபிலர் எழுதிய, இன்னா நாற்பது பாடலில் வரும் இரண்டு வரிகள் இவை.

மணமில்லாத பூவின் அழகானது துன்பமாகும். (இன்னா என்பது துன்பம்) மனத் தெளிவு இல்லாதவன், ஒரு செயலை செய்யத்துணிவது துன்பமாகும், என்பது இதன் பொருள். மணம் என்பதை நாற்றம் என்ற பொருளில் பயன்படுத்தி இருக்கிறார் கபிலர்.

"முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளது ஒன்று உண்டு"

- என்ற குறளிலும் மலரின் நறுமணத்தை, நாற்றம் என்ற சொல்லில்தான்

வள்ளுவர் குறிப்பிடுகிறார். நறுமணத்தை குறிப்பதாக வாடை, நறுநாற்றம், வாசனை ஆகிய சொற்களும் வழக்கத்தில் உண்டு.

தற்காலத்தில் இந்தச் சொல் கெட்ட வாசனையை குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப் படுகிறது. ஆனால் அந்தக்காலத்தில் நாற்றம் என்பது நறுமணத்தைக் குறிக்கும் பொருளாகப் பயன்படுத்தப்பட்டதற்குப் பல இலக்கிய ஆதாரங்கள் உண்டு.

மலத்தை நாற்றம் என்கிறோம். ஏன்? வியர்வை நாற்றம், வாய் நாற்றம் என்ற சொற்பதங்களையும் நாம் அன்றாடப் பேச்சு வழக்கில் பயன்படுத்தியும் வருகிறோம். உயிரற்ற உடல் நாற்றம் எடுக்கிறது என்று சொல்லுகிறோம். அந்த செத்த மிருகத்தின் உடலில் இருந்து வரும் நாற்றம் வயிற்றைக் குமட்டுகிறதென்றும் சொல்லிக் கொள்கிறோம்.

யாழ்ப்பாணத்தில் "பூ நாறி மரம்" என்று ஒரு இடத்துக்குப் பெயருண்டு. அந்த இடத்தின் பெயரை உச்சரிக்கும் போது எம்மை அறியாமலே எமக்குள் அந்த வாசனை ஒருவகை வெறுப்புணர்வைத் தோற்றுவிப்பதாகவும் இருக்கும். அந்த இடத்தைக் கடக்கும்போது ஒரு பொது மலசல கூடத்தைக் கடப்பதைப் போன்ற செயற்பாட்டுடனே மக்கள் செல்வதைப் பார்க்கலாம்.

நாகரிக உலகில், வியர்வை நாற்றம் அவமானதாகக் கருதப்படுகிறது. வியர்வை நாற்றம். மனிதனுடன் ஒட்டிப் பிறந்த ஒன்று. பணக்காரரோ ஏழையோ, ஆணோ பெண்ணோ, யாராக இருந்தாலும் வியர்வை நாற்றம் எடுப்பதைக் காணலாம். நறுமணம் மிக்க சோப்புகள், விதவிதமான வாசனைத் திரவியங்கள் என்று எதனையும் வாங்கிப் பயன்படுத்தலாம். எனினும் வியர்வை நாற்றம் எடுக்கும். அது பலரை வாட்டி வதைக்கும் ஒரு தீராத தலைவலியாகவே காணப்படுகிறது.

நாற்றம் என்ற சொல்லோடு வாசம், மணம், பாண்டை, பாண்டைநாறி, பாண்டன் என்ற சொற்களும் தொடர்படையவைகளாகக் காணப்படுகின்றன.

முதலாம் பத்து ஏழாம் திருமொழி "கருப்பூரம் நாறுமோ..." ஏழாம் பதிகம், கல்யாணம் ஆன பிறகு உண்டான வைபவம். கற்பூரம் நாறுமோ பாசுரம் மூலமாக ஆண்டாள் அதைத் தெரிவிக்கிறாள்.

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ,
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்தி ருக்கும்மோ,
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்,
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.

கண்ணனுடைய பவள வாய் உதடுகளில் பச்சைக் கற்பூர வாசனை வீசுமோ? தாமரைப் பூ மணம்தான் வீசுமோ? அவன் பவள வாய் தித்திப்புச் சுவையுடன் இருக்குமோ? கடலில் பிறந்த வெண்மையான பாஞ்சஜன்னிய சங்கே! குவலயாபீட யானையின் கொம்பினை ஒடித்த அந்தக் கண்ணபிரானின் உதட்டின் சுவையையும், வாசனையையும் பற்றி, ஆசையுடன் உன்னிடம் கேட்டறிய விரும்புகின்றேன். இதைப் பற்றி எனக்குச் சொல்வாயா?

கனவிலே கண்ணனோடு ஏற்பட்ட உறவும் நீடிக்கப் பெறவில்லை. கவலையால் அவள் முகம் துவண்டது. கோதைக்கு அவன் திருப்பவள வாய் வைத்துக் கர்ஜிக்கும் பாஞ்சஜன்யத்தின் நினைவு வந்தது. எப்போதும் அவன் கைகளிலே ஒட்டி உறவாடும் அந்த சங்கு அடைந்த பெரும் பேற்றை எண்ணி எண்ணி உகக்கிறாள் ஆண்டாள். பகவானின் வலதுகையில் உள்ள சக்கரத்துக்கு இல்லாத பெருமை, இடது கையில் உள்ள சங்குக்கு உண்டு. இப்படி, அவன் பவள உதடுகளின் வாசனையை நுகர்ந்த சங்கே அந்த அனுபவத்தை எங்களுக்கும் கூறுவாயா? என்று "கற்பூரம் நாறுமோ" என்ற இந்த ஏழாம் திருமொழியில் கேட்கிறாள்.

"காற்றில் வரும் கீதமே என் கண்ணனை அறிவாயா" என்ற சினமாப் பாடல் உருவாக்கத்துக்குக் கூட "கற்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ" என்ற ஆண்டாளின் திருவாய்மொழியே அடிப்படையாக இருந்ததைக் கண்டேன்.எனவே நாற்றம் என்ற சொல் நறுமணத்தைக் குறிக்கிறது.இனிமேல் அச்சொல் எல்லாருடைய அகங்களிலும் நல் அதிர்வுகளை ஏற்படுத்தட்டும்.

# இந்தவார ராசிபலன் 24.07.2022 - 30.07.2022



ஜுலை 24 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 08

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : ஏகாதசி




செயல்களில் கவனம் தேவை. குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். உங்கள் முயற்சிகளில் முன்னேற்றம் தோன்றும். வருமானம் அதிகரிக்கும். நினைத்ததை சாதித்து மகிழும் வாரம். தொழிலில் லாபம், உத்தியோகத்தில் நன்மை, குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.சுறு சுறுப்பாக செயல்படுவீர்கள். எதிர்ப்புகளைத் தாண்டி நினைத்ததை சாதிப்பீர்கள். லாப நிலை உருவாகும்.




செலவுகள் அதிகரிக்கும். செயல்களில் குழப்பம் உண்டாகும். திங்கள் கிழமை முதல் முயற்சிகள் வெற்றியாகும்.எதிர்பார்த்த ஆதாயம் வந்து சேரும். அரசு வழியிலான முயற்சிகள் நிறைவேறும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட சங்கடங்கள் விலகும். ஒரு சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு உண்டாகும். வீடு, மனை வாங்கும் முயற்சி பலிதமாகும்.மனம் மகிழும்படியான நிலை உண்டாகும். ஒரு சிலர் குலதெய்வ வழிபாடு மேற்கொள்வீர்கள்.




நெருக்கடிகள் விலகும். வாரத்தின் முதல் நாளில் உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். செலவுகள் அதிகரிக்கும். வெளியூர் பயணங்கள் உண்டாகும். உங்கள் எண்ணம்போல் செயல்படுவீர்கள். நினைத்ததை சாதிப்பீர்கள். தேவைக்கேற்ற வருமானம் வந்து சேரும்.எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரும்.புதிய முயற்சி ஒன்றில் ஆதாயம் காண்பீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள். வருமானம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும்.




வருமானம் அதிகரிக்கும். செயல்கள் வெற்றியாகும். அலைச்சலும் செலவும் அதிகரிக்கும் புதிய முயற்சிகளில் தடையுண்டாகும். வருமானம் அதிகரிக்கும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். கவனமாக செயல்பட்டு நன்மைகளை அடைய வேண்டிய வாரம். தொழில் நிலை சீராகும். வருமானம் அதிகரிக்கும். மனம் மகிழும்படியான சம்பவங்கள் நடைபெறும். முயற்சிகளில் எதிர்பார்த்த ஆதாயம் காண்பீர்கள்.




உங்களுடைய செல்வாக்கு உயரும். உங்கள் முயற்சிகள் நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் வந்து சேரும், தொழில் உத்தியோகத்தில் மகிழ்ச்சியான நிலை ஏற்படும். செலவுகள் அதிகரிக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நன்மையாகும். தடைகளைத் தாண்டி உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். நீங்கள் எண்ணியபடி உங்கள் செயல்களை செய்து லாபம் காண்பீர்கள்.




செயல்களில் கவனம் தேவை. உங்கள் செயல்கள் வெற்றியாகும். அரசு வழியிலான முயற்சிகள் நன்மையாகும். தடைபட்டிருந்த வருவாய் வரத் தொடங்கும். புதிய முயற்சிகள் நன்மையாகும் என்றாலும் வார்த்தைகளில் நிதானம் தேவை. பழைய நெருக்கடிகள் தொடரும். தேவையற்ற பிரச்சினைகளை சந்திப்பீர்கள். உங்களுடைய விருப்பங்கள் நிறைவேற ஆரம்பிக்கும். முயற்சிகள் பலன் தரும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். புதிய சொத்துகள் வாங்கும் முயற்சி நிறைவேறும்.




உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். புதிய முயற்சிகள் வேண்டாம். வழக்கமான வேலைகளில் மட்டும் ஈடுபடவும். தடைபட்டிருந்த வேலைகள் நடைபெறத் தொடங்கும். திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர்கள். சிந்தித்து செயல்படுங்கள். உழைப்பிற்கேற்ற வெற்றியை அடைவீர்கள். வருமானத்தில் ஏற்பட்ட தடைகள் விலகும். உங்கள் செயல்கள் வெற்றியாகும்.




உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். நினைத்ததை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள். உங்கள் செயல்கள் வெற்றியாகும். குலதெய்வ வழிபாடு மகிழ்ச்சியை உண்டாக்கும். குடும்பத்திற்காக சில முயற்சிகள் மேற்கொள்வீர்கள். கொடுக்கல் வாங்கல் இழுபறியாகும். கவனமுடன் செயல்படுங்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். சங்கடங்கள் அதிகரிக்கும். மனதில் குழப்பம் உண்டாகும்.




செயல்கள் இழுபறியாகும். உங்கள் முயற்சிகள் எளிதாக நிறைவேறும். எதிர்ப்புகள் விலகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். புதிய முயற்சிகளில் சங்கடங்கள் தோன்றும். திட்டமிட்டு செயல்படுவதால் நன்மை உண்டாகும். பண வரவு அதிகரிக்கும். வியாபாரம் அபிவிருத்தியாகும். நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும் வாரம்.




யோசித்து செயல்பட வேண்டிய வாரமிது. உங்கள் முயற்சிக்கேற்ப நன்மை அடைவீர்கள். பூர்வீக சொத்துகளில் ஏற்பட்ட பிரச்சினைகள் விலகும். எதிரிகளின் தொல்லை அகலும். தடை தாமதம் என்று ஏற்பட்டாலும் உங்கள் முயற்சிகள் வெற்றியாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தேவைக்கேற்ற வருமானம் வந்து சேரும். ஆலய வழிபாட்டில் மனம் செல்லும். குலதெய்வத்திற்கு பொங்கல் வைப்பீர்கள்.





எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாரம் இது. உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். புதிய முயற்சிகள் வெற்றியாகும். அரசு வழியிலான முயற்சிகள் ஆதாயமாகும். நன்மைகள் அதிகரிக்கும் வாரம் இது. குடும்பத்தினர் உதவியுடன் நினைத்ததை அடைவீர்கள். தடைபட்டிருந்த செயல்களை முடிப்பீர்கள். புதிய இடம் வாங்கும் முயற்சி பலிதமாகும். உழைப்பிற்கேற்ற லாபம் காண்பீர்கள்.உங்கள் ஆற்றல் வெளிப்படும் வாரம். துணிச்சலுடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். எதிர்ப்புகள் விலகும்.




பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். துணிச்சலுடன் செயலபட்டு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உங்கள் முயற்சிக்கேற்ப பலன்கள் உண்டாகும். திட்டமிட்டு செயல் படுவதில் ஆதாயம் அதிகரிக்கும்.குடும்பத்தில் சல சலப்புகள் உண்டாகும். பெற்றோர்கள் வழியிலும் பிள்ளைகளாலும் சங்கடங்களை அடைவீர்கள் என்றாலும். உங்கள் மன வலிமையால் அனைத்தையும் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகரிகளால் பாராட்டப்படுவீர்கள். பொருளாதார நிலை உயரும். குல தெய்வ வழிபாடு நன்மை தரும்.

# ஆட்சியை மாற்றும் இந்தியாவின் திட்டம் எப்போதோ தொடங்கியிருக்க வேண்டும்!



சென்னை மடல்
-பகவான் சிங்-

ஆறு முறை பிரதமராக இருந்த ரணில் விக்ரம சிங்க, தனது நீண்ட காலக் கனவு, நனவாகப் பெற்றுள்ளார். ஆனால், இந்த அதிபர் சிம்மாசனத்தில் பன்சணையை விட, ஆணிகளே அதிகம் உள்ளன. ராஜபக்ஷ குடும்பத் தினருக்கு எதிரான சாலைப் போராட்டத்தை விரைவில் கட்டுக்குள் கொண்டுவந்து, மிகவும் சிதிலமடைந்துள்ள

இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஒரு திட்டத்தை வகுத்து, ஒருமனதான இசைவு எல்லையென் றாலும் அனைவரையும் உள்ளடக்கிய தன்மை கொண்ட ஓர் அரசியல் சூழலை உருவாக்கவேண்டிய மிக முக்கிய கட்டாயங்கள் அவர் முன் காத்திருக்கின்றன.

சர்வதே நாணய நிதியம் மற்றும் பிற சர்வதேச நிதி அமைப்புகளின் உதவியோடு, பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும், கடன் வலையால் இந்தச் சிறிய தீவு தேசத்தை

அப்படியே கபளீகரம் செய்ய முனைந்துள்ள சீனத் திட்டத்தை முறியடிக்கவும் ரணில் விக்கிரமசிங்க அதிபராக, இந்தியாவும் அதன் மேற்கத்திய நட்பு நாடு களும் வழிவகை செய்தன என்று நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தனது தெற்கு எல்லைப் பகுதிகள் சீன இராணுவத்தின் களங்களாக மாறு வதைத் தடுக்க, இலங்கையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது இந்தியாவிற்கு மிகவும் அவசியம்.

தனது சகோதரர் கோட்டாபய மீதான மக்களின் கோபத்தைத் திசை திருப்பும் முயற்சியாக, மஹிந்த ராஜபக்ஷ, பதவி விலகல் நாடகத்தை அரங்கேற்றிய போது, தனது கைப்பாவையாக ரணிலை அங்கு அமர வைத்தது குறித்துக் கொதித்திருந்த 'ஜனதா அரகாலயா' போராட்டக்காரர்கள் குழு, ரணில் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு எதிராகத் தங்கள் குரலை உயர்த்தினார்கள். ஆனால், அதிபராகப் பொறுப்பேற்ற வுடன் ரணில், இரும்புக் கரம் கொண்டு அவர்களைக் கட்டுக்குள் கொண்டு வர முயன்று வருகிறார்.

சீனா அமைத்துக்கொடுத்த பாதுகாப்பான ஆடு களத்தில், ராஜபக்ஷ குடும்பத்தினர் தறிகெட்டு ஓடிக் கொண்டிருந்த காலத்திலேயே இந்தியாவின் ஆட்சி மாற்றத் திட்டம் தொடங்கியிருக்கவேண்டும். உணவுப் பற்றாக்குறை, எரிபொருளுக்கான நீண்ட வரிசைகள், மின் வெட்டுகள், பொதுப் போக்குவரத்து முடக்கம், காலியான மருத்துவமனைகள், இறுதியாக ஏப்ரலில் தொடங் கிய 'காலிமுக திடல் புரட்சி' என்பன, ராஜபக்ஷ குடும்ப ஆட்சிக்கு மாற்று வழிகளைத் தேட இந்தியாவை உந்தித் தள்ளின. ரணில்தான் சிறந்த மாற்று என்பதை அடை யாளம் காண்பது, சாதுர்யம் நிறைந்த தேசியப் பாது காப்பு ஆலோசகர் அஜித் தோவலின் வழிகாட்டுதலுடன், தேர்ந்த இராஜதந்திரியான எஸ். ஜெய்ஷங்கரின் தலைமையி லான அயலுறவுத் துறை அமைச்சகத்திற்கு அதிக கடின மாக இருந்திருக்காது.

## தமிழர் பிரச்னையை முழுமையாக கையிலெடுக்க ரணில் அரசு டெல்லியால் வற்புறுத்தப்படலாம்?

பாராளுமன்றத்தில் யூ என் பி கட்சியின் ஒரே பிரதிநிதியாக இருந்த அதன் தலைவ ரான ரணில், அரசியலில் மிகவும் பின்னடைந்திருந்தா லும், நீண்ட காலம் நாட்டின் நிதியமைச்சராகவும் பிரதமராகவும் இருந்த காரணத்தால், பொருளாதார மீட்புக்குச் சிறந்த மாற்றாக இவர் திகழ்ந்தார்.

மேலும், அவர் பிரதமராக இருந்த காலத்தில், சீனா வின் கடன்களால் இலங்கையின் இறையாண்மை பாதிக் கப்படுவதையும், பல சீன முதலீட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதையும் குறித்துக் கேள்வி எழுப்பி, இந்தியா மற்றும் மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவாகவும் இருந்தார். 2020 பாராளுமன்றத் தேர்தலில் இவரது கட்சி மோசமாகச் செயல்பட்டதற்கும், எஸ் எல் பி பி பெரு வெற்றியடைவதற்கும் பின்னால்,


சீனாவின் பங்கு இருந்தது என்று கொழும்பைச் சேர்ந்த சில நண்பர்கள் உறுதியாக நம்புகின்றனர்.

ஜூலை 20 அதிபர் தேர்தலின் நான்கு போட்டியா ளர்களில், எதிர்க்கட்சியான சமகி ஜன பலவேகயா(எஸ் ஜே பி) தலைவர் சஜித் பிரேமதாசா தான் முக்கிய போட்டியாளராக இருந்தார். எண்ணிக் கையில் முன்னி லையில் எஸ் எல் பி பி இருந்தபோதி லும், தானும் மிகத் தீவிரமான போட்டியில் இருப்பதாக ஜூலை 15 அன்றி ரவு கூட குறிப்பிட்டிருந்தார். "இது ஒரு மிகப்பெரிய போராட்டமாக இருந்தாலும், உண்மை வெல்லும் என்று நான் நம்புகிறேன்" என்று ட்வீட் செய்திருந்தார். ஆனால், அதிபர் தேர்தலுக்கான இரகசிய வாக்கெடுப்புக்கு உறுப் பினர்கள் செல்வதற்கு 24 மணி நேரம்கூட இல்லாத நிலையில், ஜூலை 19 அன்று, தான் இந்தப் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். நாட்டின் நலனுக்காகவும் தான் விரும்பும் மக்களின் ஷ நன்மைக்காகவும் இந்த முடிவை எடுப்பதாகவும் கூறிய அவர், டலஸ் அழகபெருமவின் வெற்றிக்கு உழைக்கு மாறு எதிர்க்கட்சிக் கூட்டாளிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

கடும் சூழ்ச்சிகளுக்கும் வியூக அமைப்பு களுக்கும் பிறகு, எஸ் எல் பி பி கட்சிக்குச் சற்றே ஆதரவு குறைந்தி ருந்தாலும், எதிர ணியிடமிருந்து குறைந்தது 40 வாக்கு கள் தேவைப்பட்ட நிலையிலும் ரணில் வெற்றி பெறு வது சஜித்துக்கு உறுதியாகத் தெரிந்தது. எதிரணியின் ஒவ்வொரு சாத்தியமுள்ள உறுப்பினரையும் ரணிலுக்கு மாற்றி வாக் களிக்க உந்தும் முயற்சியாக, தொலைபேசி அழைப்பு அல்லது நேரில் விஜயங்கள் நடைபெற்றதைத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியாவும் ரணிலுக்கு ஆதரவாக வாக்களிக்கச் சிலரின் மனமாற்றத்திற்கு உதவியுள்ளதும் தெரிய வந்தது. இலங்கைக்கான எதிர்காலத் திட்டங்களை வகுக்கும்போது, சஜித்தை விட ரணில் சிறப்பான, பாது காப்பான, முதிர்ச்சியுள்ள கூட்டாளியாக இருப்பார் என்று டெல்லி தெளிவாகவே கணித்தது.

## ரணில் பாதுகாப்பானவர் என்பதை டெல்லி தெளிவாகவே கணித்தது





10 உறுப்பினர்களைக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, டலஸிற்கு ஆதரவளிப்பதாக அதிகார பூர்வமாக அறிவித்திருந்தாலும், அதிலும் பெரும்பான் மையானவர்கள், சஜித்மீது கொண்டிருந்த அவநம்பிக் கையால் ரணிலுக்கே வாக்களித்தனர். அது ஓர் இரகசிய வாக்கெடுப்பாக இருந்ததால், மாற்றி வாக்களித்ததைக் கண்டுபிடிக்க முடியாது என்றாலும், 134-82 என்ற இறுதி முடிவு, இப்படித்தான் நடந்துள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

"சுமந்திரன் ஓர் எண்ணைத் தொடர்பு கொண்டு, தொலைபேசியை ஸ்பீக்கரில் போட்டார். மறுமுனை யில், கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் பேசுவதாக சுமந்திரன் அறிமுகப்படுத் தினார். அந்த அதிகாரி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி தேர்தலில் சஜித்துக்கு ஆதரவளிக்க வேண் டும் என்று இந்தியா விரும்புகிறது என்று கூறினார்", என்று கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்த் தலைவர் களில் சிலர் கூறியதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதற்குப் பிறகு சற்று நேரத்தில், தனது பிரதமர் வேட்பாளரான டலஸ் அழகபெரும மற்றும் முன்னாள் அயலுறவுத் துறை அமைச்சர் ஜி எல் பீரிஸ் ஆகியோரு டன், சஜித், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான ஒப்பந்தத்தை இறுதி செய்ய அங்கு வந்தார். அரசியல் கைதிகளை விடுவிப்பது, வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட தனியார் மற்றும் தொல்பொருள் நிலங்களையும் விடுவித்தல் உள்ளிட்ட தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாகவும் உறுதியளிக்கப்பட்டது.

அடுத்த நாள், தான் இந்திய இராஜதந்திரியுடன் தொடர்பு கொண்டதாக வந்த செய்திகளை சுமந்திரன் மறுத்தார். இந்தியத் தூதரகமும் இலங்கையின் எந்தத் தேர்தலிலும் இந்தியா தலையிடாது என்று மறுப்பு வெளியிட்டது. சுமந்திரன் தனது இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டுக்குப் பெயர் போனவர் என்பதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

அதிபர் தேர்தலில் வெற்றி பெற இந்தியாவின் ஆசிகளை ரணில் பெற்றிருந்தார் என்பது தெளிவான போது, சஜித், தனது ட்வீட்டில், தன் தாய் நாடான இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் தொடர்ந்து உதவும் படி, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் அந்நாட் டின் அரசியல் கட்சிகளுக்கும், மக்களுக்கும் வேண்டு கோள் விடுத்தார். பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க ரணில் எடுக்கும் அனைத்து நேர்மறை நடவடிக்கைகளுக்கும் தான் ஒத்து ழைப்பு அளிப்பதாக உறுதியளித் தமை சஜித்தின் மற்றொரு நன்முயற்சியாகும்.

அதிபராக உறுதியாக அமர்ந்தபின், அவருக்கு முன் நிற்கும் பணிகள் ஏராளம். குறிப்பாக, எரிபொருள் மற்றும் உணவுப் பொருள்களின் தட்டுப்பாட்டைப் போக்கி, ஐ எம் எப் மற்றும் பிற சர்வதேச நிதி அமைப்புகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி, அறிவார்ந்த உள்நாட்டு நிதி வழிமுறைகளைத் திட்டமிட்டு, வீதிப் போராட்டக் காரர்கள் வீடுதிரும்புவதை உறுதி செய்ய வேண்டும். இது, முதலில் மக்களுக்கு மிகவும் கடின மான பணியா கத் தோன்றலாம். இதில் அரசு முதலில், சலுகைகளும் அபராதங்களும் (carrot and stick policy) என்ற கொள்கையை மேற்கொள்ளலாம்.

பாராளுமன்றத்திலும், வெளியிலும் சமரச அரசியல் நகர்வுகளைச் செய்து, போராட்டத் தீயை எரியவைக்க முயலும் பிரச்னைகளை உருவாக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதுடன், மக்களின் துயரங்களைக் குறைக்கவும் வெளிப்படையான முயற்சிகளை

மேற்கொள்வார் என எதிர்பார்க்கலாம். இந்தியாவும் மேற்கத்திய நட்பு நாடுகளும் விரைவாக உதவுவார்கள் என்றும் நம்பலாம். நான் முன்பு எழுதியது போல், அதிக நேர விரயமின்றி, தமிழர் பிரச்னையை முழுமையாகக் கையிலெடுக்க, ரணில் அரசு டெல்லி யால் வற்புறுத்தப்படும் என்று நம்பலாம்.

டக்ளஸ் தேவானந்தா மீண்டும் அமைச்சர் பொறுப் பேற்றுள்ளார். மேலும் சில தமிழ்த் தலைவர்கள் ரணில் அமைச்சரவையில் இணைந்தால் நல்லிணக்கச் செயற் பாடுகள் துரிதப்படுத்தப்படும்.

தமிழ்த் தலைவர்கள் யாரேனும் அமைச்சுப் பதவியில் சேர்ந்தால் அவர்களை 'துரோகி'யாகக் கருதுவோம் என்று யாழ் அறிவாளிகள் சிலர் மிரட்டுவதையும் நான் பார்க்கிறேன். இந்தக் குறுகிய மனங்கள் எப்போதுதான் ஞானம் பெறும் என்று நான் காத்திருக்கிறேன்.

ரணில் தனது றோயல் கல்லூரித் தோழரும், எஸ் எல் பி பி மூத்த தலைவரும், பாராளுமன்றத்தின் முன்னாள் சபைத் தலைவருமான தினேஷ் குணவர்தனவைப் பிரதமராகத் தெரிவு செய்துள்ளார். பழைய முகங்களின் புதிய அமைச்சரவை வெள்ளிக்கிழமை பதவியேற்றது. பதற்றமான தீவில் இதைவிடச் சிறப்பாக எதுவும் நடக்க முடியாது. ஒரு புதிய விடியல் உருவாவதாகச் சொல்வ தற்கு இன்னும் காலம்கனியவில்லை என்றாலும், சூரிய உதயத்திற்காக கிழக்கு நோக்கித் திரும்புவதற்கு அங்குள்ள மக்கள் தயாராகலாம் என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# கோட்டாபயவின் வெளியேற்றமும் ரணில் விக்ரமசிங்கவின் வருகையும்

எம். ஏ. நுஃமான்



**கோட்**டாபய ராஜபக்ஷ 2019ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர். சிங்கள மக்கள் மத்தியில் இஸ்லாமிய பீதியை விதைத்துப் பெற்ற வெற்றி அது என்பது ஒன்றும் ரகசிம் அல்ல. 69 இலட்சம் வாக்காளர்கள் - பெரும்பாலும் சிங்கள பௌத்த வாக்காளர்கள் - அவரைத் தெரிவு செய்தனர். தங்களுக்கு ஒரு உறுதியான தலைவர் கிடைத்துவிட்டார் என்று மிக ஆரவாரத்துடன் பால் சோறு பொங்கி அந்த வெற்றியைக் கொண்டா டினர்.

அதை அடுத்து 2020ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அமோக வெற்றி பெற்றது. மஹிந்த பிரதமரானார். ராஜபக்ச குடும்பம் சிம்மாசனத்தில் ஏறியது. இன்னும் இருபது ஆண்டுகளுக்கு இவர்களை அசைக்க முடியாது, இவர்களே ஆட்சி யில் இருக்கப்போகிறார்கள் என்று ராஜபக்சக்களின் விசுவாசியான முன் னாள் அமைச்சர் அலி சப்றி ஒரு கூட்டத்தில் பிரகடனம் செய்தார்.

இருபது வருடங்கள் இல்லாவிட்டா லும் பத்து வருடங்களாவது பதவியில் இருப்பார்கள் என்று பலரும் நம்பினார் கள். எல்லாம் ஒரு கனவு போல் இருக்கிறது. இரண்டரை வருடம் முடிய முன்னரே நிலைமை மாறிவிட் டது. வரலாறு காணாத பொருளாதார நெருக்கடி எல்லாவற்றையும் மாற்றி விட்டது.

திடீரென்று யாரும் எதிர்பாராத வகையில் மக்கள் - குறிப்பாக சிங்கள பௌத்த பெரும்பான்மையினர், வரலாற்றில் முதல்முறையாக கணிச மான சிறுபான்மையினரின் ஆதரவுடன் - ராஜபக்ஷக்களின் அதிகாரத்துக்கு எதிராகத் திரண்டனர். கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி ஆரம்பித்த இந்த மக்கள் எழுச்சி மூன்று மாதங்களுக்குள் ஒரு சுனாமி போல் திரண்டு ஜூலை 9 ஆம் திகதி ராஜபக்சக்களின் ஆட்சியை முற்றிலும் துடைத்தெறிந்தது.

கோட்டாபய நாட்டைவிட்டு வெளியேறினார், ஏனையோர் அரசியல் அரங்கை விட்டு வெளியேறினர். யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சர்வாதிகார ஆட்சிகளுக்கு எதிராக, ஊழலுக்கு எதிராக உலகின் பல நாடு களில் நடைபெற்ற மக்கள் எழுச்சிகளுள் ஒன்றாக இதுவும் வரலாற்றில் பதிவாகி விட்டது.

இத்துடன் மக்கள் போராட்டத்தின் முதல் கட்டம் பேரழிவுகள் இன்றி சுமு கமாக நிறைவடைந்தது என்று மக்கள் மகிழ்ச்சி அடையலாம். ஆனால் அதன் இரண்டாது கட்டம் - ஒரு இடைக்கால சர்வகட்சி ஆட்சியை அமைத்தல், அரசியல் அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துதல், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணுதல் - அவ்வளவு சுமுகமாக நடைபெறும் என்று தோன்ற வில்லை. இந்நாட்டில் நீண்ட காலமாக வளர்த்தெடுக்கப்பட்ட கட்சி மைய, கொள்கைப் பிடிப்பற்ற, சந்தர்ப்பவாத,, பதவி ஆசைகொண்ட அரசியல் கலா சாரம் அதற்குப் பாரிய முட்டுக் கட்டையாக இருக்கப் போகின்றது என்று தெரிகின்றது.

இதில் முக்கியமானது ரணில் விக்கிரமசிங்கவின் வருகை என லாம். ஜனநாயகரீதியில் மக்க ளால் தேர்ந்தெடுக்கப்படாத, எவ்வித தார்மீக உரிமையும் இல்லாத விக்கிரமசிங்க எப்படி பிரதமரானார், எப்படி பதில் ஜனாதி பதியானார் எப்படி இடைக்கால ஜனாதிபதியானார் என்பது ஒரு பெரிய கேள்வி. நமது அரசியல் யாப்பில் உள்ள குளறுபடிகளைத் தவிர இதற்கு நியாயமான காரணங்கள் எவையும் இல்லை .

சர்வ வல்லமை உள்ள ஜனாதிபதி ஒருவர், தான் நினைத்த எதையும் செய்யமுடியும் என்ற படையில் தான் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்துக்குள் நுழைந்த ரணில் பிரதமராக நியமிக்கப் பட்டார். ஜனாதிபதி இல்லாத நிலையில் பிரதமர் பதில் ஜனாதிபதியாக நியமிக் கப்படுவார் என்ற யாப்பு விதியின்படிதான் அவர் பதில் ஜனாதிபதியானார். இப்போது இடைக்கால ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிட்டு, 134 வாக்குகள் பெற்று, எதிர் பாராத அளவுக்கு 52 அதிகப்படியான வாக்கு களால் வெற்றி பெற்றுள் ளார்.

ராஜபக்சக்களின் விசு வாசிகளைப் பெரும்பான் மையாகக் கொண்ட, மொட்டுக் கட்சியினரும் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த கணிசமான உறுப் பினர்களும் அவருக்கு வாக்களித்துள்ளனர். பல பாராளுமன்ற உறுப்பினர்கள் விலைக்கு வாங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி வேட்பாளர்களுள் ஒருவரான அனுர குமார திசாநாயக்க பாராளுமன்றத் திலேயே குற்றம் சாட்டியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ரணில் பிரதமராக நியமிக்கப்பட்ட நாளிலிருந்து அவரும் பதவி விலக வேண்டும் என்றே ஆர்ப்பாட்டக் காரர்கள் கோசம் எழுப்பி வந்தனர். அவர் ராஜபக்சக்களின் பாதுகாவலர் என்று குற்றம் சாட்டினர். ரணில் ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர் அவரைப் பத்திரிகையாளர்கள் சந்தித்த போது நீங்கள் ராஜபக்சக்களின் நண்பர்தானே" என்று ஒரு வெளி நாட் டுப் பத்திரிகையாளர் கேட்ட கேள்விக் குப் பதிலளித்தபோது" நான் ராஜ பக்சக்களின் நண்பன் அல்ல, நான் மக்களின் நண்பன், நான் எப்போதும் ராஜபக்சக்களுக்கு எதிராகவே இருந் திருக்கிறேன்" என்று அவர் பதில் சொன்னார். ராஜபக்சக்கள் தங்கள் எதிரியை ஜனாதிபதியாக ஆக்குவதற் காகத் தங்கள் மறைவிடத்திலிருந்து பலத்த பாதுகாப்புடன் பாராளு மன்றத்துக்கு வந்து வாக்களித்தார்கள் என்பது ஆச்சரியம்தான்.

ரணில் விக்கிரமசிங்க (1949) செல் வாக்கான குடும்ப, அரசியல் பின்னணி உடையவர். இலங்கைப் பல்கலைக் கழகச் சட்டத்துறைப் பட்டதாரி, அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகம் ஒன்று கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி அவரைக் கௌரவித்துள்ளது. 1977 முதல் 2020 வரை 43 ஆண்டுகள் தொடர்ச்சியாகப் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தவர்.

இக்காலப் பகுதியில் துணை அமைச்சராகவும், அமைச்சராகவும், எதிர்க்கட்சித் தலைவராகவும், அரை குறையாகவேனும் ஐந்து முறை பிரதமராகவும் பதவி வகித்தவர். இரு முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டி யிட்டுத் தோல்வியடைந்தவர்.

அசருடைய நீண்டகால அரசியல் அனுபவம் காரணமாக அவருடைய தகுதிக்கு மீறிய பல ஐதீகங்கள் (அல

## இலங்கை மக்கள் எதிர்நோக்கும் சவால்கள்



வாள ) அவரைப்பற்றிக் கட்டமைக்கப்பட் டுள்ளன. அவர் சர்வதேச அரங்கில் செல்வாக்கு மிக்கவர், இன்றைய பொருளாதார நெருக்கடி யில் இருந்து நாட்டை மீட்டெடுக்கக்கூடிய ஒரே ஒருவர் அவர்தான் என்று கோட்டாவால் அவர் பிரதமராக நியமிக்கப் பட்ட போது பலர் நம் பிக்கை தெரிவித்தார்கள். ஆனால் எதிர்காலம் இன்னும் சிக்கலாக இருக்கப்போகிறது என்று எதிர்வு கூறியதைத் தவிர அவரால் எதுவம் செய்ய முடியவில்லை. சுமார் நாற்பது ஆண் டுகளுக்கு மேலான தொடர்ச்சியான அவருடைய அரசியலை நடுநிலையாக மதிப்பிடும் ஒருவர் இலங்கையின் சமூக, அரசியல், பொருளாதார வளர்ச் சிக்கு அவரு டைய பங்களிப்பைப் பொறுத்தவரை அவர் காலத்து ஏனைய அரசியல் தலைவர்களைப் போலவே அவரும் ஒரு தோல்வியடைந்த (unsuccessful) அரசியல் தலைவர்தான் என்ற முடி வுக்கே வரமுடியும்.

அரசியலப் பொறுத்தவரை தனது மாமன் ஜே. ஆரைப் போலவே அவரும் சர்வாதிகார மனப் போக்கு டையவர் எனலாம். 1994ல் கட்சித் தலைமையை ஏற்றபின் அதற்குள் வேறு தலைமைத்துவம் உருவாவதை அவர் அனுமதிக்கவே இல்லை. அதுவே பின்னர் அவருடைய வீழ்ச் சிக்கு வழிகோலியது. அவருடைய விட்டுக்கொடுக்காத மனப்பாங்கினால் 2019 ஜனாதிபதி தர்தலில் அவருடைய கட்சி இரண்டாக உடைய நேர்ந்தது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)



ஈழநாடு



# கோட்டாபயவின் வெளியேற்றமும்...

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

2020 பொதுத் தேர்தலில் அவருடைய கட்சி முற்றாகத் துடைத்தெறியப்பட்டது. 1977ல் ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்ற கட்சியில் தலைவர் உட்பட ஒருவரும் வெற்றிபெற முடியவில்லை . அகில இலங்கை ரீதியில் அவருடைய கட்சிக்கு 249435 (2.15%) வாக்குகளே கிடைத்தன. அவர் போட்டியிட்ட கொழும்பு மாவட்டத்தில் அவரது கட்சிபெற்ற மொத்த வாக்குகள் 30875 (2.61%) மட்டுமே. ஒரு காலத்தில் ஐந்து லெட்சம் வாக்குகள் பெற்ற விக்கிரமசிங்க ஐயாயிரம் வாக்குகளே பெற்றார் என்று கூறப்படுகின்றது (சரியான எண்ணிக்கை கிடைக்கவில்லை) 2020 பொதுத் தேர்தலில் ரணில் நாடளாவிய ரீதியில் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட அரசியல் தலைவரானார். அவருடைய கட்சிக்குத் தேசியப் பட்டியலில் மட்டும் ஒரே ஒரு இருக்கை கிடைத்தது. அந்த இடத்துக்கு யாரை நியமிப்பது என்பது பற்றி ஆறு மாதங்களுக்குமேல் இழுபறிப்பட்டு கடைசியில், தானே பாராளுமன்றத்துக்குள் நுழைந்தார். ரணில் விக்கிரமசிங்கவின் சுருக்கமான அரசியல் வரலாறு இதுதான்.



அவர் ஜனநாயக மரபுகளை மதிக்கும் ஒரு அரசியல் தலைவராக இருந்தால் அவர் அப்போதே அரசியலில் இருந்து ஓய்வு பெற்றிருக்க வேண்டும் தேசியப் பட்டியலில் வேறு ஒருவரைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பியிருக்க வேண்டும். துரதிஷ்டவசமாக நமது அரசியல் பண்பாட்டில் அந்த நாகரீகத்துக்கு இடம் இல்லை . தேசியப் பட்டியல் மூலம் அவர் பாராளுமன்றத்துக்கு நியமிக்கப்பட்டது அரசியல் யாப்பு 99 யு சரத்துக்கு முரணானது என்று குற்றம் சாட்டப்பட்டது.


உண்மையில் தேசியப் பட்டியல் உறுப்புரிமை தொழில் ரீதியான அரசியல்வாதிகளுக்கு உரியதல்ல. தேர்தலில் போட்டியிட விரும்பாத, அல்லது தேர்தலில் போட்டியிட முடியாத, அறிவாளிகள், புலமையாளர்கள், தொழில் வாண்மையாளர்கள் போன்ற சமூகத்தில் உயர் நிலையில் உள்ளவர்களின் சேவையை நாட்டு நலனுக்குப் பயன்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது.

ஒரு கட்சி தேர்தலில் வேட்புமனு சமர்ப்பிக்கும் போது தேசியப்பட்டியல் ஒன்றையும் சமர்ப்பிக்க வேண்டும். தேர்தல் முடிவு வெளிவந்த பின் அந்தப் பட்டியலில் உள்ளவர்களையே நியமிக்க வேண்டும். ஆனால் அரசியல் கட்சிகள் அதைக் கடைப்பிடிப்பதில்லை. தமக்குச் சாதகமான வகையில் அரசியல் அமைப்புக்கு முரணாகத் தேர்தல் சட்டத்தை மாற்றிக்கொண்டார்கள். அதன்படி தேசியப் பட்டியலுக்குக் கட்சித் தலைமை விரும்பும் யாரையும் நியமிக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டது.

அவ்வகையிலேயே தேர்தலில் தோல்வியடைந்தவர்களையும் தேசியப் பட்டியலுக்கு நியமிக்கும் முறைகேடான வழக்கம் ஏற்பட்டது. இதை யாரும் கேள்விக்கு உட்படுத்துவதில்லை. இரண்டு சந்தர்ப்பங்களில் மட்டும் (ஏற்கனவே ரத்னசிறி விக்ரமநாயக்க, விஜயதாச ராஜபக்ச ஆகியோரின் நியமனத்தின் போதும் (2004) அண்மையில் பஸில் ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க இருவரின் நியமனத்தின்போதும்) இது கேள்விக்கு உட்படுத்தப்பட்டது. ஆனால் அது மாற்றப்பட வில்லை.

குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பது என்பது போல நாட்டின் இன்றய இக்கட்டான குழம்பிய சூழலைப் பயன்படுத்தி பிரதமராகவும் இடைக்கால ஜனாதிபதியாகவும் அவர் பதவி ஏற்றுவிட்டார். பொதுத்தேர்தலில் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட, மக்கள் ஆணை இல்லாத ஒருவர் இந்தப் பதவிகளுக்கு எப்படி வந்தார்? இடைக்கால ஜாதிபதியாகவும் தானே வரவேண்டும் என்ற மன ஓர்மை அவருக்கு எப்படி வந்தது? இதுதான் ஆசியாவின் அதிசயம் என வருணிக்கப்படும் இலங்கையின் ஜனநாயகம்.

இதை வேண்டுமென்றால் சர்வாதிகார ஜனநாயகம் என்று நாம் பெயரிடலாம். ரணில் விக்கிரமசிங்கவின் தேர்வு சட்டரீதியானது என்று யாரும் வாதிடலாம். அது சரியே அனால் அதற்குத் தார்மீக, ஜனநாயக அடிப்படையும் ஏற்புடைமையும் இல்லை என்பதே பலரின் கருத்தாகும். வழக்கில் உள்ள அரசியல் கலைச்சொல் ஒன்றைப் பயன்படுத்திச் சொல்வதானால் பாராளுமன்றத்தில் நடந்து முடிந்த ரணிலின் தேர்வை



அரசியல் யாப்புரீதியான ஒரு சதிப் புரட்சி (constitutional coup) என்று வர்ணிக்கலாம். இன்றைய சர்வாதிகார அரசியல் யாப்பை நீக்கி, புதிய அரசியல் முறை ஒன்ற உருவாக்க வேண்டும் என்பதுற்கு இதைவிடத் தகுந்த காரணம் வேறு ஏதும் தேவை இல்லை...

யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ரணில் விக்கிரம சிங்க இப்போது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு, பதவி ஏற்றிருக்கிறார். ஆயினும் போராட்டக் காரர்கள் இன்னும் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். ஆட்சி மாற்றத்துக்கான அவர்களுடைய கோரிக்கை அப்படியே இருக்கிறது. ரணில் விக்ரமசிங்கவைப் பதவிக்குக் கொண்டுவருவதற்காக அவர்கள் போராடவில்லை . அதிகார வர்க்கத்தினர், அரச ஆதரவாளர்கள் சிலர் கருதுவது போல இது வழிதவறிய இளைஞர்களின், ஜனநாயக விரோதிகளின், பாசிச வாதிகளின் போராட்டமல்ல. அதிகார வர்க்கத்தினரால் உலகெங்கும் இத்தகைய மக்கள் எழுச்சிகள் இவ்வாறுதான் அடையாளப்படுத்தப்படுகின்றன. அது தவறான விளக்கமாகும். காலிமுகத் திடலில் உள்ளவர்கள் மட்டுமல்ல போராட்டக்காரர்கள். அவர்கள் அதில் ஒரு சிறு பகுதியினர்தான்.

> ரணில் விக்கிரமசிங்க சர்வாதிகார மனப்பான்மை உடையவர் என்று சொன்னேன். ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் நாற்று மேடையில் வளர்க்கப் பட்டவர் அவர். 1977ல் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தவர் ஜே. ஆர். தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் அவர் செய்து கொண்ட உடன்பாட் டுக்கு ஏற்ப, பேச்சுவாதர்த்தைகள் மூலம் மிக இலகுவாக அதிகாரப் பகிர்வு மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வை அவர் கண்டிருக்க முடியும். ஆனால் அதற்கு அவர் சம்மதமில்லை

முன்னரங்கில் இருப்பவர்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம். பொருளாதார ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்ட, தாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதாக உணர்ந்த இலட்சோப இலட்சம் மக்களின் போராட்டமாக அது கருதப்பட வேண்டும். நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பல்லாயிரக் கணக்கான மக்கள் தெருவில் இறங்கி எதிர்ப்புத் தெரிவித்தார்கள் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஜனநாயக உணர்வு கொண்ட முற்போக்காளர்களான ஏராளமான கல்வியாளர்கள், தொழிவாண்மையாளர்கள், தொழிற்சங்க இயக்கங்கள், சட்டத்தரணிகள், மருத்துவர்கள், சிவில் சமூகத்தினர், மதகுருமார் பல்கலைக்கழக மாணவர்கள் போன்ற சமூகத்தின் பல்வேறு பிரிவினர்கள் இதற்கு ஆதரவாகச் செயற்பட்டார்கள் என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இவர்கள் எல்லோருடைய நோக்கமும் ராஜபக் சக்களை அகற்றிவிட்டு வேறு ஆட்சியாளரைப் பதவியில் இருத்துவதல்ல. பதிலாக, புதிய அரசியல் அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி, எல்லோருக்கும் சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்கும் இனவாதமற்ற, ஊழலற்ற மக்கள் நல அரசு ஒன்றை நிறுவுவதுதான் என்பதை பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் புரிந்துகாள்ள வேண்டும்... அந்தப் புரிதல் பரவலாக ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்ல.

ரணில் விக்கிரமசிங்க சர்வாதிகார மனப்பான்மை உடையவர் என்று சொன்னேன். ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் நாற்றுமேடையில் வளர்க்கப்பட்டவர் அவர். 1977ல் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தவர் ஜே. ஆர். தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் அவர் செய்து கொண்ட உடன்பாட் டுக்கு ஏற்ப, பேச்சுவாதர்த்தைகள் மூலம் மிக இலகுவாக அதிகாரப் பகிர்வு மூலம் தேசிய இனப்பிரச்சி னைக்கு ஒரு சுமுகமான தீர்வை அவர் கண்டிருக்க முடியும். ஆனால் அதற்கு அவர் சம்மதமில்லை .

1978ல் புதிய அரசியல் அமைப்பைக் கொண்டு வந்து சர்வ வல்லமை கொண்ட முடிசூடா மன்னராகத் தன்னை நியமித்துக்கொண்டு, தமிழ் விடுதலை இயக்கங்களை அழிப்பதற்கென்றே பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கொண்டுவந்து பயங்கரவாதத்தை அழிப்பதற்குப் பதிலாக அதை வலுப்படுத்தி முப்பது ஆண்டு யுத்தத்தில் நாட்டை அழிவுப்பாதையில் இழுத்துவிட்டவர் அவர். ரணில் விக்கிரமசிங்க அவரோடு இணைந்து செயற்பட்டவர். அதே அடக்குமுறை மனப்பாங்குதான் இன்னமும் அவரிடம் இருப்பதாகத் தெரிகின்றது.

தற்காலிக ஜனாதிபதியாக அவர் பதவியேற்ற உடனேயே போராட்டக்காரர்களை பாசிசவாதிகள் என்று பட்டம் சூட்டியதும் ராணுவத்தை ஏவிவிட முயன்றதும் அதன் விளைவுதான். இடைக்கால ஜனாதிபதியாகப் பதவியேற்ற 24 மணிநேரத்துக்குள் போராட்டக் காரர்மீது வன்முறையைப் பிரயோகித்து அவர்களை அகற்ற முயன்றதும், அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகக் கூறுவதும் அவர் இன்னும் அதே மனப்பாங்குடன்தான் இருக்கிறார் என்பதையே காட்டுகின்றது. இது நாட்டை இன்னும் சிக்கலுக்குள்ளும் நெருக்கடிக்குள்ளும் தள்ளிவிடுவதிலேயே முடியும் என்பதை நாம் வலியுறுத்த வேண்டும்.

போராட்டக்கார்களுக்கும் மக்களுக்கும் தனது புதிய கொள்கை செயற்பாடுகள் பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுவதன் மூலம் எதையும் சாதிக்க முடியாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். வெளியேற்றப்பட்ட முன்னாள் ஜனாதிபதி பயன்படுத்த முயலாத படைபலத்தை அதிஷ்டவசமாக இடைக்கால ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்த முயல்வது புத்திசாலித்தனம் அல்ல.

# டலஸ் - சஜித் கூட்டுத்தோல்வி

**பனங்காட்டான்**

ரணிலின் வெற்றி என்பது டலஸ்-சஜித் கூட்டின் தோல்வி என்பதைவிட, பெரமுனவின் ஜி.எல். பீரிசுக்கும், கூட்டமைப் பின் சுமந்திரனுக்கும் கிடைத்தபெரும் தோல்வி. நாடாளுமன்ற உறுப்பி னர்கள் இவர்களின் முகத்தில் அழிக்க முடியாத கரியைப் பூசியுள்ளனர். தங்களை 'கிங் மேக்கர்'கள் எனநினைத்த இவர்கள் இருவரும் அடுத்த தேர்தலுக்கு முன்னரேயே அவர்களின் மக்களால் 'கோஹோம்' பட்டியலுக் குள் இணைக்கப் படுவார்களானால் ஆச்சரியப்படநேராது.

## 'கோஹோம்'பட்டியலுக்குள் ஜி.எல்.பீரிசையும் சுமந்திரனையும் விரைந்து இழுத்துச் செல்கிறது!



அதிர்ஸ்டம் வருமென்றால் அது கூரையைப் பிய்த்துக் கொண்டும் வருமென் பர். இதுதான் இப்போது இலங்கை அரசியலில் நடந்துள் ளது.

ராசியில்லாத ராஜாவாக இதுவரை இருந்தவர், கடந்த பொதுத் தேர்தலில் யாவையும் இழந்துபூச்சியத்தின் மன்ன னாக மாண்பேற்றப்பட்டவர், நாற்பத்தைந்து வருடகால அரசியல் அனுபவத்தை ஓர் இரவோடுபுதைத்தவர் - இப் போதுஅந்தத் தீவின் எட்டா வது ஜனாதிபதியாகியுள்ளார். அகில உலக வரலாற்றில் புதுமையான புதினமாக இது பதியப்பட்டுள்ளது. இந்த எதிர் பாராத பெருமையை பெற்றுள்ளார் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் அரசியல் வாரிசான ரணில் விக்கிரமசிங்க.



முள்ளிவாய்க்கால் நினைவேந்தும் மாதத்தில் கோட்டாபய அணிக்கு எதிரான போராட்டம், ராஜபக்ச சகோ தரர்களையும் அவர்களின் புதல்வர் களையும் அரசஉயர் பதவிகளிலிருந்து படிப்படியாக அகற்றி, இறுதியில் கறுப்பு யூலை நினைவேந்தலான இந்த மாதத்தில் கோட்டாவையும் நாட்டை விட்டுஓடச் செய்தது.

ராஜபக்சக்களுக்கு எதிரான அவர்க ளது மக்களின் எழுச்சி, புரட்சிகரமான ஒரு முடிவை அரசியல் சதுரங்கத்தில் ஏற்படுத்தியமைக்கு, போராட்டக்காரர் களின் இலக்கின்மையே காரணமென்று கூறலாம்.

கோட்டா கோஹோம் கோசத்து டன் இதனைஆரம்பித்தவர்கள்,தங்கள் போராட்டம் சிலவேளைவெற்றி பெறாது என்று எண்ணியிருக்கலாம் அல்லது இவ்வளவு விரைவாக ராஜ பக்சக்கள் ஓடுவார்கள் என்றும் நினைக் காதிருந்திருக்கலாம். அதனால்தான், அதன் பின்னர் என்னசெய்வது என்று திட்டமிடாது போனதற்குக் காரணமா கவும் அமைந்திருக்கலாம். எந்த ஒரு செயற்பாட்டுக்கும் திட்டமிடலும் திட்டச் செயற்படுத்தலும் கரங்கோர்த் திருக்க வேண்டும்.ஆனால் காலிமுகத் திடல் அதில் தவறிவிட்டது.

முன்னர் ராணி மாளிகை என அழைக் கப்பட்ட தற்போதைய ஜனாதிபதி மாளிகைக்குள் போராட்டக்காரர்கள் புகுந்தபோதுஅங்கிருந்த கோட்டாவும் மனைவியும் (பசிலும் இருந்ததாக இப் போது கூறப்படுகிறது) பின்கதவால் பாய்ந்துகடற்படைக் கப்பலில் தப்பிச் செல்லநேர்ந்தது.

மாளிகைக்குள் புகுந்தபோராட் டக்காரர்கள் என்னசெய்தனர்? நீச்சல் தடாகத்தில் குளித்தனர். படிக்கட்டு களில் துள்ளிவிளையாடினர். சோபாக் களில் அமர்ந்துமகிழ்ந்தனர். பஞ்சணை யில் உருண்டுபுரண்டனர். சமையலறைக் குள் இருந்தஉணவுப் பொருட்களை உண்டு களித்தனர். கழிவறை, உடைமாற்று அறைஎன்றுஒவ்வொருஅறையாகப் புகுந்துசெல்பிஎடுத்துப் பதிவிட்டனர்.

நாட்டைமீட்க,மக்களுக்குநிவார ணம் வழங்க, ஊழலையும் மோசடி களையும் களையவென ஆட்சித் தலை மைகளை துரத்தப் புறப்பட்டவர்கள் - ஜனாதிபதி மாளிகையில் தங்கள் சின்னத்தனங்களால் போராட்டத்தின் உயர் நோக்கத்தினை சிதறடித்தனர் என்பதுமறைக்கத் தேவையில்லாத உண்மை. இதன் விளைவே இப்போ தையஅரசியல் மாற்றங்கள்.

கடந்தவாரம் இப்பத்தியில் குறிப்பிட்டவாறு, ஓடு மீன் ஓடி உறு மீன் வரும்வரை காத்தி ருந்த கொக்குப் போன்ற ரணிலின் நாடகம் இங்கிருந்துதான் ஆரம்ப மானது. அதற்கு உகந்ததாக ஜனாதிபதியின் நிறை வேற்று அதிகாரங்கள் பிரத மராக விருந்த அவருக்கு கை மாறியது.

பெயரளவில் பதில் ஜனாதிபதியாக அறிவிக் கப்பட்டு அழைக்கப்பட்ட போதும், ரணில் பிரதமர் ஆசனத்திலேயே (நாடாளு மன்றத்திலும்) அமர்ந்தி ருந்தார். ஜனாதிபதி ஆசனத் துக்கான தனது நகர்வை அவர் இலகுவாக மேற் கொள்ள இந்த மென்போக்கு அவருக்கு லாவகமாக கை கொடுத் தது.

இலங்கையில் முதன் முறையாக ஒரு ஜனா திபதி நாட்டை விட்டு பல நாடுகள் ஊடாக தப்பி ஓடி, எங்கிருந்தோ பதவி துறக்க - கடந்த பொதுத் தேர்தலில் யானையையும் சரிய விட்டு கையறு நிலை யில் நின்ற ரணில் அந்த இடத்துக்கு நிரப்பப் பட்டதே தனித்துவ மான ஒரு வரலாறு.

ஐக்கிய தேசிய கட்சி தேர்தலில் முழுமை யாகத் தோற்ற போதும் அந்தக் கட்சி களுக்குக் கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் தேசியப் பட்டியலூ டாக ஓர் இடம் கிடைத்தது. அதன் வழியாக நாடாளுமன்றம் செல்ல பத்து மாதங்களாக ரணில் மறுத்து வந் தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் அன்றைய பிரதமர் மகிந்த கேட்டுக் கொண்ட போதும் கூட ரணில் இணக்கம் காட்டவில்லை.

ஆனால்,பத்துமாதங்களின் பின்னர் 2021 யூன் 23ல் தேசியப் பட்டியலுாடாக நாடாளுமன்றம் புகுந்தரணில் ஒரு வருடத்தின் பின்னர் இப்போது பிரத மராகி, ஜனாதிபதியும் ஆகிவிட்டார் என்பதுபலரும் மூக்கில் விரலை வைத்து வியக்கும் பாடம்.

போராட்டம் வீச்சுப்பெற்ற வேளை மகிந்த பிரதமர் பதவியை ராஜி னாமா செய்ததையடுத்து அந்த இடத் துக்கு எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேம தாசவை நியமிக்க கோட்டா விரும்பினார். ஆனால் சஜித், ஜனாதிபதி கதிரையில் கண் வைத்து பிரதமர் பதவியை நிராகரித் தார். பழம் நழுவிப் பாலில் விழுந்தது போன்று பிரதமர் பதவிரணில் வசமானது.

கோட்டாவின் பதவி விலகலைய டுத்து புதிய ஜனாதிபதியை நாடாளு மன்றம் தெரிவு செய்ய முடிவெடுக்கப் பட்டது. ரணில்,டலஸ் அழகப்பெரும, அநுரகுமார திசநாயக்க ஆகிய மூவரும் களத்தில் இறங்கினர். பரபரப்பாக எதிர் பார்க்கப்பட்ட சஜித் பிரேமதாச தமது தோல்வியை முற்கூட்டியே அறிந்து நழுவிக் கொண்டார். அதேசமயம் பொது ஜன பெரமுனஉறுப்பினரானடலஸ் அழ கப்பெருமவைஆதரிக்கும் நிலைப் பாட்டை திடுதிப்பெனஅறிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ரணிலை,பொதுஜன பெரமுனவின் தினேஸ் குணவர்த்தன முன்மொழிய சஜித் தின் மக்கள் சக்தி கட்சியைச் சேர்ந்தமனு சநாணயக்கார வழி மொழிந்தார். பொதுஜன பெரமுனவின் டலஸை சஜித் பிரேமதாச முன் மொழியபெரமுன வின் அக்கிராசனரான ஜி.எல்.பீரிஸ் வழி மொழிந்தார். ஜே.வி. பியைசேர்ந்த அநுரகுமாரவை அவரது கட்சியினரே முன் மொழிந்து வழி மொழிந்தனர். பொதுஜன பெர முனவைச் சேராத, அதற்கு எதிரான கட்சிகளின் தலைவர்களானரணிலும், சஜித்தும் பொதுஜன பெரமுனவின் வாக்குகளை நம்பிபோட்டியில் குதித் தது இலங்கைஅரசியலில் விசித்திரமான ஒன்று. இதன் பின்னணியை இங்கு பார்க்க வேண் டியதுஅவசியம்.

ஓர் எதிரியை வீழ்த்த, அவரின் இரண்டு எதிரிகள் ஒன்றிணைந்ததே இந்தத் தேர்தலைஉற்றுநோக்கவைத்தது. அரசியல் ரீதியாகரணிலின் முதலாவது பரம்பரை எதிரி சஜித். இது ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கும் ரணசிங்க பிரேம தாசவுக்கும் இடையில் 1970களில் ஆரம்ப மானது. தமது தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் உதவித் தலைவராக இருந்து விட்டு அதனை உடைத்துக் கொண்டு வெளியேறிய சஜித் புதிய கட் சியை உருவாக்கி பொதுத் தேர்தலை சந் தித்த போதே ரணில்-சஜித் பிளவு நிலை யானது. கடந்த தேர்தலில் ரணிலை அகௌ ரவப் படுத்தியதேர்தல் முடிவுக்கும் சஜித்தே காரணமாக அமைந்ததால் அவ ரைத் தமது பரம எதிரியாகவே ரணில் எடுத்துக் கொண்டார்.

இந்நிலையில் எச்சந்தர்ப்பத்திலும் சஜித் எந்தஉயர் பதவிக்கும் வரக்கூடா தென்பதில் கூர்மையாக இயங்கிவரும் ரணில், அதற்காக அன்று ஜே.ஆர். ஜெய வர்த்தன சொன்னது போன்று தேவைப் பட்டால் எந்தப் பேயுடனும் பிசாசுட னும் சேர்வதற்கு தயங்காதிருந்தார்.

மறுபுறத்தில், நாற்பதுக்கும் அதிக மான எம்.பிக்களுடன் உள்ளமக்கள் சக்திக் கட்சியின் தலைவரான சஜித் எவ்வகையிலும் அரசியலில் உயர்ச்சி பெறக்கூடாதென்பதில் பொதுஜன பெரமுனமிகக் கவனமாக உள்ளது. ஆகக் குறைந்தது சஜித் பிரதமர் பதவியைப் பெற்றால்கூட இனிவரப் போகின்ற அனைத்துத் தேர்தல்களிலும் பொதுஜன பெரமுனவுக்குஅதுபெரும் சவாலாக இருக்குமென்பதில் ராஜபக்சக்கள் (குறிப்பாகமகிந்த - பசில்) மிகவும் விழிப் பாக இருந்துவருகின்றனர்.

சஜித்தை மேலெழும்ப விடக்கூடாது என்பதை விட அவரை முழுமையாக வீழ்த்த வேண்டுமென்றால் - தங்களுக் கெதிரான மக்கள் எழுச்சிக் காலத்தில் ரணிலை முன்னிலைப்படுத்தி அரசாட் சியை சீர் செய்வதே சரியான நிலைப் பாடு என்பதுபொதுஜன பெரமுனவின் சிந்தனை. இது ரணிலுக்கும் தெரியும். இவர்கள் இருவருமேதங்கள் பொது எதிரியை (சஜித்) வீழ்த்துவதற்கு ஜனாதி பதித் தேர்தலைசரியாக பயன்படுத்திக் கொண்டனர்.



இதனை முதலாம் கட்டமென எடுத்துக் கொண்டால் அதில் பொதுஜன பெர முனவெற்றி கண்டுள் ளது. அதே சமயம் பொதுஜன பெரமுன வின் அக்கிராசனரான ஜி.எல்.பீரிஸ் தமது கட் சியை மிகவும் நெருக் கடிக்குள் தள்ளியுள்ளார். ரணிலை அடியோடு விரும்பாத ஜி.எல்.பீரிஸ் தருணம் பார்த்துட லஸை ஆதரித்ததோடு சஜித்தின் ஆதரவையும் அவருக்கு பெற்றுக் கொடுத்தார்(?).

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# வாழ்வாதாரத்தை இழந்துள்ள சந்தை மரக்கறி வியாபாரிகள்

பொருளாதார நெருக்கடி காரணமாக மரக்கறி வியாபாரிகளும் கடுமையான பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றார்கள். எரிபொருள் பிரச்னை, மரக்கறி விலையேற்றம் காரணமாக அவர்களின் வாழ்வாதாரமும் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றது.

மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய செல்லும் வாகனங்களுக்கு எரிபொருள் இன்மையால் அவர்கள் பெரும் திண்டாட்டத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள். சந்தைகளுக்கு மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய வரும் நுகர்வோரின் எண்ணிக்கையும் வெகுவாகக் குறைந்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். முன்னரைப் போன்று அல்லாமல் தற்போது மிகக் குறைந்த அளவிலேயே மரக்கறிகளைக் கொள்வனவு செய்து வருகின்றார்கள்.

இது குறித்து சந்தைகளில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபடுவோர் தமது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.



அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்



**சாந்தரூபன்**
கல்வியங்காடு

## மரக்கறி நுகர்வு வெகுவாக குறைவு

நான் கல்வியங்காடு சந்தையில் மரக்கறி விற்பனை செய்கின்றேன். தற்பொழுது டீசல் பிரச்னை காரணமாக சந்தைக்கு வரும் மக்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுகின்றது.

அத்தோடு மரக்கறி விலை அதிக அளவில் உயர்ந்துள்ளது. அனைவரும் வந்து மரக்கறி விலை கேட்டுவிட்டு வாங்காது செல்லும் நிலைமை காணப்படுகின்றது. அத்தோடு தற்பொழுது எரிபொருள் பிரச்னை காரணமாக மரக்கறி விலையானது அதிகரித்து காணப்படுகின்றது. முதல் இருந்த விலைக்கு தற்போதுள்ள விலைக்கும் கடும் வித்தியாசம் காணப்படுகின்றது. முதல் 150 ரூபா விற்ற உருளைக்கிழங்கு இப்போது 230 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

அதே போல கத்தரிக்காய் மற்றும் உள்ளூர் உற்பத்திகள்கூட விலை அதிகரித்து காணப்படுகிறன. குறிப்பாக விவசாயிகளுக்கு மண்ணெண்ணெய் மற்றும் டீசல் எரிபொருள் இல்லாமல் காரணமாக மரக்கறியின் விலை அதிகரித்து காணப்படுகின்றது.

அதாவது மரக்கறி இருந்தும் அதனைக் கொள்வனவு செய்து கொண்டு வந்து சந்தையில் கொடுப்பதற்குரிய எரிபொருளின்மையின் காரணமாக சிலர் வீடுகளில் வைத்து மரக்கறி விற்று தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்கின்றனர். இதன் காரணமாக மரக்கறிச் சந்தையில் முன்னரே போல வியாபாரம் இடம் பெறுவதில்லை.

அதேபோல் மரக்கறி கொள்வனவு செய்வதற்கு போதிய அளவு நிதி இல்லாதமையால் மரக்கறி வியாபாரம் மிகவும் மந்த கதியில் இடம் பெறுகின்றது-என்றார்.

## எரிபொருள் விலை உயர்வால் மரக்கறி கொள்வனவு பாதிப்பு



**ஜெயேந்திரன்**
கல்வியங்காடு

சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்கிறேன். பெற்றோல் இன்மையினால் மக்களின் வருகை குறைவாக காணப்படுகின்றது. இதனால் எமது வியாபாரமும் குறைவாக காணப்படுகின்றது. போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்துள்ளதன் காரணமாக 150 ரூபாய் போன ஓட்டோ கட்டணம் தற்போது உயர்வாக காணப்படுகின்றது.

அத்தோடு பொதுமக்கள் தற்பொழுது மரக்கறி வாங்குவதும் குறைவாக காணப்படுகின்றது. அதேபோல பெற்றோல், டீசல் விலை காரணமாக மரக்கறி விலை அதிகரித்து காணப்படுகின்றது.

தற்போதைய காலப் பகுதியில் மரக்கறி விலை குறைவது வழமை. ஆனால் தற்போது மரக்கறி விலை அதிகரித்து காணப்படுகின்றது.

உருளைக்கிழங்கு மற்றும் ஏனைய பொருட்கள் மிகவும் விலை உயர்ந்து காணப்படுகின்றன. அத்தோடு தம்புள்ளை மரக்கறி சந்தையில் இருந்து மரக்கறிகள் வராதமையால் இங்கே உள்ளூர் மரக்கறிகள் விலை அதிகரித்து காணப்படுகின்றது. மரக்கறி விலை அதிகரித்துள்ளதன் காரணமாக வியாபாரம் மிகவும் குறைவடைந்துள்ளது. நமது வியாபாரம் பெரிதும் பாதிக்கப்படுவதன் காரணமாக யாழ்.மாவட்டத்தில் மரக்கறி வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 30 வருடமாக மரக்கறி வியாபாரம் செய்கின்றேன். வழமையைவிட மரக்கறி வாங்க வருபவர் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது. வருபவர்களும் மரக்கறி வாங்குவதாக இல்லை. இதனால் எமக்கு வருமானம் குறைவாக காணப்படுகின்றது.

தற்போது பொருளாதார நெருக்கடியில் மரக்கறி வியாபாரம் மிகவும் மந்தகதியில் இடம்பெறுகிறது.

தற்பொழுது 400 ரூபா வரை கத்திரிக்காயின் விலை அதிகரித்துள்ளதனால் கொள்வனவு செய்யும் அளவும் குறைவாக காணப்படுகின்றது.

எரிபொருள் மற்றும் ஏனைய பிரச்னைகள் காரணமாக மக்கள் மரக்கறி கொள்வனவு செய்வதில் முன்னரை போல ஆர்வம் காட்டவில்லை.

விலையை விசாரிப்பார்கள் ஆனால் வாங்குவதாக இல்லை. அவ்வாறு வாங்குவதாக இருந்தாலும் அரை கிலோவுக்கு குறைவாகவே வாங்கிச் செல்கின்றார்கள். இதன் காரணமாக நீண்ட காலமாக மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் என்னைப் போன்ற அனைத்து வியாபாரிகளும் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள்.

## வாழ்வாதாரம் பெரும் பாதிப்பு

நீண்ட காலமாக நான் மரக்கறி கடை நடத்தி வருகின்றேன். நான் இந்த மரக்கறி கடை மூலம் வாழ்க்கையில் முன்னேறி வந்தேன். தற்பொழுது மரக்கறி அதிக விலை என்பதால் கடைகளில் வியாபாரம் இல்லை. நான் விறகு விற்றுத்தான் பிழைப்பை நடத்துகின்றேன்.

பெற்றோல் இல்லை. அனைத்துப் பொருட்களும் விலையேற்றம் காரணமாக இந்த மரக்கறியும் அதிக விலையில் விற்கப்படுகின்றது. ஒரு நாளைக்கு 1ஃ2 கிலோ மரக்கறிகளை மாத்திரம் நான் கொள்வனவு செய்து விற்பனை செய்கின்றேன்.

முன்னரைப் போலஅல்லாது மரக்கறி வாங்குவோர் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. மரக்கறி வாங்குவோரும் அளவுகளை குறைத்துத்தான் வாங்குகிறார்கள். இதன் காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக கொள்வனவு செய்தே விற்பனை செய்து வருகின்றோம்.

100 ரூபாய் விற்ற கத்தரிக்காய் இன்று 400 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது. அதனால் எனது கொள்முதல் அரை கிலோவாகவே உள்ளது. அந்த அரை கிலோவினையும் விற்று எனது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்றேன்.

திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் தான் கடைக்கு தேவையான மரக்கறிகளை கொள்வனவு செய்வேன். இப்போது திருநெல்வேலி மரக்கறிச் சந்தையில் அதிக விலையில் மரக்கறி விற்பதனால் என்னைப் போன்ற சிறு சிறு மரக்கறி வியாபாரிகள் கொள்வனவு செய்யும் மரக்கறியின் அளவு குறைந்து காணப்படுகின்றது.



அத்தோடு நாங்கள் அரைக் கிலோ அளவில் மரக்கறிகளை கொள்வனவு செய்து அதில் எஞ்சியவற்றை வீட்டுக்குக் கொண்டு சென்று சமைக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.

அதேபோல முன்னர் எமது கடைகளுக்கு வருவோர் ஒரு கிலோ அளவுக்கு மேல் மரக்கறி கொள்வனவு செய்வார்கள்.ஆனால் தற்பொழுது அந்த நிலைமை மாறிவிட்டது.ஓரிரு மரக்கறிகளை கையில் எடுத்துக் கொண்டு இதனை எவ்வளவு இருக்கின்றது என்று பார்த்து சொல்லுங்கள் என்ற நிலைக்கு வந்துவிட்டது. எனவே என்னிடம் மரக்கறி வாங்க வருபவரும் குறைத்தமையினால் எமக்கு வியாபாரம் இடம் பெறவில்லை-என்றார்

# வெளியாகும் முன்பே இலாபம்!



விஜய் - ராஷ்மிகா நடிப்பில் இயக்குநர் வம்சி இயக்கத்தில் தயாராகிறது வாரிசு படம். இதன் படப்பிடிப்பு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இந்நிலையில், படத்தின் வியாபார இடம்பெற்றுள்ளது. கடும்போட்டிக்கு மத்தியில் அமேசன் நிறுவனம் ஒ. டி. டி. உரிமைய 100 கோடி இந்திய ரூபாய் கொடுத்து வாங்கியதாகவும், சட்டி லைட் உரிமையை பிரபல தொலைக்காட்சி 65 கோடி கொடுத்து வாங்கியதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

இந்த இரு உரிமைகளும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிகளுக்குமானதாம். ஹிந்தி உரிமை 30, 40 கோடி வரை போகலாம் என்கிறார்கள்.

படத்தில் விஜயின் சம்பளம் மட்டும் 120 கோடி, இதர சம்பளம் தயாரிப்புச் செலவு என 80 கோடி என்றாலும் ஒளிபரப்பு உரிமையிலேயே படம் இலாபத்தை தந்துவிட்டதாகக் கூறுகிறார்கள்.



# விக்ரமுடன் ராஷ்மிகா

நட்சத்திரம் நகர்கிறது படத்தை அடுத்து ஞான வேல் ராஜாவின் ஸ்டுடியோ கிரீன் நிறுவனம் தயாரிக்கும் விக்ரம் 61ஆவது படத்தை இயக்கப் போகிறார் பா.ரஞ்சித். ஜீ. வி. பிரகாஷ் இசையமைக்கும் இந்த படம் கே. ஜி. எவ்வில் 19ஆம் நூற்றாண்டில் நடந்த உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்ட கதையில் உருவாகிறது. நாயகி உள்ளிட்ட மற்ற நடிகர்கள் தேர்வு நடந்தது வருகிறது.

இந்த நிலையில் விக்ரம் 61வது படத்தில் நாயகியாக ராஷ்மிகா மந்தனா நடிக்கவுள்ளார் என்று கூறப்படுகிறது. கார்த்தி நடித்த சுல்தான் படத்தில் தமிழில் அறிமுகமான ராஷ்மிகா, தற்போது விஜய்யுடன் வாரிசு படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

# மெயகாப்பளராக தமன்னா




தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகை தமன்னா. நயன்தாரா, சமந்தா, அனுஷ்கா, திரிஷா, ஹன்சிகா பாணியில் தமன்னாவும் தற்போது தனி நாயகியாக படங்களில் நடிக்கத் தொடங்கி உள்ளார். அப்படியான ஒரு படம் பாப்ளி பவுன்சர்.

இந்த படத்தின் முதல் பார்வெளியாகியுள்ளது. தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளில் ஓடிடி தளத்தில் வெளியாவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தமன்னா பெண் மெய்க்காப்பாளராக நடித்துள்ளார். நகைச்சுவை கலந்த அதிரடிப் படமாக உருவாகியுள்ளது. செப்ரெம்பர் 23ஆம் திகதி வெளியாகும்.

# மீண்டும் வருகிறார் நானி



தெலுங்கில் நடிகராக வலம்வரும் நானியைத் தமிழுக்குக் கொண்டுவர பலரும் முயற்சி எடுக்கிறார்கள். தமிழில் “வெப்பம்” படத்துக்குப் பிறகு நானி இதுவரை படம் செய்யவில்லை. இதற்கிடையே, இங்கிருந்து போய் கதை சொல்லும் இயக்குநர்களிடம், “மீண்டும் தமிழுக்கு வர நான் பிரமாண்ட இயக்குநர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரின் திகதிக்காகக் காத்திருக்கிறேன்” என்கிறாராம் நானி.

# இந்திய தேசிய விருது தமிழுக்கு 10 விருதுகள்



68ஆவது இந்திய தேசிய திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் சிறந்த நடிகர் (சூர்யா), நடிகை (அபர்ணா பாலமுரளி), பின்னணி இசை, படம், திரைக்கதை உள்ளிட்ட 5 விருதுகளை “சூரரைப்போற்று” படம் வென்றுள்ளது. சிறந்த தமிழ் படமாக வசந்த் இயக்கிய, “சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்”படம் தேர்வாகி உள்ளது. ஒட்டுமொத்தமாக தமிழ் படங்கள் மட்டும் 10 விருதுகளை வென்றுள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா தாக்கம் இருந்ததால் தேசிய விருது அறிவிப்புகள் தள்ளிப் போயின. இந்நிலையில் 2020ம் ஆண்டிற்கான 68ஆவது இந்திய திரைப்பட விருதுகள் பற்றிய அறிவிப்பை டில்லியில் வெளியிட்டனர்.

சுதா இயக்கத்தில் சூர்யா நடித்து ஓடிடியில் வெளியான படம் “சூரரைப்போற்று”. எயார் டெக்கான் நிறுவுநர் கப்டன் கோபிநாத்தின் வாழ்க்கையை தழுவி எடுக்கப்பட்ட இந்த படம் ரசிகர்களின் வரவேற்பை பெற்றது. அபர்ணா பாலமுரளி நாயகியாக நடித்தார். ஜி.வி.பிரகாஷ் இசையமைத்தார்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்ட தேசிய விருதில், இந்த படம் சிறந்த நடிகர் (சூர்யா), நடிகை(அபர்ணா பாலமுரளி), படம், பின்னணி இசை(ஜிவி பிரகாஷ்) மற்றும் திரைக் கதை(சுதா) என 5 தேசிய விருதுகளை அள்ளியது.

இதேசமயம், இயக்குநர் வசந்த் சாய் இயக்கிய “சிவரஞ்சனியும் இன்னும் சில பெண்களும்” படம் மொழி வாரியாக தேர்வான படங்களில் சிறந்த தமிழ் படமாக தேர்வானது. மேலும் இந்த படத்திற்கு சிறந்த துணை நடிகை(லட்சுமி பிரியா) மற்றும் சிறந்த எடிட்டர் (ஸ்ரீகர் பிரசாத்)-க்கான விருதும் பெற்றது.

அறிமுக இயக்குநர் மடோான் அஸ்வின் இயக்கத்தில் யோகி பாபு கதையின் நாயகனாக நடித்த மண்டேலா படம் தொலைக்காட்சியில் நேரடியாக வெளியானது. இந்த படத்திற்கு சிறந்த வசனம் மற்றும் அறிமுக இயக்குநருக்கான 2 விருதுகள் கிடைத்துள்ளன.




## திரைவிமர்சனம்

### திரைப்படம் - மை டியர் பூதம்

**இயக்கம் - ராகவன்**
**இசை - இமான்**
**நடிப்பு - பிரபுதேவா, ரம்யா நம்பீசன், மாஸ்டர் அஷ்வத்**

குழந்தைகளுக்கான படங்கள் தமிழ் சினிமாவில் அதிகமாக வருவதே இல்லை. எப்போதோ ஒருமுறைதான் அப்படியான படங்கள் வரும். நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஒரு சுவாரசியமான குழந்தைகள் படமாக இந்தப் படத்தைக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் ராகவன்.

“மஞ்சப் பைஇ கடம்பன்“ ஆகிய தன்னுடைய முந்தைய படங்களிலிருந்து முற்றிலும் விலகி இப்படி ஒரு படத்தை ராகவன் கொடுத்திருப்பது ஆச்சரியம்தான்.

திக்கித் திக்கிப் பேசும் குறையுடயவர் குழந்தை நட்சத்திரம் அஷ்வத். அவரின் அம்மா ரம்யா நம்பீசன். கணவர் இல்லாத குறை தெரியாமல் மகன் அஷ்வத்மீது மிகவும் பாசமாக இருக்கிறார். ஒருநாள் பாடசாலைக்கு சுற்றுலா சென்ற போது 3,000 வருடங்களாக சித்தர் ஒருவரின் சாபத்துக்கு ஆளாகி பூமியில் சிலையாக இருக்கும் பூத உலகத்தின் தலைவர் பிரபுதேவாவுக்கு உயிர் கொடுக்கிறார் அஷ்வத். இருவரும் பின்னர் நண்பர்களாகி விடுகிறார்கள். 48 நாட்களுக்குள் ஒரு மந்திரத்தை சொன்னால் மட்டும்தான் பிரபுதேவா மீண்டும் பூத லோகம் செல்ல முடியும், இல்லை என்றால் காற்றோடு காற்றாக கலந்து மறைந்து விடுவார் என்பதுதான் சாபம். பிரபுதேவாவுக்கு உயிர் கொடுத்த அஷ்வத்தான் அந்த மந்திரத்தையும் சொல்ல வேண்டும். திக்கிப் பேசும் அஷ்வத் அந்த மந்திரத்தை சொன்னாரா, பிரபுதேவா மீண்டும் பூத லோகம் சென்றாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

படத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் குழந்தை நட்சத்திரம் அஷ்வத். விஜய் சேதுபதி நடித்த “சுப்பர் டீலக்ஸ்“ படத்தில் அவர் மகனாகவும், இன்னும் சில படங்களிலும் நடித்த சிறுவன். இந்தப் படத்தில் அவருடைய நடிப்புதான் படத்துக்கு பலம். திக்கித் திக்கிப் பேசி அவ்வளவு யதார்த்தமாக நடித்திருக்கிறார். மற்ற சிறுவர்களைப் போல தன்னால் இருக்க முடியவில்லையே என அவர் கலங்கும் போது நாமும் கலங்கிவிடுவோம்.

அதிரடி, நடனம் என அசத்திய பிரபுதேவா ஒரு குழந்தைகள் படத்தில் பூதலோகத்தின் தலைவனாக ஒரு மாறுபட்ட கதாபாத் திரத்தில் நடித்திருப்பது ஆச்சரியம்தான். தலையை முழுவதுமாக மொட்டை அடித்து உச்சந்தலையில் ஒரு நீளமான குடுமியுடன், வித்தியாசமான ஆடையுடன் குழந்தைகளைக் கவரும் விதத்தில் நடித்திருக்கிறார். வேறு எந்த ஒரு நடிகராவது இப்படி நடிக்க சம்மதிப்பார்களா என்பது சந்தேகம் தான். பிரபுதேவாவுக்கும்இ அஷ்வத்திற்கும் இடையில் நட்பு என்பதைக் கடந்து ஒரு அப்பாஇ மகன் பாசம் போல அமைந்து நெகிழ வைக்கிறது.

நடுத்தர பட்ஜெட் படம், ஒரு சிறுவனுக்குத் தாய் என்றால் தமிழ் திரையுலகில் இன்றைய முன்னணி நடிகைகள் யாரும் நடிக்க சம்மதிக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட கதாபாத்திரங்களுக்காகவே இருப்பவர் ரம்யா நம்பீசன். வழக்கம்போல அவரும் இந்தப் படத்தில் சிறப்பாகவே நடித்திருக்கிறார்.

படத்தில் வேறு எந்த கதாபாத்திரங்களுக்கும் அவ்வளவு முக்கியத்துவம் கிடையாது. பிரபுதேவாஇ அஷ்வத் இருவரைச் சுற்றியேதான் மொத்த படமும் அமைந்துள்ளது. பிக் பாஸ் சம்யுக்தா ஆசிரியையாக நடித்திருக்கிறார்.

இமான் பின்னணி இசை பொருத்தமாக இருந்தாலும், பாடல்களில் இன்னும் கவனம் செலுத்தி வெற்றிபெற்றிருக்கும். யு.கே.செந்தில் குமாரின் ஒளிப்பதிவு அவருடைய அனுபவத்தை வெளிப்படுத்தி இருக்கிறது.

கிரபிக்ஸ், விஎப்எக்ஸ் ஆகியவற்றை இன்னும் செலவு செய்து தரமாக அமைத்திருக்கலாம். ஒரு தொலைக்காட்சி தொடருக்கு செலவு செய்வதைப் போலத்தான் செலவு செய்திருப்பார்கள் போலிருக்கிறது. இப்படி இன்னும் சில குறைகள் இருந்தாலும் குழந்தைகளுக்கான ஒரு படத்தைக் கொடுக்க முன் வந்த குழுவினரைப் பாராட்டலாம்.



# ஒருநாள் போட்டிகள் இனி அவ்வளவுதானா?

**இரா. அடலேறு**

இருபது - 20 கிரிக்கெட்டால் மற்ற வடிவங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்து பேசுவது கிரிக்கெட் உலகில் பல காலமாகவே நடந்து வரும் ஒன்று. அதை மேலும் உறுதிப்படுத்தும் விதமாக சில நாட்களுக்கு முன்னர் ஒரு முக்கிய சம்பவம் நடந்திருக்கிறது.

2023ஆம் ஜனவரி மாதம் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருந்த தென்னாபிரிக்க அணி அங்கு ஒருநாள் தொடரில் விளையாடவிருந்தது. ஆனால், தற்போது இத்தொடரில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளது தென்னாபிரிக்க அணி. ஐ.பி.எல் போன்ற ஒரு புதிய இருபது - 20 தொடர் தென்னாபிரிக்கா நாட்டில் தொடங்கவிருப்பதே இதற்கான காரணமாக சொல்லியிருக்கிறது அந்த அணி நிர்வாகம்.

அதில், பங்குபெறவிருக்கும் ஆறு அணிகளையும் ஐ.பி.எல் அணி உரிமையாளர்களே இந்த தென்னாப்பிரிக்க இருபது -20 போட்டிக்காக அணிகளையும் வாங்கியிருப்பதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தொடரின் அட்டவணையும் அவுஸ்திரேலியா தொடர் அட்டவணையும் ஒரே நேரத்தில் உள்ளதால் தென்னாபிரிக்க அணி இந்த முடிவை எடுத்துள்ளது.

அவுஸ்திரேலிய அணிக்கு தொடர்ந்து வேறு போட்டிகள் நடக்கவுள்ளதால் வேறு திகதிக்கு அத்தொடரை மாற்றமுடியாது என்று தெரிவித்துள்ளது. இதனால் அடுத்தாண்டு நடைபெற இருக்கும் உலகக்கிண்ணத்துக்கான ஒருநாள் சுப்பர் லீக் புள்ளி பட்டியலில் அவுஸ்திரேலியாவுக்கு 30 புள்ளிகள் தொடர் நடக்காமலே வழங்கப்படவுள்ளது. சுப்பர் லீக் புள்ளிபட்டியலில் தற்போது 11ஆவது இடத்தில் உள்ள தென்னாப்பிரிக்க அணிக்கு, அடுத்தாண்டு ஒருநாள் உலகக்கிண்ணத்துக்கு நேரடியாக தகுதி பெறும் வாய்ப்பு எட்டாக் கனியாக மாறியுள்ளது.

ஐ.பி.எல் போன்ற இருபது -20 தொடர்காளால் பாதிக்கப்படுவது டெஸ்ட் கிரிக்கெட் என்று பலரும் பேசிவரும் வேளையில் உண்மையாகவே பாதிக்கப்படுவது என்னவோ ஒருநாள் வடிவ கிரிக்கெட்தான்.

இந்தியாவில் கிரிக்கெட் ஒரு மாபெரும் விளையாட்டாக மாறியது 1983ஆம் ஆண்டு உலகக்கிண்ண வெற்றிக்கு பின்னரே. அன்று தொடங்கி இந்திய கிரிக்கெட் வரலாற்றில் பல மறக்கமுடியாத ஒருநாள் போட்டிகள் நடந்துகொண்டேதான் இருந்தன.

கங்குலி ரசிகர்களுக்கு 2002இல் லோர்ட்ஸ் மைதானத்தில் வெற்றிக்கு பின் சட்டையை கழற்றிய தருணம், சச்சின் ரசிகர்களுக்கு 2003 உலகக்கிண்ண இறுதிப்போட்டி, டோனி ரசிகர்களுக்கு 2011 உலகக்கிண்ண வெற்றி, கோலி மற்றும் ரோஹித் ரசிகர்களுக்கு 2013இல் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் 300 ஓட்டங்களை வெற்றிகரமாக துரத்தியடித்தது என்று ஒருநாள் போட்டிகள் குறித்த நினைவுகளை சொல்லிக் கொண்டே போகலாம். அந்த போட்டிகள் நடந்து பல வருடங்கள் ஆகியிருந்தாலும் இன்றும் அந்த போட்டி நடந்த திகதி வரும் போது அதை மறக்காமல் கொண்டாடி வருகிறோம். இந்திய கிரிக்கெட்டில் மட்டுமல்ல கிரிக்கெட் விளையாடும் அனைத்து நாடுகளுக்கும் ஒருநாள் கிரிக்கெட் அடையாளம் தரும் பல நினைவுகளை கொடுத்துள்ளது என்பதுதான் நிதர்சனம்.

ஆனால், 2015ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்துக்கு பின் ஒருநாள் கிரிக்கெட் முன்பு போல இல்லாததை ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும். 2019ஆம் ஆண்டு உலகக்கிண்ண அரையிறுதி, இறுதிபோட்டிகள் நடந்த திகதியெல்லாம் சமீபத்தில் வந்தபோது அதை பற்றி மக்கள் ஆவலாகப் பேசினார்கள் என்பது உண்மைதான். ஆனால், அதை தவிர்த்து மனதில் நிற்பதுபோல் ஒரு போட்டிகூட பல கிரிக்கெட் ரசிகர்களுக்கு இல்லை. இருபது -20 கிரிக்கெட்டை பற்றி சொல்லவே தேவையில்லை. ஐ. பி. எல் போன்று உலகமெங்கும் நடத்தப்பட்டு வரும் பணம் புழங்கும் இருபது - 20 தொடர்கள், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை உலகக்கிண்ணம் என தொடர்ந்து வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது இவ்வகை வடிவம்.

மக்கள் மனநிலையை எடுத்துக்கொண்டாலும் டெஸ்ட் கிரிக்கெட்டை பார்க்க எப்போதும் ஒரு குறிப்பிட்ட ரசிகர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அதனால், இருபது -20 கிரிக்கெட்டின் வளர்ச்சி டெஸ்ட் பார்க்கும் மக்களை பாதிப்பது இல்லை. இருபது - 20 பார்க்கும் மக்கள் குறுகிய இடைவெளியில் கிரிக்கெட் பார்க்க விரும்பும் மக்கள். இதே ஒருநாள் போட்டிகள் இரண்டுக்கும் இடைப்பட்ட ஒன்று. இந்த ஒருநாள் போட்டி பார்க்கும் மக்கள்தான் தற்போது இருபது - 20 பார்ப்பவர்களாக மாறி வருகிறார்கள். பொழுதுபோக்கு என்ற ஒரு விஷயம் இதற்கு பெரிய காரணமாக இருந்தாலும் மக்கள் கிரிக்கெட் பார்க்கும் விதத்தை மட்டும் நாம் குறைசொல்லி விட முடியாது.

இது குறித்து அஷ்வினும் தன் கருத்தை சமீபத்தில் தெரிவித்திருந்தார் " ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஒரு கட்டத்தில் விறுவிறுப்பு இல்லாமல் போய் விடுகிறது. ஒருநாள் போட்டி செல்லும் போக்கைக் காண எனக்கே பயமாகத்தான் இருக்கிறது. மேலும் ஒருநாள் போட்டிகளில் ஓர் இனிங்ஸிற்கு ஒரே ஒரு பந்துதான் பயன்படுத்தபடும். அது பந்துவீச்சாளர்களுக்கு உதவும் ஒரு விஷயமாக இருந்தது. ஆனால், இப்போது மைதானத்தின் இரு புது பந்துகள் பயன்படுத்தப்படுவதால் பந்துவீச்சாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.", என்று பேசியிருந்தார்.

அஷ்வின் சொல்வதுபோல் பந்து பழசான பின் அது சுழல்பந்து வீச்சாளர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும். அதுமட்டுமில்லாமல் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு கடைசி சில ஓவர்களில் ரிவர்ஸ் ஸ்விங் செய்து விக்கெட் எடுக்கவும் உதவும். ஆனால், அது எல்லாமே இப்போது பெரிதாய் நடப்பதில்லை.

சமீபத்தில் நடந்த பங்களாதேஷ்- மேற்கிந்தியத் தீவுகள் ஒருநாள் தொடரில் ஒரு போட்டியில் கூட அணியின் மொத்த ஓட்டம் 200 ஓட்டங்களை தாண்டவில்லை. ஏன் இந்தியா - இங்கிலாந்து முதல் ஒருநாள் போட்டியில் இலக்கு வெறும் 110 ஓட்டங்கள்தான். ஒரு பக்கம் இப்படி குறைவான ஓட்டங்கள் அடிக்கப்படுகின்றன என்றால் மறுப்பக்கம் நெதர்லாந்து அணிக்கெதிரான போட்டியில் 498 ஓட்டங்கள் அடித்தது இங்கிலாந்து.

பல போட்டிகளில் 300-400 ஓட்டங்கள் மிக எளிதாக அடிக்கப்படுகின்றன. எளிதாக சொல்ல வேண்டும் என்றால் புது பந்தை சரியான முறையில் யார் பயன்படுத்திக் கொள்கிறார்களோ அவர்களுக்கு சாதகமாக போட்டி முழுதாய் மாறி விடுகிறது. இதனால் போட்டி ஒரு விறுவிறுப்பான கட்டத்தை முன்புபோல் எட்டுவதில்லை. சமீபத்தில் நடந்த தொடர்களில் இலங்கை- அவுஸ்திரேலியாவிற்கு இடையில் நடந்த ஒருநாள் தொடர் மட்டுமே விறுவிறுப்பாக இருந்தது.

ஆசிய கோப்பை தொடர் முன்பு ஒருநாள் வடிவத்தில் நடந்து வந்தது. ஆனால் அதுவும் இப்பொது இருபது - 20 தொடராக மாற்றப்பட்டு விட்டது. அதேபோல முன்பெல்லாம் முத்தரப்பு தொடர்கள் அடிக்கடி நடைபெறுவதை பார்க்க முடியும். யார் இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்று கிண்ணத்தை வெல்வார்கள் என்று அத்தொடர் விறுவிறுப்பாக செல்லும். ஆனால், இப்போது அதுபோன்ற தொடர்கள் நடப்பதே இல்லை. இந்திய அணியின் தலைவர் ரோஹித் இதுகுறித்து பேசியபோது, " நாங்கள் வளரும்போது முத்தரப்பு தொடர்கள் பார்த்துதான் வளர்ந்தோம். இப்போது அவை நடத்தப்படுவதில்லை. இதனால் எங்களுக்கு போட்டியின் இடையில் கிடைக்கும் இடைவெளியும் குறைவாக இருக்கிறது. அது வீரர்களை சிறப்பாக விளையாடுவதில் இருந்து தடுக்கிறது. " என்றார்.

இருபது - 20 போட்டிகள் வித்தியாசமான வடிவங்களில் தொடர்ந்து வளர்ந்து கொண்டேதான் இருக்கிறது. அதற்கு காரணம் அதன்மீதான முதலீடு என்பதை யாராலும் மறுக்க முடியாது. " பணம் புழங்கும் இதுபோன்ற தொடர்களை நாங்கள் சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறோம் " என்று தென்னாபிரிக்கா கிரிக்கெட் சங்கத் தலைவர் இப்படி வெளிப்படையாகவே கூறியிருந்தார்.

மற்றொரு புதிய தொடரான டெஸ்ட் சம்பியன்ஷிப்பால் டெஸ்ட் கிரிக்கெட்டும் வளர்ந்து கொண்டேதான் இருக்கிறது. ஆனால், இரண்டுக்கும் நடுவே ஊசலாடும் இந்த ஒருநாள் வடிவத்தை மீட்க ஐசிசி போதிய நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்றால் ஒருநாள் போட்டிகளின் எதிர்காலம் கேள்விக்குறியே!

# எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான ஜனநாயக உரிமையை அரசாங்கம் பாதுகாக்கவேண்டும்

எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான மக்களின் ஜனநாயக உரிமையை அரசாங்கம் பாதுகாக்கவேண்டும் என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

கொழும்பு காலிமுகத்திடல் "அறகலய " அமைதிவழி போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்பு படையினரும் பொலிசாரும் கொடூரமான தாக்குதலை மேற்கொண்டு அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தியதை கடுமையாக கண்டனம் செய்து தேசிய சமாதானப் பேரவை அறிக்கையொன்றை வெள்ளியன்று விடுத்தது.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:

அதிகாலையில் பெரும் குழப்பம் நிலவிய தினத்தில் புதிய ஜனாதிபதி முன்னிலையில் புதிய அமைச்சரவை பதவியேற்றது. ஒரு அரசாங்க மாற்றத்துக்கு காரணமாயமைந்த போராட்டக்களம் முதலில் நள்ளிரவில் அமைதியாக இருந்தது. நள்ளிரவுக்கு பிறகு இராணுவத்தினராலும் பொலிசாரினாலும் அது பலவந்தமாக அப்புறப்படுத்தப்பட்டது.

இந்த நடவடிக்கையினால் புதிய அரசாங்கம் தன்னை நாட்டு மக்களில் கணிசமான பிரிவினரிடமிருந்தும் சர்வதேச சமூகத்திடமிருந்தும் அந்நியப்படும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கிறது. 104 நாட்களாக கொழும்பு காலிமுகத் திடல் போராட்டக்களத்துக்கு நாட்டின் நாலா புறங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மக்கள் வருகை தந்து நேரடியாக போராட்டத்தில் பங்கேற்று தங்கள் ஒருமைப்பாட்டை வெளிக்காட்டி வந்தனர்.

ஸ்ரீ லංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் குறித்து தேசிய சமாதானப் பேரவை அதன் வேதனையையும் அதிருப்தியையும் வெளிப்படுத்துகிறது. அமைதி வழியில் போராட்டத்தை செய்துகொண்டிருந்தவர்கள் மீதான கொடூரமான தாக்குதல் போராட்ட இயக்கத்தின் இலட்சியங்களையும் அபிலாசைகளையும் மறுதலிப்பதாக அமைந்தது. அந்த போராட்டமே முனானாள் ஜனாதிபதியையும் பிரதமரையும் அமைச்சரவையையும் பதவி விலக வைத்து புதிய ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சரவையும் பதவியேற்கும் நிலையை உருவாக்கியது.

போராட்டக்காரர்களுடன் பாதுகாப்பு படைகள் நடந்துகொண்ட முறையை நாம் கடுமையாக கண்டிக்கிறோம். முதலில் காலிமுகத்திடல் பகுதியை சுற்றிவளைத்த படையினர் பின்னர் உள்ளே புகுந்து தாக்குதல் நடத்தியதுடன் மருத்துவ பணியாளர்களும் அம்புலன்ஸ் வண்டிகளும் வருவதையும் தடுத்தனர். படையினரால் தாக்கப்பட்ட பல போராட்டக்காரர்களும் ஊடகவியலாளர்களும் சட்டத்தரணிகளும் படுகாயமடைந்தனர்.

போராட்ட இயக்கம் காரணமாகவே பதவிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தி அப்புறப்படுத்தாமல் அவர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கவேண்டும் என்று நாம் நம்புகிறோம்.

போராட்டக்காரர்கள் அன்றைய தினம் பிற்பகல் 2 மணியளவில் ஜனாதிபதி செயலக வளாகத்தில் இருந்து வெளியேறவிருந்தார்கள் என்பது ஏற்கெனவே தெரிந்திருந்தது. அந்த வளாகத்தை மாலையில் கையளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருப்பதாக போராட்டக்காரர்கள் அறிவித்திருந்தார்கள். அத்தகைய ஒரு சூழ்நிலையிலேயே அதிகாலையில் அரசாங்கம் படைபலத்தை பிரயோகித்து போராட் டக்காரர்களை அங்கிருந்து அப்புறப் படுத்தியிருக்கிறது.

எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான மக்களின் ஜனநாயக உரிமை ஜனநாயகத்தின் மையப் பகுதியாகும். அந்த உரிமையை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது. அந்த உரிமையை பாதுகாக்க தவறினால் புதிய போராட்ட அலை உருவாகி நிச்சயமற்ற நிலைவரத்துக்கு வழிவகுக்கக்கூடும்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தும் சர்வதேச சமூகத்திடமிருந்தும் நிதியுதவிகளைப் பெறுவதற்கு நல்லாட்சி மற்றும் அரசியல் உறுதிப்பாட்டுக்கான சான்றுகளை அரசாங்கம் காண்பிக்கவேண்டும். இதற்கு மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடியதாக கருத்தொருமிப்பின் அடிப்படையில் சகலரையும் அரவணைக்கக்கூடிய அணுகுமுறைகளைக் கடைப்பிடித்து சட்டத்தின் ஆட்சியை மதித்து பொறுப்புக்கூறும் கடப்பாட்டுடன் அரசாங்கம் செயற்படவேண்டியது முக்கியமானதாகும்.

நாட்டின் பொருளாதாரம் படுமோசமான வீழ்ச்சியடைந்திருக்கும் இன்றைய தருணத்தில் முன்னுதாரணமாகச் செயற்பட்டு வழிநடத்த வேண்டியது புதிய அரசாங்கத்தின் பொறுப்பாகும். சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்ற எமது கோரிக்கையை மீண்டும் நாம் வலியுறுத்துகிறோம். பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்ற பிறகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனதுரையில் அரசாங்கத்தில் இணையுமாறு சகல கட்சிகளின் தலைவர்களிடமும் வேண்டுகோள் விடுத்ததன் பிரகாரம் செயற்படவேண்டும்.

பொருளாதார நெருக்கடியை தீர்த்துவைப்பதற்கான அவசர நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.21 வது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டுவந்து ஆட்சிமுறை நிறுவனங்களைப் பலப்படுத்துவதுடன் பொறுப்புக்கூறலுக்கான ஏற்பாடுகளையும் செய்யவேண்டும்.

6 மாதகாலத்தில் பாராளுமன்ற மற்றும் மாகாணசபைகள் தேர்தல்களையும் ஏற்கெனவே இணங்கிக்கொண்டதன் பிரகாரம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பையும் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண் டும். நாட்டின் பரந்த நலன்களுக்காக அரசியல் கலாசாரத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும்.

---



## வியுக்தியார் பதில்கள்

**எஸ். சிவதாசன், சங்கானை.**

**கேள்வி:**

ராஜபக்சக்களின் நிழல் அரசாங்கமே இப்போதும் நடக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா கூறியிருக்கின்றாரே. அவர் சொல்வதில் உண்மை இருக்கின்றதுதானே?

**வியுக்தியார்:**

யார் சொன்னது அப்படி இல்லை என்று? ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டி யிட்டபோது, அவருக்கு வாக்களித்த நூற்றிமுப்பத்திநான்கு பேரில் பெரும்பாலானவர்கள் அவர்கள் தானே. அதெல்லாம் சரிதான், ஆனால் சஜித்தும் ராஜபக்சக்களின் நிழல் அரசு அமைக்கத்தானே டலஸ் அழகப்பெருமாவை ஜனாதிபதியாக்கிவிட்டு தான் பிரதமராகலாம் என்று நினைத்தார். ரணில் கூட தோலுக்கு முதல்நாள் கூட ராஜபக்ச அரசாங்கத்தைக் கண்டித்து அறிக்கை விடுத்தார். ஆனால் டலஸ் இன்றுவரை ராஜபக்சக்களுக்கு எதிராக வாய்திறக்கவில்லையே கவனிக்கவில்லையா?

---

**ஆர். தர்மகுலசிங்கம், கோயில்குளம், வவுனியா**

**கேள்வி:**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தோல்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு டலஸ் அழகப்பெருமாவை ஆதரித்தது அவர்கள் எடுத்த ராஜதந்திர முடிவு என்று சிலர் வாதிடுகின்றார்களே. அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:**

எங்கள் தலைவர்கள் எடுத்த எந்த முடிவு ராஜதந்திரமற்ற முடிவு என்கிறீர்கள்? வாக்களிப்பதில்லை என்று முடிவெடுத்திருந்தால், இருவரிடமும் நல்ல பெயர் எடுத்திருக்கமுடியாது. ஆனால் இப்போது இருவரிடமும் நல்லபெயர் அல்லவா எடுத்திருக்கிறார்கள். ஐந்துபேர் டலசுக்கும் ஐந்துபேர் ரணிலுக்கும் வாக்களித்து இருவரிடமும் நல்லபெயர் எடுத்தது ராஜதந்திரம் இல்லாமல் வேறு என்ன?

**எஸ்.ஸ்ரனிஸ்லொஸ் , பாசையூர், யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

பாராளுமன்றில் நடைபெற்ற ஜனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் வாக்களிக்காமல் விட்டது யாரையோ வெல்ல வைப்பதற்கான மறைமுக நிகழ்ச்சி நிரல் என்று யாழ்ப்பாண மேயர் வி. மணிவண்ணன் கூறியிருக்கிறாரே?

**வியுக்தியார்:**

அவர் சொன்னால் சரியாகத்தான் இருக்கவேண்டும். பாம்பின் கால் பாம்பறியும் என்பதுபோல. ஆனால், வெற்றிபெற்றவர் ஒரு வாக்கினால் வெற்றிபெற்றிருந்தால் அவரது லொஜிக் சரியாக இருந்திருக்கும். நமது எதிரிகள் அல்லது போட்டியாளர்கள் என்ன செய்தாலும் அதற்கு எதிராக கருத்துச் சொல்லவேண்டும் என்று மணிவண்ணன் நினைத்தால், அவரால் அரசியலில் வளரமுடியாது. அவரும் எற்கனவே இருக்கின்றவர்கள் போல ஒரு சராசரி அரசியல்வாதியாகவே இருக்கவேண்டிவரும்.

---

**ஆர். நிரோஷ், மறவன்புலவு, சாவகச்சேரி**

**கேள்வி:**

புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற மறுநாளே காலிமுகத்திடலில் அமைதிப் போராட்டக்காரர்கள் மீது ஈவிரக்கமற்ற தாக்குதல் இடம்பெற்றுள்ளதே. இது எதனைக் காட்டுகின்றது?

**வியுக்தியார்:**

இந்த வியுக்தியார் எத்தகைய வன்முறையையும் ஆதரிக்காத ஒருவர். வன்முறை எதற்கும் தீர்வைத் தராது. ஆனால் போராட்டக்கரர்களுக்கும் அது பொருத்தமானது. மக்கள் ஜனாதிபதி செயலகத்தையும் மாளிகையையும் கைப்பற்றியதும் ஒருவகையில் வன்முறைதான். ரணில் வீட்டைத் தீக்கிரையாக்கியதும் வன்முறையின் உச்சக்கட்டம். ராஜபக்சக்களை வெளியெற்றுவதற்காக போராட்டத்தை ஆரம்பித்துவிட்டு அவர்கள் வெளியேறிய பின்னர் நாட்டில் அரசியலமைப்புக்கு அமைய அடுத்த கட்டம் நகர்வதை பார்த்திருக்கவேண்டும்.

அதனையும்விட மாற்றம் ஒன்று தேவை என்றால் அடுத்த தேர்தலில் தமது கொள்கையை முன்வைத்து மக்களின் ஆணையைப் பெற்று, அந்த மாற்றத்தை செய்யலாமே தவிர, அதற்காக இந்த நாடு அடுத்து என்ன செய்யவேண்டும் என்று அவர்களே முடிவெடுக்க முடியாதல்லவா? ரணிலையும் விரட்டும்வரை தங்கள் போராட்டம் தொடரும் என்றால், அதனை அனுமதிக்கவேண்டும் என்கின்றீர்களா?

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com



# எனக்கு வயது 39

முருகபூபதி

இவ்வளவு காலமும் நான் எனது கதையை உங்களுக்குச் சொல்லவில்லை. ஆனால், இப்போது சொல்ல நேர்ந்திருக்கிறது.

கொழும்பில் பெரியாஸ்பத்திரியில் நான் பிறந்தபோது, எனது அழுகுரலை அம்மாவும், அம்மாவைச் சுற்றியிருந்த தாதிமாரும் ஒரு பெண் மருத்துவரும் மாத்திரமே கேட்டதாக, பிற்காலத்தில் அம்மா சொன்னார்கள்.

இப்போது நான் எனது இந்தக் கதையை வெளிநாடு ஒன்றிலிருந்து சொல்கின்றேன். சொல்ல வேண்டிய காலத்தில் நான் இருக்கின்றேன்.

இங்கு எனது சிநேகிதி தினேஷா வன்னிநாயக் காவுக்கு எனது கதையை சொல்ல நேர்ந்தது. அவளை இங்கே எனது பல்கலைக்கழக வாழ்க்கை தொடங்கப்பட்ட காலம் முதல் தான் அறிவேன்.

அவள் தான் எனது பிறந்ததினத்தை அடிக்கடி நினைவு படுத்துபவள். ஜூலை மாதம் வந்தவுடனே எனது அம்மா கலவரடைந்து விடுவார். எனது பிறந்தநாள் ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதம் 24 ஆம் திகதி வரும். ஏனைய பிள்ளைகளைப் போன்று எனது வீட்டில் பிறந்தநாள் கொண்டாட்டம் எதுவும் இதுவரையில் நடைபெற்றதில்லை.

ஏன் தெரியுமா..? அன்று தான் எனது அப்பாவும் கொல்லப்பட்ட நாள். அம்மாவுக்கு பிரசவவலி வந்ததும், கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதித்து விட்டு, அப்பா தேமர்ஸ் ஃபிளாஸ்க்கில் தேநீர் வாங்கச் சென்றவர்தான், அதன் பிறகு திரும்பி வரவேயில்லை.

எனது பிறப்பின் கதையை காலம் கடந்துதான் அம்மா சொன்னார்கள். அவுஸ்திரேலியாவிலிருந்த அம்மாவின் அண்ணன், என்னையும் அம்மாவையும் ஸ்பொன்ஸர் செய்து அழைக்கும் போது எனக்கு பத்து வயதுதான் இருக்கும்.

எனக்கு தமயந்தி என்று பெயர் வைத்ததும் அம்மாதான். எனது பெயருடன் இருக்கும் இராஜ சேகரன் என்ற எனது அப்பாவை நான் வீட்டிலி ருக்கும் ஒரே ஒரு படத்தில் தான் பார்த்திருக்கின் றேன்.

கொழும்பில் அந்தக் கலவரத்தில் எங்கள் வீடு சூறையாடப்பட்டபோது, அம்மா - அப்பாவின் திருமணப்படம் உட்பட பலதும் எரிந்து விட்டதாக அம்மா சொன்னார்.

ஆஸ்பத்திரியிலிருந்து பம்பலப்பிட்டியில் அகதி முகாமுக்கு என்னையும் தூக்கிக் கொண்டு அம்மா சென்றாராம்.

ஜூலை மாதம்24 ஆம் திகதி வரும் போது, அப்பாவின் படத்துக்கு முன்னால் அம்மா நின்று கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பதை எனக்கு அறிவு தெரிந்த நாள் முதல் பார்த்து வருகின்றேன். முன்னர் இலங்கையில் பார்த்தேன். இப்போது அவுஸ்திரேலியாவிலிருந்தும் பார்த்து வருகின்றேன்.

அம்மாவின் அண்ணன், அதுதான் எனது மாமா சுகுணேஸ்வரன் 215 என்ற விசேட விசா திட்டத்தின் கீழ் என்னையும் அம்மாவையும் இங்கே அழைத்திருந்தார்.

அப்போதுதான் அப்பாவுக்கு என்ன நடந்தது என்பதை அம்மாவிடம் கேட்டு முழுமையாக அறியமுடிந்தது. அந்த விமானப் பயணத்தில் தான் அம்மா அந்தக்கதையை எனக்கு அரையும் குறையுமாகச் சொன்னார்.

நாட்கள் செல்லச்செல்ல நானாகவே படித்தும் - ஆராய்ந்தும் தெரிந்து கொண்டேன். அப்பாவின் மறைவுதான் எனக்கு எனது தாயகம் பற்றி அறிந்து கொள்ளவும் பெரிதும் உதவியிருக்க வேண்டும்.

எனது சிநேகிதி , தினேஷாவுடன் நான் பழகு வதை முதலில் அம்மா விரும்பவில்லை. அதற்கு அம்மா சொன்ன காரணங்கள் அம்மாவைப் பொறுத்தவரையில் சரியாக இருக்கலாம்.

அதுபோல் தினேஷாவின் அம்மா திருமதி ரோஸி வன்னிநாயக்கவுக்கும் தனது மகள் என்னுடன் சிநேகி தமாக இருப்பது விருப்பமில்லாமல் தான் இருந்தது.

தினேஷாவின் அப்பா வன்னிநாயக்கா இராணுவத்தில் இருந்தவராம். அவரும் ஒரு கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டவராம்.

அந்தக் குடும்பமும் எங்களைப்போலத்தான் அவுஸ்திரேலியாவுக்கு 215 விசாவில் முன்னர் வந்தவர்கள் என்பதை தினேஷா சொல்லித்தான் தெரிந்து கொண்டேன்.

“ கெதியா வந்திடுங்க. என்னால சரியா சிங்கள மும் பேசத்தெரியாது. இரட்ணம்ஸ் ஆஸ்பத்திரிக் குப் போயிருக்கலாம். அங்கே காசு அதிகம்தான். பர வாயில்லை. பிள்ளை எங்கே பிறந்தாலும் சுகமா கப் பிறந்தாசரி. போங்கப்பா- கெதியாவாங்க”

அம்மா, அப்பாவிடம் இறுதியாகச் சொன்ன வார்த்தைகள்தான்அவை. அதன் பிறகு அம்மா, அப்பாவை உயிரோடு காணவில்லை. அந்தக் கலவரத்தில் காணாமலே போய்விட்டார்.

தினேஷாவின் அண்ணன் நிமாலுக்கு என் மீது விருப்பம். பல தடவை அவன் என்னிடம் தனது காதலை வெளிப்படுத்த முயன்றான். அம்மா விரும்பமாட்டார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அந்த இனத்தின் மீதே அம்மாவுக்கு தீராத வெறுப்பு நீடித்திருக்கிறது.

ஆனால், தினேஷாவின் இயல்புகள் அம்மாவை கவர்ந்திருந்தன. ஆனால், தினேஷாவின் அம்மாதான் என்னுடன் முகம்கொடுத்துப் பேசுவதில்லை.

நிமால், எனது சம்மதத்திற்கு காத்திருந்து, கைவிட்டு விட்டு இப்போது ஒரு இத்தாலிப் பெட்டையுடன் லிவிங்டு கெதராக வாழ்கின்றான்.

இந்தமாதம் தொடக்கத்தில் தினேஷா என்னை மெல்பனில் நடக்கும் ஆர்ப்பாட்டத்திற்கு அழைத் தாள். இலங்கையில் ஆட்சிமாற்றம் வேண்டுமாம். அதற்காக இங்கிருக்கும் இலங்கையர்கள் கவனஈர்ப்பு போராட்டம் நடத்துகிறார்கள் எனச் சொல்லி என்னையும் அவள் அழைத்தாள்.

அப்போதுதான் நான் அவளிடம் எனது பிறப் பின் கதையை சொல்ல நேர்ந்தது.

முப்பத்தியொன்பது வருடங்களுக்கு முன்னர் எங்கள் மக்களை விரட்டி அடித்த அதேநகரத்தில் உங்கள் தலைவர்களை விரட்டி அடிக்க உங்கள் மக்கள் திரண்டிருக்கிறார்கள்பார். எங்கள் மக்களின் வீடுகள், கடைகள், சொத்துக்கள் எவ்வளவு எரிந்தன. இன்று உங்கள் தலைவர்களின் வீடுகள் எரிகின்றன. அன்று செய்தவர்களின் அடுத்த சந்ததி தானே இப்பொழுதும் அதே வேலையை செய் கின்றன. அதுஎன்ன எதற்கெடுத்தாலும் தீ வைத்து எரிக்கும் குணம்..? என்னைக் கண்டாலே உனது அம்மாவுக்கு பிடிப்பதில்லை. உனது அப்பாவை நாமா கண்ணிவெடி வைத்துக்கொன்றோம். ” என்று நான் சொன்னவுடனே, தினேஷா இடைமறித்தாள்.

“ தமயந்தி, உனது அப்பாவை ஜூலை கலவரத்தில் நாமா கொன்றோம். அது யாரோ செய்த நாச வேலை. நீயும் நானும் ஒரு புள்ளியில் இன்று சந்தித்திருக்கின்றோம். அங்கே ஒரு மாற்றம் தேவைப்படுகிறது. அதற்காக நாம் இங்கே ஒன்று கூடுவோம். “ என்றாள் தினேஷா.

அதனைக் கேட்டதும் நான் வாய்விட்டுச் சிரித்தேன்.

“ டீசலும் பெற்றோலும், கேஸ/ம் இல்லையென்றும் சாமான்கள் விலையேறி விட்டது என்றும் சொல்லித்தானே போராடுகிறார்கள். இவையெல்லாம் முன்புபோன்று கிடைத்திருந்தால், வெளியே வந்து போராடியிருப்பார்களா..? சொல். சுருக்கமாகச் சொன்னால், வயிற்றில் அடிவிழுந்த படியால் ‘போபோ ‘ என்று உங்கள் தலைவர்களை கலைக்கிறார்கள். இல்லையென்றால்.. ? அப்படியே இருந்து முகநூல் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

உள்நாட்டு போர்க்காலத்தில் எங்கட சமூகம் பட்ட கஷ்டம் உனக்குத் தெரியுமா..? அவர்கள் யாரையும் போபோ என்று கலைக்கவில்லை. தங்களுக்கான உரிமையைத் தானே கேட்டார்கள். ”

நான் ஆக்ரோஷமாகச் சொன்னதும், தினேஷா எனது தோள் பற்றி அணைத்துக் கொண்டாள்.

“ எல்லாம் கடந்து போகும் தமயந்தி. நாம் அங் கும் இங்கும் இணையும் காலம் வந்திருக்கிறது. இப் போது பேசிக் களைத்து விட்டோம். வா போவோம் “ தினேஷாவுடன் ஒரு கோப்பி அருந்தும் கஃ பேக்குள் சென்றேன்.

என்னாலும் அவளாலும் இங்கிருந்து என்ன செய்யமுடியும்.? யோசிக்கின்றேன்.

# ரோஹிங்கிய மக்கள் மீதான வன்முறை:

## கலாச்சார அடையாளத்தை சிதைத்து இன அழிப்பை தொடரும் மியான்மார் !

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**



**நா**கரீகத்தின் உச்சத்தில் மனிதர்கள் வாழ்வதாக கருதப்படும் இக்கால கட்டத்தில் இப்படியொரு பயங்கரமும் நடைபெறுகின்றதா என்று சிந்திக்கும் அளவு மியன்மார் - பர்மாவில் ரோஹிங்கிய மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் உச்சத்தை அடைந்திருக்கின்றன. மியான்மார் - பர்மாவில் நடக்கும் இனப்படு கொலைகள் நெஞ்சைப் பிழியும் காட்சிகளாக மனதை உருக்குகின்றன.

ரோஹிங்கிய மக்களுக்கு எதிரான தாக்குதல்கள், கலவரங்கள் காரணமான ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். பலர் நாட்டை விட்டு வேறு நாடுகளுக்கு கடல் வழியாக தப்பி ஓடியுள்ளனர்.

### இரும்புத் திரை நாடு - மியன்மார்

பௌத்த மதத்தை ஆட்சி மதமாகக் கொண்டுள்ள மியன்மார் உலக நாடுகளினால் "இரும்புத் திரை நாடு" என்று அழைக்கப்படுகின்றது. பர்மா என்ற பெயரில் அழைக்கப்பட்ட நாடு 1989ம் ஆண்டு மியான்மார் (Union of Myanmar) என்று மாற்றியமைக்கப் பட்டது.

சுமார் 130 இனங்கள் வாழுகின்ற மியன்மாரில் நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளும் வட்டார வழக்குகளும் காணப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான பௌத்த விகாரைகள் நாடு முழுவதும் பரவியிருப்பதால், இது 'Land of Pagodas' என்றும் அழைக்கப்படுகின்றது.

சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஆங் சாங் சூகி மியன்மார் இராணுவத்திற்கு எதிராக போராடி, ஜனநாயகத்தை வெளிப்படுத்த பாடுபட்டார். இதனை எதிர்த்து இராணுவம் மேற்கொண்ட செயல்பாடுகளை விபரிக்கும் விதமாகவே "இரும்புத் திரை நாடு" என்று மியன்மார் அழைக்கப்படுகின்றது.

### 2010 இன அழிப்பு கோரம்:

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் ரோஹிங்கிய முஸ்லிம்கள் சார்பில் போட்டியிட்ட 3 பேர் வெற்றி பெற்று எம்பிக்களாக பாராளுமன்றம் சென்றனர். ஆனால் பின்னாளில் அவை செல்லாது என சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு அவர்கள் நீக்கப்பட்டனர். கடந்த 2012 ஆண்டு முதல் மிகப்பெரிய அளவில் ரோஹிங்கிய மக்கள் அங்குள்ள பௌத்த மத தீவிரவாதிகளால் சொல்லணா துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினர்.

இதற்கு வித்திட்டது, அங்குள்ள பௌத்த பெண் ஒருவர் கற்பழிக்கப்பட்ட நிகழ்வு. பௌத்த வெறியர்கள் சிலரால் நிகழ்த்தப்பட்ட இந்த கற்பழிப்பு சம்பவம் ரோஹிங்கிய முஸ்லிம்கள் மீது திருப்பி விடப்பட்டு, அதை காரணம் காட்டி மிகப்பெரிய இன அழிவையே நடத்தினர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கொலை செய்யப்பட்டனர், உயிரோடு எரிக்கப்பட்டனர். மிகப்பெரிய மனித உரிமை மீறல்கள் மியன்மர் அரசால் ரோஹிங்கிய முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டது.

இது தொடர்பாக ஆய்வில் ஈடுபட்ட ஐநா பிரதிநிதிகளும் மனித உரிமை ஆணைய நிர்வாகிகளுமான மார்சுகி ட்ரூஸ்மேன், ராதிகா மற்றும் கிறுஸ்டோஃபர் சிடோட்டி ஆகியோர், மிகப்பெரிய இன அழிவே அங்கு நடைபெற்றதாகவும், முழுக்க முழுக்க மியான்மர் இராணுவத்தின் நேரடி ஆதரவுடன் அவை நிகழ்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.



கொலை, கற்பழிப்பு, பாலியல் வன்புணர்வு, உயிரோடு எரித்து கொலை செய்தல், துடிக்கத் துடிக்க உடற்பாகங்களை வெட்டுதல் போன்ற சகித்துக் கொள்ள இயலாத மனித உரிமை மீறல்கள் அங்கு நடந்தியிருப்பதாகவும், மிகபெரிய இன அழிப்பிற்கான அடிப்படை உதாரணமாக அவை அமைந்திருப்பதாகவும் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

கிட்டத்தட்ட 50 ஆயிரம் முஸ்லிம்கள் மியான்மர் இராணுவத்தாலேயே கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். 4,50,000 பேர் வங்கதே சத்திற்கும், 40 ஆயிரம் பேர் இந்தியாவுக்கும் அகதிகளாக தப்பி வந்தனர்.

### யார் இந்த ரோஹிங்கிய மக்கள்:

ரோஹிங்கிய மக்கள் மியான்மரில் இராக்கைன் மாநிலத்தின் வடக்கே வசிக்கும் இந்தோ-ஆரிய இனக்குழுவாகும். இவர்கள் ரோஹிங்கிய மொழியைப் பேசுகின்றனர். ரோஹிங்கிய மக்கள் இராக்கைன் மாநிலத்தின் பூர்வகுடிகள் என ரோஹிங்கிய மக்களும், சில ஆய்வாளர்களும் கூறும் அதே வேளையில், இவர்கள் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் வங்காளத்தில் இருந்து வந்து குடியேறியவர்கள் எனவும், அல்லது குறைந்தது 1948 பர்மிய விடு தலைக்குப் பின்னரும், 1971 வங்கதேச விடுதலைப் போரின் பின்னரும் குடியேறிய வர்கள் எனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.




பௌத்த மதத்தை பெரும் பான்மையாக கொண்ட மியான்மர் நாட்டின் 'ராக்கைன்' பகுதியில் வசிக்கும் குறிப்பிட்ட இன மக்கள் தான் ரோஹிங்கிய இனத்த வர்கள். கிட்டத்தட்ட 15 லட்சம் ரோஹிங்கிய மக்கள் அங்கு வசித்து வந்தனர், அனைவருமே முஸ் லிம்கள். இவர்களது பூர்வீகத்தை தலைமுறை பின் னோக்கிப் பார்த்தால், 15 ஆம் நூற்றாண்டு முதல் அவர்களது பூர்வகுடிக்கான தடயங்கள் மியான்மர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கிடைப்பதாக ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கிறது.

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பனியுடனான யுத்த கால கட்டமான 1826ஆம் ஆண்டு, ரோஹிங்கிய முஸ்லிம்கள் 'ராக்கைன்' பகுதியில் குடிபெயர் கின்றனர். மியான்மார் அரசு 1982 ஆம் ஆண்டு, குடியுரிமை சட்டம் ஒன்றை வகுக்கிறது. பல பகுதிகளிலிருந்தும் இடம் பெயர்ந்து வந்து தங்கள் நாட்டில் வாழும் பல்வேறு குழுக்களையும் மாறுபட்ட பல இனங்களையும் மியான்மர் தேசத்து குடிமக்களாக அங்கீகரிக்கும் சட்டம் அது.

காச்சின் எனப்படும் பர்மா இனம், கரென் இனம், சின், மோன், ராக்கைன், ஷான், கயா போன்ற பல குழுக்களை தங்கள் நாட்டு குடிமக்களாக அங்கீகரித்த அந்த சட்டமானது, இலாவகமாக ரோஹிங்கிய முஸ்லிம்களை மட்டும் தவிர்த்தது. அதற்கு வழி செய்யும் வகையில் அந்த சட்டத்தில், "1826 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்த மண்ணில் குடிபெயர்ந்தவர்களாக இருக்க வேண்டும்" என்றவொரு விதியை சேர்த்துக் கொண்டது.

இதன் விளைவு, ஐந்து நூற்றாண்டுகளாக மியான்மரில் வாழ்ந்து வந்த மக்கள் தங்கள் குடியுரிமையை இழந்தனர். சொந்த நாட்டிலேயே அகதிகளாக, இரண்டாம் தர குடிமக்களாக வாழும் அவலம் நேர்ந்தது. ஆனால், வரலாறு அவர்களை மியான்மரின் குடிமக்களாகவே அடையாளம் கண்டு வந்துள்ளது.

1948 முதல் 2010 வரை, மியான்மரில் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் ரோஹிங்கிய மக்கள் தங்கள் வாக்குகளை செலுத்தி வந்திருக்கின்றனர். 1982 ஆம் ஆண்டுக்கு பிறகு அவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டை ஒன்று வழங்கப் பட்டது.

### முஸ்லிம்களுக்கு எதிரான மியன்மார் அரசு

15ம் நூற்றாண்டுகளில் இருந்தே மியன்மாரில் வாழ்ந்து வரும் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக பௌத்த தர்மத்தை ஆட்சி மதமாக வைத்துள்ள மியனமார் மேற்கொள்ளும் தாக்குதல்கள் யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாதவைகளாகும்.

மதக் கலவரங்கள், தனி மனித தாக்குதல்கள், வர்த்தக நிலையங்களுக்கு எதிரான தாக்குதல்கள், திட்டமிட்ட படுகொலைகள் என்று முஸ்லிம்களுக்கு எதிராக மியன்மாரில் நடைபெரும் தாக்குதல்கள் முடிவில்லாதவையாகும்.

உண்ண உணவின்றி, குடிப்பதற்கு நீராகாரமின்றி, தங்க இடமின்றி கடந்த பல வருடங்களாகவே மியன்மாரின் ரோஹிங்யா முஸ்லிம்கள் பலவிதமான அவதிக்கும் உள்ளாகி வருகின்றார்கள்.

### அசின் விராதுவின் 969

969 இயக்கம் என்பது பௌத்தர்களை பெரும்பான்மையாகக் கொண்ட மியன்மாரில் இஸ்லாமிய பரம்பலை எதிர்க்க உருவாக்கப்பட்ட ஒரு தேசியவாத அமைப்பாகும். மியன்மாரின் சர்ச்சைக்குரிய பௌத்த மதகுரு அசின் விராது தேரர் இதன் தலைவராக இருந்து செயற்படுகிறார். இவ்வியக்கம் சர்வதேச மட்டத்தில் பலத்த விமர்சனத்திற்கு உள்ளானது. பன்னாட்டு ஊடகங்கள் இதன் தலைவர் அசின் விராது தொடர்பில் பலத்த விமர்சனைத்தை முன்வைத்தன.

அமெரிக்காவின் டைம் பத்திரிக்கை "பௌத்த பயங்கரவாதத்தின் முகம்" என்று இவரை விமர்சனம் செய்திருந்தது.

மியன்மாரில் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளின் சூத்திரதாரியாக இருப்பது இவரும், இவருடைய 969 இயக்கமும் தான். மியன்மாரின் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளை இவரே வழிநடத்தி வருகிறார். இவருடைய தூண்டுதலில் ஈவிரக்கமின்றி பெண்களும் குழந்தைகளும் கூட கொன்று குவிக்கப்படுகின்றனர்.

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F

24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) 6 தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

கல்வி tv CHANNEL-1

**17.07.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**17.07.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## கரைச்சி கோட்ட ஆசிரியர்களுக்கு எரிபொருளை பெறமுடியாத நிலை

கிளிநொச்சி, ஜுலை. 24

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கரைச்சி கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு எரிபொருளை பெற்றுக் கொடுக்க கல்வி வலயத்தினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாதிங்கட்கிழமை பாடசாலைகள் ஆரம்பமாகவுள்ள நிலையில் இதுவரையில் கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கரைச்சிக் கோட்டத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கு எரிபொருளை பெறுவதற்கான எரிபொருள் பங்கீட்டு அட்டையை வழங்குவதற்கு கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என எமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது.

ஆசிரியர்கள் எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். இந்த விடயத்தில் கரைச்சி கோட்டக்கல்விப் பணிப்பாளர் மற்றும் கிளிநொச்சி தெற்கு கல்வி வலய பணிப்பாளர் ஆகியோரே இதற்கு முழு பொறுப்பாகும்.

ஆகவே இந்த விடயத்தில் கவனம் செலுத்தி ஆசிரியர்களுக்கு எரிபொருள் பங்கீட்டு அட்டையை வழங்குகின்ற செயற்பாடுகளை வடக்கு மாகாண கல்வி அமைச்சு கண் காணிக்க வேண்டும் - என்றார். (அ)

# அரசாங்கத்தை கேட்டுவிட்டே அறிக்கை விடவேண்டுமாம்!

## வெளிநாட்டு தூதர்களிடம் ரணில்

கொழும்பு, ஜுலை. 24

ஜனாதிபதி செயலகப் பகுதியிலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட பலாத்கார இராணுவ நடவடிக்கை குறித்து இராஜதந்திரிகளுக்கு ஜனாதிபதியால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் அறிக்கைகளை வெளியிடும்போது அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தெளிவுபடுத்துமாறு இராஜதந்திரிகள் கோரப்பட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் மாலை கொழும்பில் வசிக்கும் இராஜதந்திரிகளை ஜனாதிபதி அலுவலகத்துக்கு அழைத்தார். இதன்போது ஜனாதிபதி செயலகப் பகுதியை துப்பரவு செய்யும் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் உத்தியோகபூர்வ மற்ற கவலைகள் வெளியிடப்பட்டன.

ஜனாதிபதி செயலகப் பகுதியிலிருந்து ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் குறித்து இராஜதந்திரிகளுக்கு ஜனாதிபதியால் விளக்கமளிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் அறிக்கைகளை வெளியிடும் போது விடயங்களை தெளிவுபடுத்துவதற்கு அதிகாரிகளை தொடர்பு கொள்ளுமாறும் இராஜதந்திரிகளை கேட்டுக் கொண்டார்.

பொலிஸ் மா அதிபர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்த சந்திப்பின்போது, ஜனாதிபதி விக்ரமசிங்க, அந்தந்த நாடுகளில் உள்ள ஜனாதிபதி அலுவலகங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்க முடியுமா என இராஜதந்திரிகள் சிலரிடம் லேசான தொனியில் வினவினார்.

எதிர்காலத்தில் அறிக்கைகள் வெளியிடப்பட்டால், சமூக ஊடகங்களில் கிடைப்பதை மட்டும் பார்க்காமல், ஏதேனும் கேள்விகளுக்கு அதிகாரிகள் தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர் அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

இராணுவ நடவடிக்கை தொடர்பில் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்த ஜனாதிபதி விக்கிரமசிங்க, நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்தும் அப்பகுதியை ஆக்கிரமித்து வருவதாகவும், அவர்கள் தொடர்ந்தும் ஜனாதிபதி செயலகத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வருவதாகவும் தெரிவித்தார்.

நேற்று காலை 6 மணியளவில் போராட்டக்காரர்கள் அப்பகுதியை விட்டு வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டதாகவும், ஆனால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் அதற்கு பதிலாக மாற்று நேரத்தை வழங்கியதாகவும், அது அதிகாரிகளால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நட்பு நாடுகளின் உதவி தேவைப்படும் வேளையில், சமூக ஊடக அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட அறிக்கைகள் மாத்திரம் இலங்கையின் நன்மதிப்பை உலகளவில் சேதப்படுத்தும் என்பதால், அறிக்கைகளை வெளியிடும் போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் சரிபார்க்குமாறும் ஜனாதிபதி விக்கிரமசிங்க இராஜதந்திரிகளிடம் கேட்டுக்கொண்டார். (அ)

## பணவீக்கம் மேலும் உயரும் சாத்தியம்

கொழும்பு, ஜுலை. 24

இலங்கையின் பணவீக்கம் மேலும் அதிகரிப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் இலங்கையின் பணவீக்கம் 70 சதவீதமாக அதிகரிக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

தேசிய உற்பத்தி மற்றும் அதன் மூலப் பொருட்களில் ஏற்பட்ட அதிகரிப்பே இதற்கு காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கியின் நிதியுதவியினால் இலங்கையின் பணவீக்கத்தைச் சீர்செய்ய முடியாது என்றும் அது தற்காலிக தீர்வு மட்டுமே என்றும் அவர் கூறினார்.

தற்போது இலங்கை எதிர்நோக்கிய நிதி, பொருளாதார மற்றும் ஏனைய பிரச்னைகளை சீர் செய்ய புதிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முடியும் என நம்புவதாகவும் ஆளுநர் நந்தலால் வீரசிங்க குறிப்பிட்டார். (அ)

# உணவுத் திருட்டு அதிகரிப்பு!

கொழும்பு, ஜுலை. 24

பணவீக்கம் காரணமாக நாட்டில் உணவு திருட்டு ஏறக்குறைய இரு மடங்காக அதிகரித்துள்ளது என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தோட்டங்களில் (மரங்களில் இருந்து) உணவுப் பொருட்கள் திருடப்படுவது பெருமளவு அதிகரித்துள்ளதாகவும், பல வழக்குகள் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டபோதும் முறையான முறைப்பாடுகளாக தகவல் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், பல்பொருள் அங்காடிகள் உட்பட பல்வேறு வர்த்தக ஸ்தலங்களில் இருந்து ஆயிரக்கணக்கான உணவுப் பொருட்கள் திருடப்பட்ட சம்பவங்கள் அண்மைக்காலமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் பதிவாகியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடைகளில் உணவு பொருட்கள் திருடப்படுவது அதிகரித்துள்ளது. சமைத்த உணவுப் பொருட்கள் திருடப்பட்ட பல வழக்குகள் அண்மைய நாட்களில் பதிவாகியுள்ளன.

பணவீக்கச் சூழ்நிலை காரணமாக மூன்று வேளைக்கு பதிலாக ஒரு வேளை அல்லது அதிகபட்சம் இரண்டு வேளை உண்ணும் குடும்பங்களின் எண்ணிக்கை பத்து இலட்சமாக அதிகரித்துள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் அண்மையில் தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# ரோஹிங்கிய மக்கள்...

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம்களுக்கு எதிராக 969 அமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படும் வன்முறைகளால் ஆயிரக்கணக்கான முஸ் லிம்கள் இதுவரையில் கொல்லப்பட்டுள்ளனர். இந்த அமைப்பை வழிநடத்தும் அஸின் விராது தேரரை "பர்மாவின் பின் லேடன்" என சர்வதேச ஊடகங்கள் வர்ணிக்கின்றன.

**ஆயுத போராட்டத்தில் ரோஹிங்யா**

மியான்மர் தேசத்தில் கடந்த 2012-ம் ஆண்டு முதல் மனித உரிமைக்காக "அரக்கான் ரோஹிங்யா இரட்சணிய சேனை" (ஏ.ஆர்எஸ்ஏ) என்ற பெயரில் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த அமைப்பு, மியான்மர் ராணுவத்தினர் மற்றும் பொலிஸ் படையினர் மீது தாக்குதல் நடத்திவருகிறது.

அரக்கான் ரோஹிங்யா இரட்சணிய சேனை என்று அழைக்கப்படுவது, மியான்மரின், வடக்கு ராகினி மாநிலக் காடுகளில் செயல்படும் ரோஹிங்யா கிளர்ச்சி குழு ஆகும். சர்வதேச நெருக்கடிக் குழுவின் 2016 டிசம்பர் அறிக்கையின்படி, ஏஆர்எஸ்ஏ உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் சிட்வெவில் சிறையில் அடைக்கப்பட்ட நபர்களை விசாரணை செய்த பொலிசார் இக் குழுவின் குறிக்கோள், மியான்மரில் "ரோஹிங்கியருக்கான ஜனநாயக முஸ்லிம் அரசை" உருவாக்குவதே என்றனர்.

2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி, மியான்மரின் பயங்கரவாத எதிர்ப்புக்கான மத்திய குழுவானது, பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் படி ஏஆர்எஸ்ஏ குழுவை பயங்கரவாத அமைப்பாக அறிவித்தது. இதற்கு, ஆகஸ்ட் 28 அன்று, ஏஆர்எஸ்ஏ குழு ஒரு அறிக்கையை வெளியிட்டது, அதில் தங்களுக்கு எதிரான அரசாங்க குற்றச்சாட்டுக்களை "ஆதாரமற்றது" என்றும், தங்கள் முக்கிய நோக்கம் ரோஹிங்கியா மக்களின் உரிமையே என்றது.

**ஐ.நா. மனித உரிமைக் குழு அறிக்கை**

ஐ.நா. மனித உரிமைக் குழு அறிக்கையின்படி உயிருக்குப் பயந்து ஆயிரக்கணக்கான ரோஹிங்யா மக்கள், வங்க தேசம், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர். மிஷோரத்தில் உள்ள சிஷா பகுதியில் மியான்மர் அகதிகள், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மியான்மரில் ரோஹிங்யா மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறையைக் கட்டுப்படுத்த, ஐ.நா., தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென வங்கதேசம் பல முறை கோரிக்கை விடுத்தது. மியான்மர் விவகாரம் தொடர்பாக விவாதிக்க, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலை உடனடியாகக் கூட்ட, பிரிட்டன் கோரிக்கை விடுத்தது. மியான்மர் வன்முறையை செயற்கைக் கோள் புகைப்படங்களைக் கொண்டு தொடர்ந்து ஆராய்ந்துவருவதாக, ஐ.நா. மனித உரிமைக் குழு தெரிவித்தது.

இது தொடர்பாக ஆய்வில் ஈடுபட்ட ஐநா பிரதிநிதிகளும் மனித உரிமை ஆணைய நிர்வாகிகளுமான மார்சுகி ட்ரூஸ்மேன், ராதிகா மற்றும் கிறுஸ்டோபர் சிடோட்டி ஆகியோர், மிகப்பெரிய இன அழிவே அங்கு நடைபெற்றதாகவும், முழுக்க முழுக்க மியான்மர் இராணுவத்தின் நேரடி ஆதரவுடன் அவை நிகழ்த்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்

# டலஸ் - சஜித் கூட்டுத்தோல்வி...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மகாபாரதத்தில் சகுனிபாத்திரம் ஏற்ற பீரிஸ் தமது கட்சியின் எதிர்காலத்தை விட தமது எதிர்காலத்திலேயே அக்கறையாக இருந்தார். ரணில் ஜனாதிபதியானால் தமது அரசியலுக்கு அதுவே அந்திம காலமாக அமையுமென்பதை நன்கு அறிந்திருந்தார். தோல்விக்குப் பயந்த சஜித்தை வளைத்துப் போட்டு, டலஸ் ஜனாதிபதியானால் பிரதமர் பதவியை கையூட்டாகத் தருவதாகக் கூறி - பாவம் சஜித்தையும் டலஸோடு சேர்த்து குப்புற வீழ்த்தியுள்ளார் பீரிஸ்.

சஜித் அணியைச் சேர்ந்த பதினான்கு எம்.பிக்களும், கூட்டமைப்பின் பத்தில் ஐந்து எம்.பிக்களும் ரணிலுக்கே வாக்களித்ததாக ஹரின் பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார். இதனைமறுக்கப் போனால் தங்கள் கட்சிகள் சின்னாபின்னமாகிவிடும் என்ற அச்சத்தில் இவற்றின் தலைமைகள் மௌனம் சாதிக்கின்றன. ஹரின் பெர்னாண்டோ கூறுவதை நிரூபிக்கும் வகையில் ரணிலுக்கு 134 வாக்குகள் கிடைக்க, டலசுக்கு 82 வாக்கு கள்கிடைத்தன.

ஜி.எல்.பீரிசுக்கு இணைவாக இந்த ஜனாதிபதித் தேர்தலில் முகத்தில் கரிபூசப்பட்டமற்றவர் கூட்டமைப்பின் எம்.ஏ.சுமந்திரன் (சுமா). நல்லாட்சிக் காலத்தில் ரணில் தாசராக நன்கறியப்பட்ட சுமா,சும்மா இருக்கமுடியாமல், கூட்டமைப் பின் தலைவர் தாமே என்ற பாணியில் முதலில் சஜித்தாசராகி, பின்னர் டலஸ் தாசராகி கூட்டமைப்பை தனது சகதிக்குள் இழுத்து வீழ்த்தி, கூட்டமைப்புக்கு மக்கள் மத்தியில் அருவருப்பை ஏற்படுத்தி - இப்போது நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டுமென புதுக்கோசம் எழுப்புகிறார்.

தமது இந்தக் கோசத்தினூடாக போராட்டக்காரரின் ஆதரவை இலகுவாகப் பெற முடியுமென சுமாநினைக்கக் கூடும். போராட்டக்களம் மாறி,குரல் மாறி இளைப்பாறு காலத்துக்குப் போகும் நிலையில் இவரது கூத்தை யார் கேட்கப் போகிறார்கள். அந்த நிலையில் போராட்டக்காரர்கள் இப்போது இல்லை.

ரணிலின் வெற்றி என்பது டலஸ் - சஜித் கூட்டின் தோல்வி என்பதைவிட, பெரமுனவின் ஜி.எல்.பீரிசுக்கும், கூட்டமைப்பின் சுமந்திரனுக்கும் கிடைத்தபெரும் தோல்வி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவர்கள் முகத்தில் அழிக்க முடியாத கரியைப் பூசியுள்ளனர். தங்களை 'கிங் மேக்கர்'கள் என நினைத்த இவர்கள் இரு வரும் அடுத்த தேர்தலுக்கு முன்னரேயேஅவர்களின் மக்களால் 'கோஹோம்' பட்டியலுக்குள் இணைக்கப்படுவார்களானால் ஆச்சரியப்பட நேராது.

## இன அழிப்புக்கு...

அங்குரார்ப்பண நிகழ்வுக்கு பின்னர் ஏற்பாட்டாளர்கள் சார்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தமிழ் மக்கள் கூட்டணியின் அருந்தவபாலன் தெரிவிக்கையில்-

இலங்கையின் வடக்கு-கிழக்கிலிருந்து சூம் செயலி ஊடாகவும் நேரடியாகவும் இன அழிப்புக்கு எதிரான தமிழ்க் கூட்டமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வில் அரசியல் பிரதிநிதிகள் சிவில் சமூகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு ஆக்கபூர்வமாக கலந்துரையாடினர்.

இன அழிப்பு தொடர்பாக எங்களைப் பொறுத்தமட்டில் ஒருங்கிணைக்கப்படாத வகையில் தனித்தனியாக நாம் செயல்பட்டுக் கொண்டிருப்பது எங்கள் பக்கம் பலவீனமாக இருக்கின்றது. இந்த பலவீனத்தினால் இலங்கை அரசாங்கத்திற்கு சர்வதேச ரீதியாக வாய்ப்பை நாங்களாகவே உருவாக்கிக் கொடுக்கின்றோம். அதை உணர்ந்து அரசியல் கடந்து சகரும் ஒன்றிணைந்து செய்யக் கூடிய வகையில் அரசியல் தலைவர் சமய சமூக பிரதிநிதிகளும் ஒன்றினைந்து செயற்படக்கூடிய வகையில் எல்லோரும் இணைந்து இந்த இன அழிப்புக்கு எதிரான தமிழ்க் கூட்டமைப்பை பலப்படுத்தி செயல்பட உள்ளோம்.

எதிர்கால மனித உரிமை கூட்டத் தொடருக்கு முன்னதாக தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகள் தொடர்பாக ஒரு பட்டயத்தை வெளியீடு செய்யவிருக்கின்றோம். இந்த பட்டயம் என்பது இனப்படுகொலையை நிரூபிக்கின்ற வகையில் அதற்கு பொறுப்பு கூறச் செய்கின்ற வகையிலும் அதனூடாக இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வை காணவும் இந்த முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும்-என்றார்.

அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் அனந்தி சசிதரன், தமிழ் மக்கள் கூட்டணியின் அருந்தவபாலன், யாழ்.மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன், வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழு தலைவர் சஜீவன் உள்ளிட்ட சிலர் நேரடியாகவும் மேலும் சிலர் இணைய வழியிலாகவும் பங்கேற்றனர். (அ)

## எரிபொருள்...

ஜனாதிபதி இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

கல்வி, மீன்பிடி, சுற்றுலா, விவசாயம் மற்றும் பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் மற்றும் அரசு பேருந்துகளுக்கு வழக்கமான மற்றும் விரைவான எரிபொருள் விநியோகம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் பாடசாலைகளை ஆரம்பிக்கும்போது பாடசாலை மாணவர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

இதன்படி, நேற்று பிற்பகல் 3.00 மணி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து இ.போ.ச. டிப்போக்களிலிருந்தும் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் பஸ்கள் மற்றும் வான்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்குமாறு போக்குவரத்து அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

முன்னைய முறைமையின்படி, மீன்பிடி, சுற்றுலா, உர விநியோகம் உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகளுக்கும், பொதுப் போக்குவரத்து நடவடிக்கைகளுக்கும் இ.போ.ச. ஊடாகவும், நாடளாவிய ரீதியில் உள்ள முப்படைத் தளங்களிலும் எரிபொருளை விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பான சோதனைகளை விரிவுபடுத்துமாறும், சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் குழுக்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறும் ஜனாதிபதி பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்தார்.

அறிமுகப்படுத்தப்பட்ட கியூ.ஆர். குறியீடு முறையை விரைவாக செயல்படுத்துவது குறித்தும் விவாதிக்கப்பட்டது. எதிர்வரும் எரிபொருள் கொள்வனவு மற்றும் தேவையான நிதியை வழங்குவது தொடர்பில் ஜனாதிபதிக்கும் நிதியமைச்சு மற்றும் அரச வங்கி அதிகாரிகளுக்கும் இடையில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. (அ)

## யாழில் தனியார்...

இருவரும் கல்கமுவ சாலை இ.போ.ச சாலை ஊழியர்களினால் தலாதகம எனும் பகுதியில் வைத்து தாக்கப்பட்டனர்.

இந்த தாக்குதலை நடாத்திய ஊழியர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக்கோரி இ.போ.ச.ஊழியர்கள் இன்று காலை முதல் தனியார் பஸ்களுக்கான எரிபொருள் வழங்கலை நிறுத்தியதால் குழப்ப நிலை ஏற்பட்டது.

யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் கெங்காதரன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருடன் தொடர்பை ஏற்படுத்தி இலங்கை போக்குவரத்துச் சபை ஊழியர்களிடையே ஏற்பட்டுள்ள முரண்பாட்டுக்காக தனியார் சேவையினருக்கு எரிபொருள் வழங்க முடியாது என கூறுவதில் எந்தவித நியாயமும் இல்லை. தங்கு தடை இன்றி எரிபொருளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை வட பிராந்திய இலங்கை போக்குவரத்துச் சபையின் முகாமையாளருடன் கலந்துரையாடி மேற்கொள்ள வேண்டும்.

நேற்று மாலை வரை தனியார் பஸ்களுக்கு எரிபொருள் வழங்கப்படாமையால் பஸ் உரிமையாளர்கள் தமது பஸ்களை கோண்டாவில் சாலையில் இருந்து எடுத்துச் சென்றனர்.

இன்று அரசாங்க அதிபருடன் சந்திப்பை மேற்கொள்ளவுள்ளதாவும் தமக்கு தொடர்ச்சியாக இலங்கையை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலையில் எரிபொருள் பெறுவதில் கடும் சிரமங்கள் எதிர்நோக்குவதாகவும் பிறிதொரு இடத்தில் எரிபொருளை பெறுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் கோரிக்கை விடுக்கவுள்ளனர்-என்றார். (அ)

## போதையில்...

ஒரு பயணி பாதுகாப்பு அதிகாரி ஒருவரை எட்டி உதைத்தமையால் அவர் ரயிலில் இருந்து கீழே விழுந்துள்ளார்.

சம்பவத்தை அடுத்து, பயணிகள், மது போதையில் இருந்த பயணிகளை பிடித்து ரயில்வே பாதுகாப்புப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

வெயங்கொட பொலிஸ் பிரிவின் வந்துரவ பிரதேசத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். ரயில்வே பாதுகாப்பு அதிகாரியின் உடல் வந்துரவ ரயில் நிலையத்தில் இருந்து மீரிகம திசையில் சுமார் 100 மீற்றர் தூரத்தில் கிடந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 31 மற்றும் 23 வயதானவர்கள் எனவும் இவர்கள் நொச்சியாகம மற்றும் அனுராதபுரம் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தே நபர்கள் மீரிகம நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

சம்பவம் குறித்து வெயங்கொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (அ)

## ஆளுநர்களை...

தற்போதைய ஆளுநர்கள் பலர் எதிர்வரும் சில நாட்களில் பதவி விலக உள்ளனர்.

தென்மாகாண ஆளுநர் வில்லி கமகே ஏற்கனவே தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நெருக்கமானவர்கள் பலர் புதிய ஆளுநர்களாக நியமிக்கப்படவுள்ளதாகவும் செய்திகள் மேலும் கூறின. (அ)

# தமிழகத்திலிருந்து நிவாரண பொருட்களுடன் மற்றுமொரு கப்பல் நாட்டை வந்தடைந்தது

கொழும்பு, ஜூலை. 24

தமிழக அரசினால் வழங்கப்படும் நிவாரணப் பொருட்கள் அடங்கிய மற்றுமொரு கப்பல் நாட்டை வந்தடைந்தது.

இந்தக் கப்பலில் 74 கோடி ரூபா பெறுமதியான அரிசி, பால்மா மற்றும் அத்தியாவசிய மருந்துகள் என பல பொருட்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இரண்டு கப்பல்களில் தமிழகத்தில் இருந்து மனிதாபிமான உதவியாக அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய 2 கப்பல்கள் நாட்டுக்கு வந்திருந்தன. (அ)





# யாழ்.பல்கலைக்கழகத்தில் கறுப்பு ஜூலை நினைவு!

## வளாகத்துக்குள் புகுந்தனர் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஜூலை. 24

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நேற்றுக் காலை யாழ்.பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலில் அமைந்துள்ள தூபியில் கறுப்பு ஜூலை நினைவு தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலின் அருகே அமைந்துள்ள பிரதான கொடிக்கம்பத்தில் மாணவர்களால் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டு அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

இதனையடுத்து பல்கலைக்கழக பிரதான தூபி வளாகத்தில் கறுப்பு ஜூலை நினைவுருவப் படத்துக்கு மாணவர்களால் ஈகச் சுடரேற்றப்பட்டதோடு, மலரஞ்சலியுடன் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அத்துடன் 1983 கறுப்பு ஜூலை வாரத்தில் தமிழிர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான நினைவுரையும் இடம்பெற்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் நினைவேந்தல் நிறைவுபெறும் தருணத்தில் இரண்டு பொலிஸார் மோட்டார் சைக்கிளுடன் பிரதான வாயில் அருகே நுழைந்து நின்றனர்.

இது குறித்து கருத்து வெ;ளியிட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார், அடக்குமுறைகளின் உச்சத்தைத் தொட்ட இன்றைய கறுப்பு ஜூலை நினைவு தினத்தில் கூட பொலிஸாரின் செயற்பாடு மீண்டும் ஒடுக்குமுறையை எடுத்துக்காட்டுகின்றது.

பல்கலைக்கழகத்தற்குள் பொலிஸார் மாணவர்களை அச்சுறுத்தும் முகமாக உள்நுழைந்தமைக்கு எமது கடுமையான கண்டனத்தை தெரிவிக்கின்றோம்-என்றார். (அ)

## இரு...

குழுக்கள் இந்த புதிய அமைச்சரவையில் சேர்க்கப்பட உள்ளன.

அதற்காக எதிர்காலத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்தக் கட்சிகளையும் குழுக்களையும் அழைப்பார் என அறியப்படுகின்றது.

புதிய அமைச்சரவையில் 20 முதல் 37 அமைச்சர்கள் இருப்பார்கள். அதே எண்ணிக்கையிலான அமைச்சர்கள் இராஜாங்க அமைச்சர்களாக நியமிக்கப்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய பிரதமராக தினேஷ் குணவர்தன பதவிப் பிரமாணம் செய்து கொண்டதையடுத்து, முன்னாள் அமைச்சரவை இடைக்கால அமைச்சரவையாக நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதுடன், நிரந்தரமாக்கும்போது அமைச்சர்களும் மாறுவர் என தெரிவிக்கப்படுகின்றது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## திட்டமிட்டவாறு...

கும் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட பணிப்புரையின் பிரகாரம் 19.07.2022 அன்று வெளியிடப்பட்ட செய்திக் குறிப்புக்கு அமைய பாடசாலைகள் இடம்பெறும்.

அரசு மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் திங்கள், செவ்வாய் மற்றும் வியாழன் ஆகிய நாள்களில் பாடசாலைகள் மறு அறிவிப்பு வரும் வரை இடம்பெறும்.

புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் மாணவர்கள் வீட்டிலிருந்து கற்றலில் ஈடுபட அனுமதிக்கப்படும்.

அல்லது இணையவழிக் கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்துள்ளோம் - என்றுள்ளது. (அ)

## சட்ட...

ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற்றியமை தொடர்பான விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரச பொது சொத்தான கட்டடங்களுக்குள் பலவந்தமாக நுழைந்து அங்கு தங்கியிருக்க முடியாது. எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட காலிமுகத்திடலில் முழுமையான சுதந்திரம் வழங்கப்பட்டிருந்தது.

அந்த இடத்திற்கு சென்று பொலிஸார் போராட்டத்திற்கு எந்த தடைகளையும் ஏற்படுத்தவில்லை.

ஜனாதிபதி செயலகத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காக அதற்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருந்த சில தற்காலிக கூடாரங்களை அப்புறப்படுத்த நேரிட்டது எனவும் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu

# அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றின் விலை குறையும்?



கொழும்பு, ஜூலை. 24

எதிர்காலத்தில் சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

திறந்த கணக்குகள் மூலம் அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சந்தையில் பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை எனவும் அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற இ.போ.ச. சாரதி, நடத்துநர் மீது தாக்குதல்!

கொழும்பு, ஜூலை. 24

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாண சாலையிலிருந்து பயணிகளுடன் கொழும்பு சென்ற பஸ் வழிமறிக்கப்பட்டு சாரதியும், நடத்துநரும் தாக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றியபடி கொழும்புக்கு சென்ற பஸ்ஸை இடைமறித்து, அனுராதபுரம் - கல்கமுவ - கொழும்பு சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்ஸின் சாரதி, நடத்துநரே தாக்குதலில் ஈடுபட்டனர்.

பயணிகளை ஏற்றுவது தொடர்பான முரண்பாட்டிலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கல்கமுவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்களை கைது செய்ய வலியுறுத்தி, யாழ்ப்பாணம் கோண்டாவில் இ.போ.ச சாலையில் தனியாருக்கு எரிபொருள் வழங்குவதை இ.போ.ச ஊழியர்கள் இடைநிறுத்தியுள்ளனர்.

உடனடியாக தாக்குதல்தாரிகள் கைது செய்யப்படாவிட்டால், பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (அ)

# வாக்குக்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 10 முதல் 15 கோடி ரூபாவை வழங்கினார் ரணில்

## ராஜித சேனாரத்ன எம்.பி. தகவல்

கொழும்பு, ஜூலை. 24

பாராளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியை தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் வெற்றிபெற ரணில் விக்ரமசிங்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தலா 10 கோடி ரூபா முதல் 15 கோடி ரூபாவை வழங்கியதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனா ரத்ன தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முட்டாள்களை நன்கு பயன்படுத்திக் கொள்வார் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியை தெரிவு செய்வது தொடர்பான விடயத்தில் நாங்கள் கட்சித்தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தினோம். ஆனால், ரணில் விக்ரமசிங்க தரப்பினர் தனித்தனியாக பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பணத்தை வழங்குவது, எரிந்து போன வீட்டுக்கு பதிலாக வீடு, அவற்றுக்கு இழப்பீடு வழங்குவது, கார்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம், இரண்டு ஆண்டு காப்பீடு போன்றவற்றை அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேசினர்.

பெருந்தொகையான பணம் பரிமாறப்பட்டது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை சேர்ந்த எங்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய 15 பேரை கொண்ட பாராளுமன்ற குழுவினரும் எங்களிடம் பணத்தை கோரினர்.

டலஸ் அழகப்பெருமவை நாங்கள் ஆதரிக்கின்றோம், எங்களுக்கு எவ்வளவு பணம் தருவீர்கள் என கேட்டனர். இது பற்றி நான் சஜித் திடம் பேசினேன், ஐந்து சதம் கூட வழங்கக் கூடாது என அவர் சொன்னார்.

அதனை நான் நூற்றுக்கு நூறு வீதம் ஏற்றுக்கொள்கிறேன்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இவர்கள் வாக்களிக்க 10 முதல் 15 கோடி ரூபா வரை பெற்றனர் என்று எனக்கு தகவல் கிடைத்தது.

சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து இன்னும் பலவற்றை கற்றுக்கொள்ள வேண்டும். சஜித் பிரேமதாஸ முதிர்ச்சியான அரசியல்வாதியாக மாறி வருகிறார். அவர் மிக நேர்மையானவர் என்பதுடன் அப்பாவி - என்றார். (அ)

# மரண அறிவித்தல்

மலர்வு 11 - 05 - 1941



உதிர்வு 22 - 07 - 2022

## ஆழ்வார் செல்லத்துரை

(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர்)

வடமராட்சி நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், முடக்காடு வீதி, சாமியன் அரசடியை வதிவிடமாகவும் கொண்ட ஆழ்வார் செல்லத்துரை அவர்கள் 22.07.2022 வெள்ளிக்கிழமை அன்று வராத்துப்பளை புலோலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார் தெய்வானை தம்பதிகளின் மூத்த மகனும், சிதம்பரப்பிள்ளை லட்சுமி தம்பதிகளின் மருமகனும்,காலஞ்சென்ற செல்லத்துரை யோகம் அவர்களின் அன்புக் கணவரும், இளம்பிறைநாதன்(யாழ்.மாநகரசபை), பிரணவநாதன்(இலங்கை நிர்வாக சேவை), சத்தியபாமா(லண்டன்), சசிகலா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,திருமகள்(இலங்கை), கிருஸ்ணராசா (லண்டன்), சிந்துஜா(ஆசிரியை), பிரபாகரன் (பிரகாஷ்– சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனா ரும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இராசதுரை, சிவஞானம், இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும்கந்தசாமி (சட்டத்தரணி), சின்னம்மா, திலகவதி, லட்சுமி, பார்வதி, காலஞ்சென்ற அம்மா ஆகியோரின் மைத்துனரும்,திலோத்தமா, சங்கனி, ஆசினி, ஹரீஸ், துளசி, அவ்வை, கல்கி, துஷா, அகிர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியை 22.07.2022 வெள்ளிக்கிழமை அன்று பி.ப 3:00 மணியளவில் வராத்துப்பளை புலோலியில் அமைந்துள்ள அவரது மகனது இல்லத்தில் நடைபெற்று பின்னர் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**சத்தியபாமா - மகள்**

தொடர்புகளுக்கு:–
**இளம்பிறைநாதன் - மகன்** Mobile : +94778382096
**சத்தியபாமா - மகள்**
Mobile : +442036016036 Phone : +447466522787
**பிரணவநாதன் - மகன்** Mobile : +94772086789
**சசிகலா - மகள்**
Mobile : +41779661208 Phone : +41326311210

# ஓராண்டு நினைவுப்பகிர்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மஹேஸ்வரலஹரி நூல் வெளியீடும்



பிலவ வருடம் வைகாசி பூர்வபக்ஷ திரியோதசியில் ஸ்வர்க்கிய ஸ்ரீ ஆகிவிட்ட எங்கள் குடும்பத்தலைவர் **சிவஸ்ரீ ஐ.மஹேஸ்வரக்** குருக்களின் ஓராண்டு குறித்து நினைவுப் பகிரலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் நூல் வெளியீடும் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய கல்யாண அன்னதான மண்டபத்தில் நாளை (24.07.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை நடைபெறும்.தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறும்.

## நிகழ்வுகள்

முற்பகல் 9.30 மணிக்கு குருக்கள் ஐயாவின் திருவுருவப்படம் அம்பாள் வாசலிலிருந்து வெளிவீதி வழியாக மண்டபத்தை அடைதல்.

- அகண்ட மோக்ஷ விளக்கேற்றல்
- ஸ்ரீருத்திர வேதபாராயணம்
- திருமுறைபாராயணம்
- அஞ்சலி உரைகள்
- மஹேஸ்வர லகரி நூல் வெளியீடு
- சமாராதனை (மதிய போசனம்)

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று எமது குடும்பத்தலைவரின் ஆத்மா ஸ்வர்க்க லோக பிராப்தியடைய வேண்டியும் இந் நிகழ்வில் பங்கு பற்றுமாறும் தங்களை பணிவன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் கோவில்,
சுதுமலை, மானிப்பாய்.
நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு

ஸ்வர்க்கிய ஸ்ரீ
ஐ.மஹேஸ்வரக் குருக்களின்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி ஜெயராணி செபஸ்தியாம்பிள்ளை (மம்மி)



பிறப்பு 20 - 01 - 1945

இறப்பு 22 - 07 - 2022

யாழ். பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும், வவுனியா பூவரசன்குளம், இத்தாலி Milan ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட ஜெயராணி செபஸ்தியாம்பிள்ளை நேற்றுமுன்தினம் 22-07-2022 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற வோஷிங்ரன் சொலொமன் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும்,சாம் சொலொமன் அவர்களின் அன்புச் சகோதரியும்,காலஞ்சென்ற செபஸ்தியாம்பிளை (ஆசிரியர் பூவரசங்குளம்) அவர்களின் அன்பு மனைவியும்,குணாளன் (நோர்வே), தயாளன் (இத்தாலி), சியாமளா (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,கீத்தா, சுதா, மோகன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,திவ்யா– செல்சியென் சிவநாத், சோபியா, திஷோன், அஞ்சலினா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

*திருப்பலி :*
Saturday, 30 Jul 2022 11:00 AM
Church of Saint Joseph 'dei Morenti' Via Bernardo Celentano, 12, 20132 Milano MI, Italy
*நல்லடக்கம் :*
Saturday, 30 Jul 2022 12:00 PM
Cimitero Vecchio Viale Lombardia, 20861 Brugherio MB, Italy.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:–
**குணாளன் - மகன்** - Mobile : +4798235120
**தயாளன் - மகன்** - Mobile : +393381203745
**சியா - மகள்** - Mobile : +393351452803
**மோகன் - மருமகன்** - Mobile : +393383922042

தகவல்:
**மோகன் - மருமகன்**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

பகல்

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-திருமலை
04.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்




இரவு

07.00 மணி : SPOTLIGHT- தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :டான் பட்டிமன்றம்
10.00 மணி:-நேர்கொண்ட பார்வை

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உடைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு துங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு